தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

50 ஆண்டுகள்

1937 - 1987

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

50 ஆண்டுகள்

(1937-1987)

814/89

பதிப்பு:

திரு. சி.கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

செயலாளர், சட்டமன்றப் பேரவை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

சென்னை - 600 009.

1989

டாக்டர் மு. சாத்தையா
என்கிற
தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பி.எச்.டி.,
பேரவைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 29-4-1989

814/89



ஆங்கிலவர் நாட்டாட்சி கொண்டா ரேனும்
ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத் தேழில்
பாங்குடைய பார்மன்ற மக்க ளாட்சி
பயில்வதற்கு வகைசெய்தார்; ஐந்து பத்துத்
தீங்ககன்ற ஆண்டுகளில் மரபு பேண,
திறம்விளங்க, நெறிமிளிர முன்னோர் பல்லோர்
ஆங்கமைந்த சட்டமன்றின் பொன்வி ழாவை
அகமகிழ்ந்து கொண்டாடும் வேளை இஃதே!

மூதறிஞர் இராசாசி காம ராசர்
முறையுடைய ஓ.பி. ஆர்., குமார சாமி
தீதகன்ற நெஞ்சத்தார் அறிஞர் அண்ணா
திரளான மக்கள் அன்பர் ம.கோ. ராவும்
ஏதமின்றி முதலமைச்சாய்த் தொடர்ந்து வந்த
எழிற்காட்சி எல்லாமும் மனத்தி லாடும்;
ஆதவன்தன் ஆட்சியினை நிலைநி றுத்தும்
ஆற்றல்மிகு கலைஞரின்று முதல்வ ராவார்;

இத்தகையோர் ஆட்சிசெய்த காலந் தன்னில்
எண்ணற்ற உறுப்பினர்கள் மக்க ளாலே
முத்திரைகள் பெற்றவராய் இங்கே வந்து
முயற்சியிலும் உரையினிலும் பிறபண் பாலும்
இத்தரையோர் போற்றும்வகை வினைபு ரிந்தார்;
என்றாலும் ஈரேழாம் ஆண்டின் மேலும்
பெற்றுவரும் மாண்பினரை, முன்னாள் சட்ட
உயரரங்கத் தலைவர்களைச் சிறப்பிக் கின்றோம்.

பொது நிலையில் சட்டமன்றம் ஐம்ப தாண்டுப்
பொன்விழாவைக் காணுகின்ற வேளை தன்னில்
பொதுவாழ்வின் பொன்விழாவைக் கண்டு தேர்ந்த
போற்றுதற்காம் கலைஞரவர் முதல்வ ராவார்;
இதுதான்நாம் எண்ணிமகிழ் பொருத்த மென்பேன்
எண்ணற்ற கட்சிகளாய் இயங்கினாலும்
பொதுநோக்கில் ஒருங்கிணைந்து பணிகள் செய்வோம்;
பொங்கிவரும் மகிழ்ச்சிதனைப் பங்கு செய்வோம்!

பயன்களை மக்க ளெல்லாம்
பகிர்ந்திவண் வாழு தற்கும்
உயர்தர மரபு பேண
ஒழுங்குகள் நிலைபெ றற்கும்
அயர்விலா உழைப்பால் நாட்டின்
ஆக்கமும் பெருகு தற்கும்
வியர்வையை உழைப்பை ஈய
விருப்புடன் சூளு ரைப்போம்!

மு. கருணாநிதி

முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 28-4-1989



தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு வயது இன்று ஐம்பத்திரண்டு. பல சூழ்நிலைகளால் பொன்விழாவைத் தாமதமாகக் கொண்டாடு கிறோம். எத்தனைக் காலம் கடந்தாலும் பொன்; பொன்தானே!

அரசு அமைப்பு முறையில் நாம் அனுபவம் பெற நமக்கு வாய்ப்பு அளித்தது இந்தப் பேரவை! நாட்டு நலனில் அக்கறையுடன் உழைத்த தியாகச் செம்மல்களும் பெருமக்களும் இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கும் பொறுப்பை ஏற்றனர்.

மக்களாட்சி முறைக்கு நம் நாட்டு மண், பண்டைய காலத்திலிருந்து பண்பட்டிருந்தாலும், இருபதாம் நூற்றாண்டில் ‘மக்களாட்சி முறை’ துளிர்விட நம்மை ஆதிக்கம் செலுத்திய அந்நிய ஆட்சியினரும் கூட நமக்குத் துணை நின்றனர்.

மக்களாட்சி முறை மலர்ந்திடத் துணை நின்றோர் - தொண்டாற்றி யோர் - பாடுபட்ட பெருமக்கள் அனைவரையும் இந்தத் தருணத்தில் நன்றி யுடன் நினைவு கொள்வோம்.

அரசியல், பொருளாதார, சமுதாய நீதி தழைத்தோங்கிட எல்லா மக்களும் எல்லாம் பெற்றிட உழைத்த உத்தமத் தலைவர்கள், இந்தப் பேரவையின் பெருமையைக் கட்டிக்காத்த சான்றோர்கள் ஆவார்கள். அவர்களின் அரிய தொண்டினை நினைவு கொள்வோம்!

முன்பு ஒரு முறை ...

சட்டப் பேரவையில் இந்தியத் திருநாட்டு விடுதலையின் வெள்ளி விழா கொண்டாடிய பொழுது சொன்னேன்:

‘‘இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட
விழுப்புண் பெற்றோர் -
விழிகளை இழந்தோர்
உயிரினைத் தந்தோர்
உடமைகள் பறி கொடுத்தோர்
சிறை வாழ்ந்தோர் -
செக்கிழுத்தோர்
கஞ்சிக்கலயம் ஏந்தியோர்
கல்லறையாக மாறினோர்
துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர்
தூக்குக் கயிறை முத்தமிட்டோர்

அனைவரது காலடியிலும் அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகின்றோம்.’’

அதனை மீண்டும் நினைவூட்டி -
இந்த மன்றத்தின் பெருமைக்கு வித்தாகி நின்ற
நீதிக் கட்சித் தலைவர்கள்
காங்கிரஸ் கட்சித் தலைவர்கள்
மூதறிஞர் ராஜாஜி
பெருந்தலைவர் காமராஜர்
பேரறிஞர் அண்ணா
போன்ற தலைவர்கள் காட்டிய வழி நின்று
மக்களாட்சி முறையின்
மாண்புதனைக் காப்பாற்றிட
பேரவையின் பெரும் பணி தொடர
அனைவரும் பாடுபடுவோம்!

சட்டப் பேரவை பொன் விழா உறுதிமொழியாக இதனை ஏற்போம்.

க. அன்பழகன்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 28-4-1989



தமிழ்நாடு - சட்டமன்றப் பேரவையின் பொன் விழாவினைக் கொண்டாடும் வாய்ப்பினைப் பெற்றிருப் பதை எண்ணி மகிழ்கின்றேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1957 ஆம் ஆண்டு முதல் - இடையில் சட்டமன்ற மேலவையில் ஐந்தாண்டும், நாடாளுமன்றத்தில் நான்காண்டும் ஆக ஒன்பதாண்டுகள் தவிர்த்து - ஆறு முறை தேர்ந்தெடுக்கப் பெற்று உறுப்பினராக - இடம் பெற்றவன் என்பதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

1937-இல் மதராஸ் மாகாணச் சட்டமன்றம், சட்டமன்ற மேலவையாகவும் - வாக்குரிமை பெற்ற வயது வந்த அனைத்து மக்களாலும் நேரிடையாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட சட்டமன்றப் பேரவையாகவும் செயற்படும் முறை பிறந்தது.

1947-இல் நாடு விடுதலை பெற்று, அரசமைப்புச் சட்டம் உருவாக்கம் நடைபெற்று - மாநில உரிமைகள் என்னும் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, இறையாண்மையுடைய மன்றமாக நம்முடைய சட்டமன்றம் இயங்கலாயிற்று.

1956-இல் தமிழ் மொழி பேசும் மாநிலம் உருவாயிற்று. அதன் பின்னர் 1957 முதல், சென்னை மாநிலச் சட்டப் பேரவையாக நடைபோட்டு, 1967-இல் அறிஞர் அண்ணா முதலமைச்சராக அமர்ந்த காலத்தில் - சென்னை மாநிலம், தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்ட பின்னர் - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை என்னும் பெயருக்குரித்தாயிற்று நமது மன்றம்.

மக்களாட்சி முறையின் காவல் அமைப்பாக உள்ள சட்டப் பேரவை - மக்களாட்சி முறையின் மதிப்பைக் காக்கவும் வளர்க்கவும் கடமையுடையது. அந்த வகையில் தமிழ்நாடு சட்டப் பேரவை பலவகையிலும் எடுத்துக்காட்டாக விளங்கிய பெருமையுடையது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே அறிவிற் சிறந்த தலைவர்கள் பலர் அக்காலத்திய சட்டமன்றத்தில் - (Legislative Council) இடம் பெற்றுத் திறம்பட பணியாற்றியதும் - மதராஸ் மாகாணத்தில் தொன்றுதொட்டு நிலவிய பண்பாடுமிக்க நாகரிகத்தின் வலிவாலும் - அறிவார்ந்த கருத்து விளக்க விவாதங்கள் சட்டமன்றத்திலும் பின்னர் பேரவையிலும் இடம் பெறலாயின.

மக்களாட்சி முறைக்கு இன்றியமையாத தட்பவெப்பம் ஏற்படுத்தும் மாற்றாரை மதிக்கும் மனப் பான்மை கால்கொண்டிருந்தது.

மேலும் மக்களின் மதிப்பைப் பெற்றிருந்த தலைவர்கள் பலர் முதல்வராக விளங்கியதும் - சட்டப் பேரவைக்குப் பெருமை சேர்த்தன. மூதறிஞர் இராஜாஜி, உத்தமர் ஓமந்தூரார், கருமவீரர் காமராசர், அறிஞர் பெருந்தகை அண்ணா ஆகியோர் அமர்ந்திருந்த காலம், பேரவை வரலாற்றில் சிறப்புடையதன்றோ! அவர்களைத் தொடர்ந்து அறிவு ஆற்றல் மிக்க கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் - மக்களின் பேரன்பில் திளைத்த எம்.ஜி.ஆரும், பேரவையில் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கினால் - பேரவையின் பெருமையைக் காத்தனர் எனலாம்.

அப்படிப்பட்ட பேரவையில் - நான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பல்வேறு துறைகளின் நிருவாகம் குறித்த குறைகளைச் சுட்டி வாதாட வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். ஆளுங்கட்சியில் அமைச்சராகப் பொறுப்பேற்று - மாற்றுக் கட்சியினர் சுட்டிக் காட்டும் குறைகளைக் கேட்டு, விளக்கம் கூறவும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். அதுவும் இருநிலையிலும் மாறி, மாறி இடம் பெற்றிருப்பது - மக்களாட்சி முறையின் தனித் தகவினை உணர எனக்குற்ற நல்வாய்ப்பு என்பேன்.

சட்டப் பேரவையில் சிலபல நேரங்களில் வரம்பு மீறிய சொற்களும், செயல்களும் இடம் பெற்று விடுகின்றன என்பது கண்டு - மக்களாட்சியில் சட்டப் பேரவையின் இன்றியமை யாமையைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. பேரவைக்கு வெளியில் வளரும் சூடு கொதிப்பு வெறுப்பு ஆகியவை, சில வேளைகளில் பேரவைக்குள் அலை எனப் புகுந்துவிடுகிறது. ஆனால் பேரவையில் பேசப்படுவதால்தான், வெளியுலகில் மாறுபட்டவரிடையே வளரும் வெப்பமும், வெறுப்புங்கூட - மேலும் கடுமையாகப் பரவாமல் - மெல்ல அமைதி வழிப்படுகின்றது எனலாம்.

எனவேதான், மக்களிடையே நிலவும் நம்பிக்கை குன்றாதவாறு சட்டப் பேரவையின் ‘கண்ணியம்’ காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமிருக்கவில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை சோதனைகள் பலவற்றுக்கு ஆட்பட்டிருப்பினும், அதன் மரபு வழியினால், பெருமளவு கண்ணியம் காத்திடும் அமைப்பாக விளங்குகிறது எனலாம்.

மாண்புமிகு உறுப்பினர்களின் உயர்நோக்கத்தாலும், மற்றவர்களை - குறிப்பாக மாற்றுக் கட்சியினரை மதிக்கும் மனப்பான்மையாலும், நல்லெண்ணம் பரப்பும் பாங்குடையதாக விளங்குகிறது என்பதே என் எண்ணம்.

மக்களாட்சி தழைக்கவும், மக்கள் உரிமையும் வாழ்க்கை நிலையும் உயர்ந்திடச் செய்யவும் வழிகாணும் களமாக உள்ள சட்டப்பேரவை - பொன்விழாவைத் தொடர்ந்து வரக்கூடிய பல விழாக்களையும் காணட்டும்! - அதன் அமைப்பும் பணியும் தொடரட்டும்! அதன் மாண்புகள் நிலைக்கட்டும்! என்று விரும்பி - வாழ்த்துரைக்கின்றேன்.

க. அன்பழகன்
29-4-89.

முகவுரை

53-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை படைத்துள்ள வரலாறு பெருமிதத்திற்குரியது. 1987-ஆம் ஆண்டில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை, சிறப்புமிக்க பல்வேறு பணிகளை ஆற்றி வந் துள்ளது. குறிப்பாகவும் சிறப்பாகவும், பொருளாதார மற்றும் சமூகக் கோணங்களில் பல முன்னோடித் திட்டங்களையும் சட்டங் களையும் உருவாக்கி, இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. இத்தகைய சிறப்புக்குரிய பேரவையின் பொன்விழா வைபவத்தையொட்டி இம்மலர் வெளிவருவது, மகிழ்ச்சிக்குரிய தாகும்.

''தாய்ப் பாராளுமன்றம்'' என்று அழைக்கப்படுவது இங்கிலாந் தின் பாராளுமன்றமாகும். இந்தியாவில் முதன்முதலாகப் பாராளு மன்ற முறை ஆங்கிலேயராலேயே புகுத்தப்பட்டது. அம்முறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நம் நாட்டில் வளர்ந்து கூட்டாட்சி முறையாக மலர்ந்து பின்னர் ஒரு புதிய அர சியல் சட்டம் இந்திய மக்களால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் நிலவி வந்த பஞ்சாயத்து முறைகளின் கூறுகளில் பல இன்றையப் பாராளுமன்ற ஜனநாயகக் கோட்பாடுகளில் பிரதிபலிக்கின்றன என்று குறிப்பிடுவது மிகை யாகாது. எடுத்துக்காட்டாக, தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதற்காகக் கடைப்பிடித்து வந்த ''குடவோலை முறை'' யைக் கூறலாம்.

சட்டமன்றம் தோன்றிய வரலாறு, பேரவைத் தலைவர் பற்றிய சிறு குறிப்பு, அவைக்குள் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், மரபுகள் ஆகியவற்றைத் தாங்கி இம் மலர் வெளி வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தற்போது இயங்கி வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டை குறித்த செய்திகளும், பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி ஆகியோர் ஆற்றிய தலை சிறந்த உரை களும் இதில் இடம் பெற்றுள்ளன. மேலும், பேரவையில் இது காறும் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் கண்ணோட்டமும், பேரவையின் பணிகளுக்குப் பொறுப்பாக விளங்கியவர்கள் மற்றும் பங்குபெற்றவர்கள் ஆகியோர் பற்றிய விவரங்களும், வினாக்கள், முக்கிய சட்டமுன்வடிவுகள், ஏனைய அலுவல்கள் குறித்த புள்ளி விவரங்களும் இந்நூலில் தரப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுக் கால சட்டமன்றப் பேரவையின் வரலாற்று நிகழ்ச்சிகளையொட்டிய முக் கியமான பல தகவல்களையும், குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூல் அனைவரும் படித்தின்புறவும் ஆதாரக் குறிப்பு மற்றும் ஆராய்ச்சி (Reference and Research) போன்ற பணி களுக்கு எதிர்காலத்தில் எளிதாகப் பயன்தரவும் பெரிதும் உதவிடும் என்று நம்புகிறேன்.

சென்னை-9
2-5-1989.

சி.கு. இராமசாமி
செயலாளர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உள்ளடக்கம்

முன்னுரை

வாழ்த்துச் செய்திகள்

முகவுரை

1. சட்டமன்ற வரலாறு. 1

2. பேரவைத் தலைவர் - ஒரு சிறு குறிப்பு. 4

3. உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள். 6

4. சட்டமன்றப் பேரவை - முக்கிய நிகழ்வுகள் 9

(அ) 1937-ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை

(ஆ) முதலாவது சட்டமன்றப் பேரவை (1952-1957)

(இ) இரண்டாவது சட்டமன்றப் பேரவை (1957-1961)

(ஈ) மூன்றாவது சட்டமன்றப் பேரவை (1962-1967)

(உ) நான்காவது சட்டமன்றப் பேரவை (1967-1971)

(ஊ) ஐந்தாவது சட்டமன்றப் பேரவை (1971-1976)

(எ) ஆறாவது மற்றும் ஏழாவது சட்டமன்றப் பேரவைகள் (1977-1980) மற்றும் (1980-1984)

(ஏ) எட்டாவது சட்டமன்றப் பேரவை (1985-1988)

(ஐ) ''தமிழ்நாடு'' என்று மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கும் தீர்மானத்தின் மீது 18-7-1967ஆம் நாளன்று அன்றைய முதல் அமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரை. 18

(ஒ) ''மாநில சுயாட்சி'' பற்றிய அரசினர் தனித் தீர்மானத்தை 16-4-1974-ஆம் நாளன்று முன்மொழிந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை. 20

5. சட்டமன்ற மேலவையின் தோற்றமும் வளர்ச்சியும் 24
6. புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாறு. 28
7. சட்டமன்றப் பேரவை மண்டபம். 30
இணைப்புகள்: 31
(அ) சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர்கள் பற்றி ஒரு கண்ணோட்டம்
(ஆ) தமிழ்நாடு ஆளுநர்கள்.
(இ) தமிழ்நாடு முதலமைச்சர்கள்.
(ஈ) சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள்
(உ) சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர்கள்.
(ஊ) சட்டமன்றப் பேரவைச் செயலாளர்கள்.
(எ) தமிழ்நாடு அமைச்சரவைகள்.
(ஏ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்
(ஐ) தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்ற காலங்கள்.

வண்ணப்படங்கள்:
திரு. ஏ. இராசரத்தினம் தமிழ்நாடு சுற்றுலாத்துறை

1. இந்திய சட்டமன்ற வரலாறு

நம் நாட்டில் தற்போது இயங்கிவரும் சட்டமன்ற முறை ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட காலத்தில் துவங்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சி இந்நாட்டில் துவங்கிய காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய பகுதிகளை தம் ஆளுகைக்குள் உட்படுத்தியிருந்தனர். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1773-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஒழுங்கு முறை சட்டப்படி கல்கத்தாவில் ஒரு கவர்னர் ஜெனரல் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஆலோசனை தரும்பொருட்டு ஒரு நிர்வாக சபை அமைக்கப்பட்டது. அந்தச் சபையின் அதிகாரத்திற்கு பம்பாய், சென்னை ஆகிய பகுதிகளும் உட்படுத்தப்பட்டன. அப்போது சட்டம் இயற்றும் அதிகாரம் அந்தச் சபைக்கு கிடையாது. 1791-ஆம் ஆண்டில்தான் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. அவ்விதம் அவர்கள் இயற்றிய சட்டங்கள் ஒழுங்கு முறை விதிகள் என பெயர் பெற்றன. இந்த அதிகாரம் கல்கத்தாவில் இயங்கிய கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபைக்கே கொடுக்கப்பட்டது. பின், சில ஆண்டுகள் கழித்து மாகாண நிர்வாக சபைகளுக்கும் இந்த அதிகாரம் வழங்கப்பட்டது. அப்போது சட்டங்கள் இயற்றுவதற்குத் தனி சட்டசபைகள் இல்லை. நிர்வாக சபைகளே சட்டங்களை இயற்றின.

இந்திய நாட்டுச் சட்டமன்றங்களின் தொடக்கம் 1833-ஆம் ஆண்டில் ஆரம்பமாகிறது. அவ்வாண்டில் இயற்றப்பட்ட சாசன சட்டப்படி கவர்னர் ஜெனரல் பேரவைக்கு, சட்டம் இயற்றும் பணிக்காக ஒரு உறுப்பினர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சென்னையிலும் வேறு மாகாணங்களிலும் செயல்பட்டு வந்த கவர்னர் பேரவைகள் அதுகாறும் கொண்டிருந்த சட்டம் இயற்றும் அதிகாரம், அச்சட்டத்தால் பறிக்கப்பட்டு சட்டம் இயற்றும் அதிகாரம் முழுமையும் கவர்னர் ஜெனரல் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது மாகாணங்களில் ஆட்சிபுரிந்த அரசுகள் 'மாகாண அரசுகள்' என அழைக்கப்பட்டன. அதற்கு முன்பு அவைகள் சட்டங்களையும் ஒழுங்குமுறை விதிகளையும் தாமே இயற்றி வந்தன. மேற்குறிப்பிட்ட சாசனச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் அம்மாகாண அரசுகள் தாம் கருதுகின்ற சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறை விதிகளின் வரைவுகளை, கவர்னர் ஜெனரல் பேரவைக்கு, அவைகளை நிறைவேற்றும் பொருட்டு அனுப்பி வைக்கவேண்டும். சட்டம் இயற்றும் அதிகாரம் நிர்வாக அதிகாரத்தின் ஒரு அங்கமாகவே அப்போது இருந்தது.

1853-ஆம் ஆண்டு ஒரு சாசனச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் நம் நாட்டு சட்டமன்றங்களின் வளர்ச்சியில் மற்றும் ஒருபடியாகும். கவர்னர் ஜெனரலின் நிர்வாகசபை, சட்டம் இயற்றும் நேரத்தில் அதற்கு உதவும் பொருட்டு ஆறு சிறப்பு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ள வழிவகுக்கப்பட்டது. அவர்களாவர் - வங்காள உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி; மற்றும் ஒரு உச்சநீதிமன்ற நீதிபதி; கல்கத்தா, சென்னை, பம்பாய் வடமேற்கு மாகாணம் இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதிநிதியும் ஆவர்.

இவ்வாறு சட்டம் இயற்றுவதற்காக கவர்னர் ஜெனரலால் உறுப்பினர் தொகை அதிகரிக்கப்பட்ட நிர்வாக சபையே இந்தியாவின் முதல் சட்டசபை என்று கூறலாம். இச்சபையின் நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெற்றன. அரசு காரியங்களைப்பற்றி நிர்வாக உறுப்பினர்களைச் சட்ட உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கவும் விவாதங்கள் நடத்தவும் தொடங்கினர்.

1861-ஆம் ஆண்டு இந்திய சட்டமன்றங்களின் சட்டம் இயற்றப்பட்டது. சட்டமன்றங்கள் வரலாற்றில் இந்த ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகும். இச்சட்டம் முதன்முறையாக, கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையுடனும், சென்னை பம்பாய் கவர்னர்களின் நிர்வாக சபைகளுடனும் சட்டம் இயற்றும்பொருட்டு கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்க்க வகை செய்தது. இங்ஙனம் கூடுதலாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் பாதிப்பேர் அரசு அலுவல் சார்பற்றவர்கள். கவர்னர் ஜெனரல் தம் நிர்வாக சபைக்கு இவ்விதம் 12-க்கு மேற்படாத உறுப்பினர்களை நியமிக்கலாம். இச்சட்டமன்றங்கள், சட்டம் இயற்றும் அலுவல்களை மட்டும் கவனிக்கும் வகையில் இவற்றின் அலுவல்கள் வரையறுக்கப்பட்டன. அதாவது சட்ட உறுப்பினர்கள் நிர்வாகத்தினரைக் கேள்விகள் கேட்கவும், அவர்கள் செயல்கள் பற்றி விவாதிக்கவும் கூடாது என தடுக்கப்பட்டனர். சென்னை கவர்னரின் பேரவைக்கு, சட்டம் இயற்றும் அதிகாரத்தை, இச்சட்டம் மீண்டும் வழங்கியது.

சென்னை மாநில கவர்னரின் பேரவையில் அரசு தலைமை வழக்கறிஞரும், கவர்னரால் நியமிக்கப்பெற்ற 4 முதல் 8 வரையிலான உறுப்பினர்கள் இடம் பெற்றனர். நியமன உறுப்பினர்கள் பத்துப்பேர் அரசு அலுவல் சார்பற்றவர்கள். சட்டமன்றமானது நிர்வாக சபையிலிருந்து தனியே பிரிந்து தனித்து இயங்கும் ஒரு அமைப்பாக இயங்குவதற்கு இச்சட்டம் வித்திட்டது எனலாம். நடைமுறையில் இச்சபைகள் ஆலோசனை குழுக்களாகவே இயங்கின. அரசு அவற்றைப் பயன்படுத்தித் தமது சட்டம் இயற்றும் பணிக்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றன.

1892-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சட்டமன்றங்கள் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் மத்திய சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 16 ஆகவும், சென்னை சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 20 ஆகவும் உயர்த்தப்பட்டது. இதில் 9 பேர்களுக்கு மேற்படாமல் அதிகாரிகளை நியமிக்கலாம். உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் கவர்னருக்குத் தரப்பட்டது. ஆனால் அவர் இதுகுறித்து கவர்னர் ஜெனரலால் இயற்றப்பட்ட விதிகளுக்கு இணங்கத் தான் உறுப்பினர்களை நியமிக்கலாம். மாவட்டக் குழுக்கள், பல்கலைக் கழகங்கள், நகராட்சிகள், மற்றும் பிற சங்கங்கள் பரிந்துரைத்த அரசு சார்பற்ற உறுப்பினர்களை கவர்னர் இச்சபைக்கு உறுப்பினர்களாக நியமிப்பார். இம்முறை நாளடைவில் தேர்தல் முறையாக மாறியது.

இவ்வாறு அமைக்கப்பட்ட சட்டமன்றங்களில் உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கவும், நிதிநிலை அறிக்கையின் மீது விவாதிக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. நிதிநிலை அறிக்கையின்மீது வாக்கு அளிக்கும் அதிகாரம் இல்லை.

சட்டமன்றங்கள் வளர்ச்சியில் அடுத்த கட்டம் 1909-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய சட்டமன்றங்களின் சட்டமாகும். இச்சட்டம் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இதன் மூலம் மாகாண சட்டசபையில் சட்டம் இயற்றுவதற்கு சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்னிலும் அதிகமாக்கப்பட்டது. நேரடித் தேர்தல்கள்

இல்லாவிடிலும், முதன்முறையாக தேர்தல் முறையைக் கொண்டு வந்ததன் மூலம் பிரதிநிதித்துவ முறை விரைவில் உயிரூட்டம் பெற இது உதவியது. சென்னை சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20-லிருந்து 50 வரை உயர்த்தப்பட்டது. அதாவது கவர்னரின் நிர்வாக உறுப்பினர்கள் தவிர அவையில் 42 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சட்டத்தால், மாகாண சட்டமன்றங்களில் அதிகாரிகள் பெரும்பான்மையாக இருப்பது தவிர்க்கப்பட்டதுடன் பொது மக்களின் நலன், வரவு செலவுத் திட்டம் ஆகியவை குறித்துத் தீர்மானங்களைக் கொண்டு வரவும், துணைக் கேள்விகள் கேட்கவும் இச்சட்டம் உரிமையளித்தது.

சட்டமன்றங்களின் வளர்ச்சியில் அடுத்த முக்கிய கட்டம் மாண்டேகு-ஜேம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை அமுலாக்கும் பொருட்டு இயற்றப்பட்ட 1919-ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டமாகும். முதன்முதல் சட்டமன்ற பொறுப்பாட்சி இந்நாட்டில் இதன் மூலம் துவங்கியது. சட்டமன்றங்களின் அமைப்பிலும், நடவடிக்கைகளிலும் இச்சட்டம் பல மாறுதல்களைச் செய்தது. இச்சட்டம் இயற்றப்பட்ட பின், சட்டமன்றங்கள் கவர்னரின் நிர்வாகக் குழுக்களாக இயங்கிய முறை மாற்றப்பட்டது. தற்போது இது ஒரு தனி அவையாக, தனித்தன்மையுடன் செயல்படத் தொடங்கியது. இவ்வவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் கவர்னரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் இருந்தனர். கவர்னர் நிர்வாக சபையின் உறுப்பினர்களும் இதில் உறுப்பினர்களாவர். இந்தச் சட்டத்தின் மூலம் சென்னை மாகாணத்தில் நிறுவப்பட்ட சட்டமன்றத்தில் 98 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் 25 நியமன உறுப்பினர்களும் இருந்தனர். இச்சட்டம், மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உருவாவதற்கு வழிகோலியது. அமைச்சர்களை கவர்னர் நியமித்தார். அவர்கள் அரசு சார்பற்ற உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். சட்டமன்றத்தில் கவர்னர் உறுப்பினராக இருக்க முடியாது. ஆனால் அவர் சட்டமன்றத்தில் உரை ஆற்றலாம். முதல் 4 வருடங்களுக்கு சட்டமன்றத்தின் தலைவரை கவர்னரே நியமித்தார். அதன்பிறகு, அவையே தன் தலைவரை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று ஆயிற்று. அவையின் துணைத் தலைவரை அவையே தனது உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுத்தது. அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பதவியானது கவர்னரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தால் மத்திய அரசு கவனிக்க வேண்டிய துறைகள், மாகாண அரசு கவனிக்க வேண்டிய துறைகள் எவை எவை என்று வகுக்கப்பட்டன. மாகாணங்களுக்கு என ஒதுக்கப்பட்ட துறைகள் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டன. அதாவது 'மாற்றப்பட்ட' துறைகள் எனவும் 'ஒதுக்கப்பட்ட' துறைகள் எனவும் பிரிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள் கவர்னரின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாலும், மாற்றப்பட்ட துறைகள் கவர்னரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களாலும் நிர்வகிக்கப்பட்டன. இவ்விதம் அரசு நிர்வாகம் இரு வகைகளாக பிரிக்கப்பட்டிருந்ததால் இவ்வரசு 'இரட்டை ஆட்சி' என பெயர் பெற்றது. சட்டமன்றத்தின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.

மாகாண சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் யாவும் ஆளுநர், கவர்னர் ஜெனரல் ஆகியோரின் ஒப்புதல் பெற்ற பின்தான் அமுலுக்கு வர முடியும். ஒரு பொருள் குறித்து மாகாண சட்டம் இருந்தாலும் அதனை மேலோங்கி நிற்கும் வகையில் மத்திய அரசு சட்டம் இயற்றலாம்.

இச்சட்டத்தினால் மத்தியில் மக்கள் அரசு முறை கோட்பாடு அமுலாக்கப்படவில்லை. மத்திய சட்டமன்றம் இரு அவைகளாக பிரிக்கப்பட்டது. ஒன்று சட்டப் பேரவை, மற்றது மாகாணங்கள் அவை. சட்டமன்றத்தின் இரு அவைகளும், நிதி வழங்கும் அதிகாரத்தைத் தவிர மற்ற இனங்களில் ஒரே மாதிரியான அதிகாரத்தைக் கொண்டிருந்தன. மாநிலங்கள் அவையில் 60 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில், 34 பேர் தேர்தல் மூலம் வந்தவர்கள், மற்றவர்கள் அரசால் நியமிக்கப்பட்டவர்கள். மத்திய சட்டமன்றத்தில் 144 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் 104 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் வந்தவர்கள். மற்றவர்கள் அரசால் நியமிக்கப்பட்டவர்கள்.

இச்சட்டத்தின்படி சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அல்லது அறிமுகப்படுத்தப்பட இருக்கும் ஒரு மசோதா அந்த மாகாணத்தின் அல்லது பிற மாகாணத்தின் அல்லது அதன் பகுதியின் பாதுகாப்பையோ அல்லது அமைதியையோ பாதிக்கும் வகையில் இருக்கிறது என்று ஆளுநர் கருதினால் அது குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டு எடுக்கக்கூடாது என அவர் உத்தரவிடலாம். அதேபோல் ஒதுக்கப்பட்ட துறைகள் குறித்து ஒரு மசோதாவை சட்டமன்றம் நிறைவேற்ற மறுத்தாலோ அல்லது ஆளுநர் பரிந்துரை செய்தவகையில் நிறைவேற்றாவிட்டாலும், ஆளுநர் அவர்கள் அந்த மசோதா நிறைவேற்றப்படுவது தனது கடமையை ஆற்றுவதற்கு இன்றியமையாதது என சான்றிதழ் தரலாம். அம்மசோதா அதன்பின் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

நிதி அளிக்கும் அதிகாரத்திலும் ஆளுநர் அவர்கள் ஒதுக்கப்பட்ட துறை குறித்து மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றப்பட்டதாக உத்தரவிட இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

உறுப்பினர்களுக்குப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து தீர்மானங்கள் அவையில் கொண்டு வரவும் கேள்விகள் கேட்கவும் உரிமைகள் வழங்கப்பட்டன. ஆனால் தீர்மானங்களையும் கேள்விகளையும் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளும் முன்பு அதற்கு அனுமதி மறுக்க ஆளுநருக்கு அதிகாரம் இருந்தது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து விவாதிக்க அவையை ஒத்தி வைக்கவேண்டுமென்று 'ஒத்தி வைப்புப் பிரேரணையை' உறுப்பினர்கள் கொண்டு வரவும் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் அம்மாதிரியான பிரேரணைகளுக்கு அனுமதி மறுக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

சட்டமன்ற வளர்ச்சியின் அடுத்தக் கட்டம் 1935-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம் ஆகும். இச்சட்டம் சட்டமன்றங்களின் வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். இச்சட்டம் அனைத்து இந்திய கூட்டாட்சிக்கு வகை செய்தது. ஆளுநர் அவர்களின் ஆளுகையின் கீழ் இருந்த மாகாணங்களும், இந்திய சமஸ்தானங்களும் இக்கூட்டாட்சியில் அங்கம் வகித்தன. சமஸ்தானங்கள் கூட்டாட்சியில் சேருவது அவற்றின் விருப்பத்திற்கு விடப்பட்டது. மேலும் மாகாணங்களில் இரட்டை ஆட்சி நீக்கப்பட்டு, மக்கள் ஆட்சி ஏற்பட்டது. மத்திய சட்டமன்றத்தில் இரு அவைகள் இருந்தன. ஒன்று சட்டப் பேரவை; மற்றது மாநிலங்கள் அவை. மத்திய சட்டப் பேரவையில் 375 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் 125 பேர் இந்திய சமஸ்தானங்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள். ஆளுநர் மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகள் அம்மாகாணங்களிலிருந்த சட்டமன்றங்களால்

தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள். எனவே அவர்கள் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்லர். சட்டப் பேரவையின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். பேரவையைக் கலைக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு. மாநிலங்கள் அவை ஒரு நிலையான அவையாகும். உறுப்பினர்களுடைய பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும். அவர்களில் மூன்றில் ஒரு பகுதி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி விலக வேண்டும். இந்த அவை 260 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 104 பேர் இந்திய சமஸ்தானங் களின் பிரதிநிதிகள். 6 பேர் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்டவர்கள். 128 பேர் சமூக சாதி அடிப்படையில் பிரதேச அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள். 22 இடங்கள் சிறுபான்மையினருக்கும், மக ளிருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் ஒதுக்கப்பட்டது.

இரு அவைகளும் சம அதிகாரங்களைக் கொண்டிருந் தன. ஆனால் நிதிக்கோரிக்கைகளையும், நிதி ஒதுக்க மசோதாவையும் சட்டப் பேரவையில்தான் கொண்டு வரவேண்டும்.

அன்றைய சென்னை மாகாணத்தில் இரு அவைகள் கொண்ட சட்டமன்றம் இச்சட்டத்தால் நிறுவப்பட்டது. இச்சட்டம் மக்கள் ஆட்சிக்கு வகை செய்தபோதிலும் நிதி அளித்தல் போன்ற காரியங்களில் ஆளுநருக்குச் சிறப்பு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. சில பொருள்கள் சம்பந்தப்பட்டவரை, அவைகள் அமைச்சர்களுடைய அதிகாரத்திற்கு அப்பாற்படுத்தப்பட்டு ஆளுநருடைய முழு அதிகாரத்தின் கீழ் இருந்தன. அமைச்சர்கள் சட்டப் பேரவைக்குக் கடமைப்பட்டவர்கள். அவர்களின் ஆலோ சனைப்படி ஆளுநர், அவருக்கு என தனி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பொருள்கள் தவிர பிற இனங் களில், கடமையாற்ற வேண்டும்.

சட்டமன்றம் என்பது ஆளுநர், சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகிய மூன்று உறுப்புக்களைக் கொண்டதாகும். சட்டமன்ற மேலவை ஒரு நிரந்தரமான அவை. அதைக் கலைக்க முடியாது. அதன் உறுப்பினர் களில் மூன்றில் ஒரு பகுதி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்து எடுக்கப்படவேண்டும்.

சட்டமன்ற மேலவை 54 உறுப்பினர்களுக்குக் குறை யாமல் 56 உறுப்பினர்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். இவர்களில் 35 பேர் பொதுப் பிரதிநிதி களாகவும், 7 பேர் முகமதியப் பிரதிநிதிகளாகவும், ஒரு ஐரோப்பிய பிரதிநிதியும், 3 இந்திய கிருத்துவ பிரதி நிதிகளும் 8-க்குக் குறையாது 10-க்கு மேற்படாத ஆளு நரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் இருந்தனர்.

சட்டபேரவை 215 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களில் 146 பேர் பொதுத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 50 இடங்கள் அரிசன பிரதிநிதிகளுக்காகவும், ஒரு இடம் பின்தங்கிய மலை வாழ் பிரதிநிதிக்காகவும், 28 இடங்கள் முகமதியர் பிரதிநிதிகளுக்காகவும், 3 இடங்கள் ஐரோப்பியர்களின் பிரதிநிதிகளுக்காகவும், 8 இடங்கள் இந்திய கிருத்து வர்களின் பிரதிநிதிகளுக்காகவும் 6 இடங்கள் தொழில் வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்காகவும் 6 இடங்கள் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்காகவும், 6 இடங்கள் மகளிர்களின் பிரதிநிதிகளுக்காகவும் ஒதுக்கப் பட்டன.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே அதி காரங்களை இச்சட்டம் பிரித்துக் கொடுத்தது. மத்திய சட்டமன்றத்திற்குத் தனிப்பட்ட சில துறைகளும், மாநில சட்டமன்றத்திற்காக சில துறைகளும், இரண்டிற்கும் பொதுவான சில துறைகளும் ஒதுக்கப்பட்டன. இரு அவைகளின் அதிகாரங்கள் ஒரே மாதிரி இருந்தபோதி லும் சில இனங்கள் பொறுத்தவரை சட்டப் பேரவைக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டது. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை சட்டப் பேரவையில்தான் அறிமுகம் செய்ய வேண்டும். சட்டமன்றத்தினால் நிறைவேற்றப் பட்ட ஒரு சட்ட முன்வடிவை ஆளுநர் தடுத்து நிறுத்தவும் அல்லது கவர்னர் ஜெனரல் அவர்களின் பரிசீலனைக் குத் தானே அனுப்பிவைக்கவும் முடியும். அல்லது அச் சட்ட முன்வடிவின்மேல் தன் கருத்துக்களை தெரிவித்து அதன் மீதான திருத்தங்களைச் சட்டமன்றம் பரிசீலிக்கும் படி திருப்பி அனுப்பலாம்.

சட்டமன்றங்களின் கூட்டத் தொடர் இல்லாதபோது ஆளுநர் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கலாம். கவர்னர் ஜெனரலின் இசைவு பெற்று அவர் சட்டங் களைப் பிறப்பிக்கலாம்.

1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தச் சட்டம் மத்திய அரசில் அமுலுக்கு வரவில்லை. எனவே மத்திய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் 1919 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டமே தொடர்ந்து செயலில் இருந்தது.

2. பேரவைத் தலைவர் - ஒரு சிறு குறிப்பு

ஆங்கில நாட்டில் பல்லாண்டுக் காலமாகப் பாங்குடன் போற்றப்பட்டுவரும் பார்லிமென்டரி ஜனநாயக முறையையே நாமும் ஏற்றுள்ளோம். அந்த அடிப்படையிலேயே நமது அரசமைப்புச் சட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்து நாட்டில் நிலவும் மக்களாட்சி முறைக்கு மங்காத ஒரு சின்னமாக எழிலுடன் இலங்குவது அந்நாட்டு மக்களவை (பார்லிமென்ட்) ஆகும். மக்களவையின் தலைவரை மிக்க மதித்துப் போற்றும் மரபு அந்நாட்டு ஜனநாயக மரபில் ஊறி நிற்பதாகும். அந்நாட்டு மன்னருக்கு அடுத்தாற்போல் மாண்புமிக்க பதவி வகிப்பவராக மக்களவைத் தலைவர் போற்றப்படுகின்றார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையின் மதிப்பினையும் மாண்பினையும் அவைத் தலைவரின் உருவிலே அங்கே காண்கின்றனர். பதவி வகிக்கும் தனி நபரைத் தாண்டி நிற்பது அந்தப் பெருமை. இதே மரபினையே நாமும் ஏற்றுப் போற்றி வருகின்றோம்.

பேரவைத் தலைவர் பதவி என்பது ஒரு பெரும் பணியாகக் கொள்ளப்படுகிறது. பேரவைத் தலைவர் அந்த அவையின் பணி முதல்வர் என்ற முறையிலும், அவையினால் அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை உடையவர் என்பதாலும், அவையின் விருப்புகளை நிறைவேற்றும் கருவியாக அவர் செயல்படுவதாலும் அவருக்குத் தனிப்பெருமை உண்டு.

''அவைத் தலைவர் என்பவர் தன்னுடைய கடமையை ஆற்றுவதில் கண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நேர்மை, பொறுமை, உறுதி, திறமை ஆகிய பண்புகளோடு, நயத்தக்க நாகரிகமுடையவராக, எல்லோரும் போற்றும் வகையில் ஓர் எடுத்துக்காட்டாக அவர் இலங்க வேண்டும். எல்லாவற்றையும்விட அவரிடம் இருக்கவேண்டிய தலையாய பண்பு நடுவுநிலைமை ஆகும். அவர் அனைவருக்கும் ஆலோசகராக, ஆசானாக, அருமை நண்பராக இயங்க வேண்டும்.'' இவ்வாறு, சபாநாயகருக்குரிய இலக்கணங்களை ஸர் வில்லியம் ஹார்கோர்ட் என்பவர் கூறியுள்ளார்.

அவருக்கு அரசியல் அபிப்ராயங்கள் இருக்கலாம். தனிப்பட்ட முறையில் விருப்பு வெறுப்புக்கள் இருப்பதும் இயல்புதான். ஆயினும், அவருடைய தீர்ப்புகளிலே இம்மியளவும் அவை தலைகாட்டலாகாது. பேரவையின் மதிப்பையும் கண்ணியத்தையும் மேலதிகாரத்தையும் கண்ணுங்கருத்துமாகக் காத்துப் பேணும் பெரும் பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு. அவையிலே அமைதியையும் ஒழுங்கையும் காத்து, எல்லோருக்கும் உரை நிகழ்த்தும் உரிமையை அளிப்பது அவருடைய கடமையாகும். அவையில் ஒரு சாராருக்குச் சாதகமாவோ மற்றொரு சாராருக்குப் பாதகமாகவோ அவருடைய தீர்ப்புகள் இருந்திடலாகாது.

இங்கிலாந்து நாட்டுக்கு அரசர் எவ்வாறு அரசியலுக்கு அப்பாற்பட்டுள்ளாரோ அவ்வாறு சபாநாயகரும் அரசியலுக்கு அப்பாற்பட்டவர். இது அந்நாட்டு அரசியலின் அடிப்படையாக உள்ள கோட்பாடாகும். அதுவே நம் நாட்டுக் கோட்பாடும் ஆகும். முதன் முதலாக அவர் அப்பதவிக்கு அவையில் பெரும்பான்மைக் கட்சியின் ஆதரவால்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஆனால், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டபின், அவர் அரசியலுக்கு அப்பாற்பட்ட மனிதராக ஆகிவிடுகின்றார். (1835-ஆம் ஆண்டில் ஒரேவொரு முறை மட்டுமே சபாநாயகரை இங்கிலாந்து நாட்டிலே நீக்கினார்கள். அந்நாட்டு மக்களவை தீர்மானம் நிறைவேற்றி அவரைப் பதவியிலிருந்து விலக்கியது.)

1642-ஆம் ஆண்டில் இங்கிலாந்து பார்லிமென்டில் நடந்த ஒரு நிகழ்ச்சி, சபாநாயகர் எவ்வாறு சபையோடு இணைந்து செயலாற்றுகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாகும். அந்த ஆண்டில், சார்லஸ் என்ற ஆங்கில மன்னன் தன்னுடைய அரசியல் விரோதிகளான ஐந்து உறுப்பினர்களைக் கைது செய்வதற்காகப் படை பலத்துடன் பார்லிமென்ட் கட்டடத்திற்குள் வந்தான். அவன் மட்டும் தனியாக அவை கூடும் இடத்திற்கு வந்து, சபாநாயகரிடம் அந்த ஐந்து உறுப்பினர்களுடைய பெயரைச் சொல்லி, ''அவர்கள் இருக்கின்றனரா?'' என்று கேட்டான். ஆனால், சபாநாயகர் ஏதொன்றும் பதில் கூறவில்லை. பிறகு அவன், கூடியிருந்த சபையைப் பார்த்து, அவர்களுடைய பெயரை விளித்தான். சபையினர் மவுனமாக இருந்தனர். அதற்கு மேல் அவன் சபாநாயகரை நோக்கி, ''நீர் என்ன கூறுகின்றீர்?'' என்று கேட்க, சபாநாயகர் முழுங்காலிட்டு, பணிந்து, கூறினார்:

> ''மேன்மை தங்கிய மன்னவர் அவர்களே! எனக்கென்று தனியாக காண்பதற்குக் கண்களோ பேசுவதற்கு வாயோ இல்லை, மதிப்புமிக்க இந்தச் சபை எவ்வாறு எனக்குக் கட்டளையிடுகிறதோ அவ்வாறே நடக்கும் கடப்பாடு உடையேன். சபை கூறிய பதிலைத் தவிர, நான் வேறொன்றும் உங்களுக்குக் கூறுவதற்கில்லை.''

இவ்வாறு கூறி, சபாநாயகரின் ஏற்றத்தினை ஏற்றமுறச் செய்தார், லெந்தால் என்ற பேரவைத் தலைவர். இவ்வாறு சபாநாயகர் கூறியதுதான் சபாநாயகருக்கு உரிய இலக்கணம் என்று பிற்காலத்திலே போற்றிப் புகழப்படுகிறது.

ஒரு செய்தி இதழ் ஆசிரியர் சபாநாயகரின் தனித்தன்மை பற்றி எழுதுகையில்,

> ''சபாநாயகர் என்பவர் அரிய மனிதராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை; ஆனால், சாதாரண குணங்களை அரிய அளவு பெற்றிருக்க வேண்டும்.''

இதுவே சபாநாயகருக்கு உரிய இலக்கணத்தின் சுருக்கம் என்று கூறுவர்.

சபாநாயகர் பதவி என்பது ஒரு நீதிபதியின் பதவியைப் போன்றது. ஒழுங்குப் பிரச்சினை எழும் போதெல்லாம் அவர் தீர்ப்புக் கூறுகின்றார். தீர்ப்புக் கூறுகையில் ஒருபாற்கோடாது, கண்ணோடாது, நடுவு நிலைமை ஒரு சிறிதும் தவறாமல் செப்பமுடன் செயலாற்றுகின்றார். ஆங்கிலேய நாட்டில் ஒருவரைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று முன்மொழிகையில், முன்மொழியப்படுபவர் சொல்வாராம் - ''ஐயா, நான் அதற்குத் தகுதி உடையவன் அல்லேன், அல்லேன்'' என்று. அவருடைய மறுப்பினையும் மீறி, அவரைத் தேர்ந்தெடுத்தபின் அவருடைய பெயரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் இருவரும் அவருடைய கரங்களைப் பற்றி சபாநாயகரின் இருக்கைக்கு அழைத்துச் செல்லும்போது, அவர் திமிறிக்கொண்டு ஓட முயலுவார். இறுதியில் அவருடைய கரங்களைப் பிடித்துப் பர பர என்று இழுத்துச் சென்று இருக்கையில் இருத்தி வைப்பார். இது நீண்ட காலமாக இங்கிலாந்து நாட்டில் கடைப்பிடிக்கும் மரபு. அவற்றையெல்லாம் கருத்திற் கொண்டுதான் 1968-ஆம் ஆண்டில் புது டில்லியில்

நடந்த அவைத் தலைவர்கள் மாநாட்டில் அந்நாளில் மக்களவைக்குத் தலைவராக இருந்த டாக்டர் என். சஞ்சீவ ரெட்டி தனது தலைமையுரையில் சபாநாயகரின் அதிகாரங்கள் அளவுடையவை, வரம்புக்கு உட்பட்டவை என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறினார். சபையை ஒத்திவைக்கும் அதிகாரமும்கூட அவையினுக்கே இருக்க வேண்டுமென்றும், அவையினைவிட்டு அவைத் தலைவருக்கு வேறு அதிகாரம் எதுவும் கிடையாது என்றும், அவருக்குள்ள அதிகாரங்கள் அனைத்துமே அவையினால் 'அளிக்கப்பட்டவைதான் என்றும் விவரமாகக் கூறியுள்ளார்.

3. சட்டமன்ற உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்தலில் வெற்றி பெற்று வருகிறவர்களுக்கு அரசியல் வாழ்வில் முதிர்ந்த அனுபவம் இருக்கக்கூடும்; கலை, மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற துறைகளில் பட்டம் பெற்ற வல்லுநர்களாகவும் இருக்கக்கூடும்; அவர்கள் அரசியல்வாதியாக வெளியில் பொதுக் கூட்டங்களில் பங்கு கொள்வதற்கும், சட்டமன்ற உறுப்பினராக பேரவை, மேலவைக் கூட்டங்களில் பங்கு கொள்வதற்கும் அடிப்படையில் சிறிது வேறுபாடு உண்டு.

சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெறும் உறுப்பினர்கள் அவைக்குள் சில நெறிமுறைகளுக்கு உட்பட்டே செயல்பட வேண்டியுள்ளது. இந்நெறிமுறைகள் இன்னவைதான் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. பாராளுமன்ற நடைமுறையில், சிறுகச் சிறுக அவைத் தலைவர்களால் அவ்வப்போது வழங்கப் பெற்று வந்துள்ள தீர்ப்புகளின் மூலமும், பாரம்பரியக் கோட்பாட்டு மரபுகளின் மூலமும் இந்த நெறிமுறைகள் வளர்ந்து வந்துள்ளன.

குறிப்பாக, சட்டமன்றப் பேரவையில் அமர்ந்து அவையின் அலுவல்களில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் தவறாது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பல உள்ளன. இந்நெறிமுறைகள் பின்பற்றப் படவில்லையெனில் அவையின் அலுவல்கள் ஒழுங்காக நடைபெறுவது இயலாது போய்விடும். இந்நெறிமுறைகளைப் பேணிக் காப்பதன் வாயிலாகத்தான் பேரவையின் பெருமதிப்பு பெரிதும் காப்பாற்றப்படுகின்றது.

அவையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறை

பேரவை தொடங்கும் சில நிமிடங்களுக்கு முன்பே உறுப்பினர்கள் அவையில் இருத்தல் வேண்டும். பேரவைத் தலைவர் மண்டபத்திற்குள் நுழையும்போது, உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, அவர் தமது இருக்கையில் அமர்ந்தபின், அமர்தல் வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் தமக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இருக்கையிலேயே அமர்ந்திருத்தல் வேண்டும். அமைதி காத்தல் வேண்டும்.

பேரவை நடந்து கொண்டிருக்கும்பொழுது, எந்த நேரத்தில் அவைத் தலைவர் எழுந்து நின்று பேசத் தொடங்கினாலம் உடனே மற்ற உறுப்பினர்கள் அமர்ந்து விட வேண்டும். உறுப்பினர் ஒருவர் அவை நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும்போது வேறோர் உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இருக்கையில் இருந்து கொண்டு பேசுதல் கூடாது. .

அவையின் அலுவலுக்குச் சம்பந்தமில்லாத செய்தித் தாள்களையோ வேறு நூல்களையோ உறுப்பினர்கள் அவைக்குள் படித்துக் கொண்டிருத்தல் கூடாது. உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினரை, ஒழுங்கு மீறிய சொற்களைக் கூறியோ, வேறு ஒழுங்கற்ற வழியில் குரல் எழுப்பியோ குறுக்கிடுவது கூடாது. பேரவைத் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது எழுந்து நிற்கவோ, அவையினை விட்டு வெளியே செல்லவோ கூடாது. தமது இருக்கையில் அமர்ந்தவாறே பேசுவது, முணுமுணுப்பது கூடாது. தம் அருகில் உள்ளவரோடு பேசுதல், அவையில் நடைபெறும் விவாதங்கள் குறித்து நேர்முக வருணனை செய்தல் கூடாது.

அவைக்குள் நுழையும்போது உறுப்பினர் அமைதியாகவும், அவை நடவடிக்கைக்கு இடையூறு இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். தம் இருக்கையில் அமரும்பொழுதும், தம் இருக்கையைவிட்டு எழுந்து செல்லும்பொழுதும், தலை தாழ்த்தியோ, கைகளைக் கூப்பியோ அவைத் தலைவருக்கு வணக்கம் செய்தல் மரபாகும். பேசிக் கொண்டிருக்கும் உறுப்பினருக்கும் பேரவைத் தலைவருக்கும் இடையில் குறுக்காகச் செல்வது கூடாது. உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். அவசியமாகப் பேச வேண்டுமாயின் தாழ்ந்த குரலில் பேசிக் கொள்ள வேண்டும்.

பேச விரும்பும் உறுப்பினர் தம் இருக்கையை விட்டு எழுந்து நிற்க வேண்டும். பேரவைத் தலைவர் அனுமதித்த பின்னரே பேசத் தொடங்க வேண்டும். கேட்கப்படும் கேள்விகள். அளிக்கப்படும் விடைக்ள், நிகழ்த்தப்பெறும் உரைகள் அனைத்துமே பேரவைத் தலைவரை விளித்தே கூறப்பட வேண்டுமென்பது மரபு. ஆதலால், ''பேரவைத் தலைவர் அவர்களே!'' என்று தான் உறுப்பினர்கள் தம் உரையைத் தொடங்குதல் வேண்டும். எந்த உறுப்பினரையும் ''நீங்கள்'' என்று சுட்டி அழைக்கக் கூடாது. அவைக்குள் 'நீங்கள்' என்றால் அது அவைக்குத் தலைமை வகிப்பவரையே சுட்டும். எனவே மற்ற உறுப்பினர்களைக் குறிப்பிடும் பொழுது ''மதிப்பிற்குரிய உறுப்பினர்'' என்றோ அல்லது அவ்வுறுப்பினரின் தொகுதி பெயரைச் சொல்லி ''இன்ன தொகுதி உறுப்பினர்'' என்றோ குறிப்பிடுதல் வேண்டும். மேலும் மாற்றுக் கட்சி உறுப்பினரை ''மதிப்பிற்குரிய உறுப்பினர்'' என்றும், தம் கட்சி உறுப்பினரை ''மதிப்பிற்குரிய நண்பர்'' என்றும் அழைக்கும் மரபு உண்டு.

எந்தக் காரணத்தை கொண்டும் ஓர் உறுப்பினர் பிறிதோர் உறுப்பினரோடு நேரடியாகப் பேசவோ, விளக்கம் கேட்கவோ அல்லது அவருடன் வாதிடவோ கூடாது. அவ்வாறு செய்வது முறையற்ற செயலாகும். பேசும்போது கைகளை நீட்டியோ, வேறு வகையில் சைகைகள் காட்டியோ பேசுதல் கூடாது. பேசி முடித்ததும் அவையை விட்டுச் செல்லுதல் கூடாது. சிறிது நேரம் அவையில் இருந்த பின்தான் செல்ல வேண்டும். தம் உரையில் பிற உறுப்பினர் அல்லது அமைச்சர் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருந்தால், அவர் அதற்கு என்ன பதில்மொழி சொல்லுகிறார் என்பதனை அறிய அவர் பேசும்போது அவையில் இருக்க வேண்டும். அவ்வமயம் அவையில் இல்லாமல் இருப்பது முறையாகாது.

அதிகாரிகள், நிருபர்கள் அமரும் மாடங்களின் அருகில் சென்று அங்கு அமர்ந்துள்ளவர்களோடு உறுப்பினர்கள் பேசுவது முறையன்று . முதுமை, இயலாமை காரணமாக அன்றி அவைக்குள் கைத்தடி, குடை போன்றவற்றைக் கொண்டு வருதல் கூடாது. ஏதாவது ஒரு பொருளை அவையில் காட்ட வேண்டுமாயின் அதற்கான முன் அனுமதியினைத் தலைவரிடம் பெற்று இருத்தல் வேண்டும். எழுந்து நின்றுகொண்டு வேறோர் உறுப்பினருடன் பேசுவதோ அல்லது மற்ற உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது எழுந்து நிற்பதோ கூடாது. அவையில் முதன்முதல் பேசும் உறுப்பினரின் கன்னிப் பேச்சில் குறுக்கிடக் கூடாது.

அவைக்குள் பாராட்டுதல் தெரிவிக்க மேசையைத் தட்டலாம்; கை தட்டுதல் கூடாது; வெற்றிலை பாக்கு போடுவதும் கூடாது. அவையில் உறங்குதல் அழகன்று. உறுப்பினர்கள் தங்களது அங்கியில் எந்தவிதமான

சின்னமும் அணிந்து வரக் கூடாது. அவையில் அமர்ந்துள்ள உறுப்பினர்கள், அவைக்குள் தம் இருக்கையில் இருந்து கொண்டே தேநீர் போன்ற பானங்கள் அருந்துதல் கூடாது. ஆனால் அவையில் பேசும் உறுப்பினர் தண்ணீர் அருந்த அனுமதிப்பது உண்டு.

அவையில் பேசும் முறை

பேரவையில் நிகழ்த்தப்படும் உரைகள் கண்ணியமாகவும் கருத்துச் செறிவுடனும் அமைதல் வேண்டும். உறுப்பினர்கள் ஆற்றும் உரைகள் சுருக்கமாகவும், சுவைபடவும் இருப்பதே ஏற்றதாகும். திறனறிந்து சொல்லும் சொல்லில்தான் அறனும் பொருளும் அமைந்துள்ளன என்ற மரபுக்கு ஏற்ப உரைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

அவையினுள் கடமையாற்றுங்கால் கட்டற்ற பேச்சுரிமை இருந்தாலும் கண்ணியம் என்ற கட்டுப்பாட்டுள் நின்று உரையாற்றுவதே சால்பாகும்.

பேரவையின் முன்னுள்ள பொருளோடு பொருந்திய வகையில் உரைகள் இருத்தல் வேண்டும். உறுப்பினர்கள் மீது தனிப்பட்ட முறையில் குற்றஞ் சாட்டிப் பேசுதல் கூடாது. ஒருவரது நாணயம் பற்றியும், நடத்தை குறித்தும் பேசுதல் தக்கதன்று. நீதி விசாரணையில் இருக்கும் எந்தப் பொருளின்மீதும் தமது கருத்தைச் சொல்லவோ அப் பொருள் பற்றிப் பேசவோ கூடாது. நாடாளுமன்றம், பிற சட்டமன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைக் குறித்துக் குறைகூறிப் பேசுவது கூடாது. குடியரசுத் தலைவர், ஆளுநர், நீதி மன்றத்தினர் இவர்களின் நடத்தை பற்றி இழித்துப் பேசுதல் கூடாது. குடியரசுத் தலைவர், ஆளுநர் அவர்களின் பெயரை விவாதத்தின் போக்கை மாற்றும் வகையிலோ அல்லது விவாதத்தில் வெற்றி காணவோ பயன்படுத்தக்கூடாது. அவையின் ஆய்விலுள்ள பொருளுக்குத் தொடர்பற்றவைகளை விடாது பேசிக் கொண்டிருப்பதோ பிற உறுப்பினர்களுடைய வாதங்களைச் சலிப்புத் தட்டுமாறு திரும்பத் திரும்பக் கூறுதலோ கூடாது.

பேரவைத் தலைவரின் நடத்தை பற்றி குறைத்துப் பேசுதல் கூடாது. அவரை நீக்க வேண்டும் என்ற தீர்மானத்தின் மீது மட்டும் இவ்வாறு பேசலாம். அவையில் தலைமை வகிப்பவர் அவை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வர வேண்டும். எனவே, தலைவர் இருக்கையைச் சூழ்ந்து கொண்டு உறுப்பினர்கள் அவரிடம் பேச்சுக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். சட்டமன்றச் செயலகத்தில் தாம் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து அவையில் அவரிடம் கேட்பது கூடாது. செயலகத்தின் நடவடிக்கை குறித்து அவையில் எழுப்பக் கூடாது. இவை குறித்து அவைத் தலைவரின் அறைக்குச் சென்று அவரிடம் விளக்கம் கேட்க வேண்டும்.

உரைகளை எழுதி வைத்து வாசிப்பது கூடாது. நினைவுக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவையின் கண்ணியத்திற்கு, மரியாதைக்குக் களங்கம் ஏற்படுத்தாத வகையில், உறுப்பினர் உரையின் தரமும், உட்பொருளின் நயமும் அமைதல் வேண்டும். அவைக்கு ஒவ்வாத சொற்களை அகற்றிப் பேசுதலே 'சொல்லின் கண் சோர்வின்றி பேசும் திறனாகும்.'

தெளிவில்லாத குற்றச்சாட்டுகளைக் கூறுதல் கூடாது. கூறும் குற்றச்சாட்டுகள் உண்மை என்பதற்கான சாட்சியங்களைக் காட்டும் பொறுப்பினை உறுப்பினர் ஏற்க வேண்டும்.

அவையில் உறுப்பினராக இல்லாத ஒருவர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கூறுதல் கூடாது. அரசு அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிடலாகாது. அமைச்சர் மீதும், மற்ற உறுப்பினர் மீதும் குற்றச்சாட்டு கூறுமுன் அவைத் தலைவரின் முன்அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது உறுப்பினருக்கு அவைத் தலைவர் இது குறித்துத் தெரிவித்து, அவர்கள் பதில் அளிக்கப் போதிய அவகாசமும், வாய்ப்பும் அளிப்பார்.

ஓர் அமைச்சர் தன்னிடமுள்ள கோப்பு அல்லது ஆவணத்திலிருந்து சொல்லக்கூடிய விளக்கங்களைச் சரியானதென்று ஏற்றுக் கொள்ள வேண்டும். அது சரியல்லவென்று ஓர் உறுப்பினர் ஆதாரபூர்வமாகக் கருதினால், தனியாக பிரச்சினை எழுப்ப வேண்டும். ஓர் உறுப்பினர் பற்றிக் குறிப்பிட்டு, 'அவர் இவ்வாறு பேசினார்' என்று சொல்லும்போது, அதற்கு அந்த உறுப்பினர் மறுப்பு தெரிவித்தால், அதைத் தடையின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். உரையில் உறுப்பினர் ஏதாவது ஆவணத்திலிருந்து மேற்கோள் காட்டிப் பேசினால் அந்த ஆவணத்தை அவைமுன் வைக்கத் தயாராக இருக்க வேண்டும். அவையின் முடிவை எதிர்நோக்கியிருக்கும் ஒரு பிரச்சினையில் உறுப்பினருக்கு நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருப்பின் அதை அவர் அவைக்குத் தெரிவிக்க வேண்டும். அந்தப் பொருள் குறித்த விவாதத்திலும் வாக்கெடுப்பிலும் அவர் கலந்து கொள்ளக் கூடாது.

தாக்குதலும், எதிர்த் தாக்குதலும் உரையில் தவிர்த்தல் வேண்டும். அறைகூவிப் பேசுதல் அழகல்ல. பேரவைத் தலைவர் தீர்ப்பளித்த பின் அதே பொருள் பற்றி மீண்டும் தொடர்ந்து பேசுதல் முறையற்றதாகும். அவைக் குழுக்களின் மீது எந்த அவதூறும் பேசுதல் கூடாது. பிற நாடுகள், மாநிலங்கள் குறித்து குறை கூறிப் பேசுதல் கூடாது. செய்தித்தாள்களில் வந்துள்ளதை ஆதாரமாக வைத்துப் பேசுதல் பொறுப்புள்ள பேச்சு ஆகாது.

வெளியில் பின்பற்ற வேண்டிய பொது நெறிமுறைகள்

மேலும் அவை உறுப்பினர் என்ற முறையில் தமக்குக் கிடைக்கும் இரகசியத் தகவல்களை வெளியாருக்குத் தெரிவித்தல் கூடாது; அல்லது அதைத் தாம் ஆற்றும் பிற பணிகளில் பயன்படுத்திக்கொள்ளவும் கூடாது. தாம் அங்கம் வகிக்கும் ஒரு தனி கூட்டமைப்பு அல்லது குழுவுக்கு அவை உறுப்பினர் என்ற முறையில் அரசிடம் இருந்து வாணிபப் பயனைக் கோரி பெற்றுத்தர முயற்சிக்கலாகாது. உண்மைக்குப் புறம்பான பொருள் குறித்து சான்றிதழ் வழங்கக் கூடாது. நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தம் பணிகளோடு தொடர்புடைய செயலுக்கு அரசு அதிகாரிகளையோ அல்லது அமைச்சர்களையோ உறுப்பினர் அணுகக் கூடாது. தாம் ஆற்றும் பணிக்கு எவ்விதமான பிரதி பலனையும் ஏற்றுக் கொள்ளுதல் கூடாது.

தொகுதி மக்கள் கூறும் அறைகுறை தகவல் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது. தீர விசாரித்து, உண்மையைக் கண்டறிந்து கொண்டே நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டும். எவர் குறைக்கும், பிராதுக்கும் உடனடி ஆதரவாளராக தம்மை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது. தம் உறவினர் அல்லது தாம் அக்கறை கொண்டுள்ள எவருக்கும் வேலையோ அல்லது வியாபார சம்பந்தமாக சிபாரிசுக் கடிதமோ அரசு அலுவலருக்குக் கொடுக்கக் கூடாது. வழக்கறிஞர் என்ற முறையில் ஓர் உறுப்பினர்

நீதி வழங்கும் பொறுப்புடைய அமைச்சரிடமோ அல்லது அதிகாரியிடமோ வழக்காடச் செல்லக்கூடாது. பயணப்படி, தினப்படி ஆகியவை கோரும்போது தவறான சான்றிதழ்கள் கொடுக்கக் கூடாது.

அவையின் பாரம்பரியத்திற்கும் கண்ணியத்திற்கும் உகந்த முறையில் தம் செயல் முறைகளை அமைத்துக் கொள்ளாத உறுப்பினர்களின் மீது நடவடிக்கை எடுக்க அவைக்கு உரிமையுண்டு. அவையில் ஓர் உறுப்பினர் நடந்து கொள்ளும் முறை ஒழுங்கீனமானது எனத் தலைவர் கருதினால் அவ்வுறுப்புனரை அவையிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு தலைவர் கட்டளை இடலாம். மறுமுறையும் ஒழுங்கு தவறி நடந்தால் அக் கூட்டத் தொடரில் நடக்க இருக்கும் கூட்டங்களுக்கு வராமலிருக்குமாறு அவருக்குத் தலைவர் கட்டளை இடலாம். ஓர் உறுப்பினரின் செயல் முறை அவைக்குத் தீராத் தீங்கு விளைவிப்பதாக இருந்தால், அவரை உறுப்பினர் பதவியில் இருந்தே நீக்கவும் அவைக்கு அதிகாரம் உண்டு.

அவை உறுப்பினர்கள் கண்ணியம் மிக்க உறுப்பினர்கள்; அவர்களிடமிருந்து சில நல்லொழுக்கங்களையும் நெறிமுறைகளையும் அவையும், நாடும் எதிர்பார்ப்பது இயல்பு. ஒவ்வொரு உறுப்பினருடைய நடத்தையும் அவைக்குள்ளும், அவைக்கு வெளியிலும் பேரவையின் கண்ணியத்தையும் மதிப்பையும் உயர்த்துவதாகவும், அவையின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

எனவேதான், பல்லாண்டுக் காலங்களாகப் பாராளுமன்றங்களால் போற்றிப் பேணப்பட்டு வருகின்ற ஒழுங்கு, நெறிமுறைகள் பலவும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பேரவையின் கண்ணியமும், மரியாதையும் காப்பாற்றப்படுவதற்கு, மேலும் உயர்வதற்கு இந் நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நாடு போற்றும் பாராளுமன்றவாதியாகச் செயல்பட உறுப்பினர்கள் அனைவரும் இந் நெறிமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும்.

4. சட்டமன்றப் பேரவையின் முக்கிய நிகழ்வுகள்

(அ) 1937-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டின் முடிவு வரை

1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ், முதன் முதலாக ''சென்னை சட்டமன்றப் பேரவை'' என்கிற அமைப்பு 1937-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக் குப் பின்பு ஜூலைத் திங்கள் ஏற்படுத்தப்பட்டது. இப் பேரவை 1945-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளன்று கலைக்கப்பட்டது. அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணம் தற்போதைய தமிழ்நாடு, தற் போதைய ஒரிஸ்ஸா, கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள சில பகுதிகள் மற்றும் முன்னாள் நைஜாம் சமஸ்தானம் நீங்கலாக இந்நாள் ஆந்திர மாநிலம் முழுவதும் அடங்கிய மாகாணம் ஆகும். அவ் வாண்டு ஜூலைத் திங்கள் 14-ஆம் நாள் புதன்கிழமை யன்று முதன் முதலாகக் கூடியது. அந்நாளே இன்றைக் குப் பொன்விழா கொண்டாடும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பிறந்த நாளாகும். இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி 1937 மார்ச்சு திங்களில் திரு. சி. இராஜ கோபாலாச்சாரி தலைமையில் ஆட்சியை அமைத்தது. எனினும் இரண்டாவது உலக யுத்தத்தின் காரணமாக அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக 1939-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அமைச்சரவை இராஜி னாமா செய்துவிட்டதால், சட்டமன்றம் செயல்படாமல் இருந்தது. உலக யுத்தம் முடிந்தவுடன், 1946-ஆம் ஆண்டு, 1935-ஆம் ஆண்டு இந்திய சட்டத்தின் கீழ், பொதுத் தேர்தல் நடைபெற்றது. பின்பு, முதன் முதலாக 1946-ஆம் ஆண்டு மே திங்கள் 24-ஆம் நாள் பேரவை கூடியது.

166 உறுப்பினர்கள் கொண்ட பெரும்பான்மை பலத்தைக் கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தலைமையில் திரு பிரகாசம் அவர்களைப் பிரதமராகக் கொண்டு 11 அமைச்சர்களைக் கொண்ட அமைச் சரவை அமைக்கப்பட்டு, 30.4.1946 அன்று பதவி ஏற்றது. இந்த அமைச்சரவை 23.3.1947 அன்று இராஜினாமா செய்ததின் காரணத்தால், திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அவர்களைப் பிரதமராகக் கொண்டு அவரது தலைமையில் 8 பேர் கொண்ட அமைச்சரவை 23-3-1947 அன்று பதவி ஏற்றது. அந்த அமைச்சரவையில் மேலும் ஐவர் கூடுதலாக சேர்க்கப் பட்டனர்.

திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலை மையிலான அமைச்சரவை 6.4.1949 அன்று இராஜி னாமா செய்தது. பின்னர், திரு. பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் 12 உறுப்பினர்கள் கொண்ட அமைச்சரவை 6.4.1949 அன்று பதவி ஏற்றது. முதன் முதலாக, 1.10.1948-ல் தான் சட்டமன்றப் பேர வைக்கு ''அரசு கொறடா'' பதவிக்குப் பேரவை உறுப் பினர் நியமனம் செய்யப்பட்டார்.

இச் சட்டமன்றப் பேரவை காலத்தில் மொத்தம் 205 சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டன. 1950-ஆம் ஆண்டில் சென்னை அபிவிருத்தி பொறுப்பாட்சிச் சட்டம் மற்றும் 1951-ஆம் ஆண்டு சென்னை இந்து சமய அறநிலைய கட்டளைச் சட்டம் ஆகியவை அவற் றில் அடங்கும்.

1947-ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டம் நிறை வேற்றப்பட்டது. இந்திய நிலப்பகுதி இரு பகுதிகளாக முறையே, இந்தியா, பாகிஸ்தான் என்று ''டொமினி யன்'' அந்தஸ்து பெற்ற இரு தனி நாடுகளை இச்சட்டம் உருவாக்கியது, பின்னர், 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாளன்று ''இந்திய அரசியல் அமைப் புச் சட்டம்'' அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு அன் றைய சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றை அது இயங்க வைத்தது. 1952-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில்தான் முதன் முதலாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் பொதுத் தேர்தல்கள் நடை பெற்றன. முதல் சட்டமன்றப் பேரவை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

1937 மற்றும் 1946 ஆகிய ஆண்டுகளில் அமைக் கப்பட்ட அன்றைய சென்னை மாகாண சட்டமன்றப் பேரவைகளின் கூட்டத் தொடர்கள் கூடிய நாட்கள் மற்றும் உறுப்பினர்கள் பட்டியல் பற்றிய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் முதலாவது சட்டமன்றப் பேரவை - (1952-1957)

இந்தியத் திருநாடு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாளன்று விடுதலை பெற்றது. 1950 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26 ஆம் நாளன்று இம் மண்ணில் மக்களாட்சி மலர்ந்தது. வயது வந்தோர் அனைவரும் நம் அரசியலமைப்புச் சட்டத்தால் வாக் குரிமை பெற்றனர். அதன் அடிப்படையில், 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர் தலின் வாயிலாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான சென்னை மாநில முதலாவது சட்டமன்றப் பேரவை 1952 ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் நாள் தொடங்கப் பெற்றது. அது 1957 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளன்று முடிவுற்றது.

முதலாவது சட்டமன்றப் பேரவையில் தேர்ந்தெடுக் கப்பெற்ற உறுப்பினர்கள் 375 பேர்கள்* இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி சார்பாக 165 உறுப்பினர்களும், காமன் வீல் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும், கிரிஷிகர் லோக் கட்சி சார்பாக 18 உறுப்பினர்களும், சோஷலிஸ்ட் கட்சி சார்பாக 13 உறுப்பினர்களும், முஸ்லீம் லீகின் சார்பாக 5 உறுப்பினர்களும், ஜஸ்டிஸ் கட்சி சார்பாக ஓர் உறுப்பினரும், கிஸான் மஸ்தூர் பிரஜா கட்சி சார்பாக 38 உறுப்பினர்களும், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி சார்பாக 18 உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக 62 உறுப்பினர்களும், இன்டிபெண்டன்ட் ப்ரோக்ரெஸ்ஸிவ் பிளாக் சார்பாக 33 உறுப்பினர்களும், பார்வர்ட் பிளாக் மார்க்சிஸ்ட் சார்பாக 3 உறுப்பினர்களும் 13 சுயேச்சை உறுப்பினர் களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1953 ஆம் ஆண்டு மொழிவழியே மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, ஆந்திர, கன்னட, கேரள மாநிலங் களாக அமைந்த பகுதிகள் நீங்கலாக சென்னை மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை, முதலில் இருந்த 375-லிருந்து 231 ஆகக் குறைந்தது.

---

*உறுப்பினர்களின் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

மாநிலங்கள் மாற்றியமைத்தல் குறித்த சட்டம் நிறைவேறிய பின்னர் 1956 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை மேலும் குறைந்து 190 ஆகியது. 1956 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற தொகுதிகள் வரையறுத்தல் குறித்த ஆணையின்படி செய்யப்பட்ட மாற்றங்களுக்குப் பிறகு சென்னை மாநிலச் சட்டமன்றப் பேரவை தொகுதிகளின் எண்ணிக்கை 205 ஆக அறிவிக்கப்பெற்றது.

1952 ஆம் ஆண்டு முதலாவது சட்டமன்றப் பேரவை அமைந்த நேரத்தில் மந்திரிசபை அமைக்க எந்தவொரு தனிக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை. எனவே, தனித் தனியே மற்ற கட்சிகள் பெற்றுள்ள இடங்களைவிட அதிக எண்ணிக்கை இடங்களைப் பெற்ற காங்கிரஸ் கட்சி மந்திரிசபை அமைக்க அழைக்கப் பெற்றது. அப்பொழுது மேதகு திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள் ஆளுநராக இருந்தார்கள். காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள், இந்தியா விடுதலை பெற்ற பிறகு வங்காளத்தில் ஆளுநராகவும், பிறகு இந்தியாவின் முதல் இந்திய கவர்னர்-ஜெனரலாகவும் இருந்து ஓய்வு பெற்றிருந்த மாண்புமிகு திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களை தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அவர்களின் தலைமையிலான 15 பேர்களைக் கொண்ட அமைச்சரவை 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ஆம் நாள் பொறுப்பேற்றுக் கொண்டது. அவர்கள் அப்பொழுது சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருக்கவில்லை. அவரை மேதகு ஆளுநர் மேலவை உறுப்பினராக நியமனம் செய்தார்கள். அவரும் மேலவை உறுப்பினராக 5-5-1952 ஆம் நாள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். இரண்டு ஆண்டுகள் அவர் முதலமைச்சராக இருந்தார். பிறகு அவர் பதவியை விட்டு விலகிய போது மாண்புமிகு திரு. கே. காமராஜ் அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்றார்கள்.

முதலாவது சட்டமன்றப் பேரவை அமைந்தவுடன் அதன் தலைவராக மாண்புமிகு திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களும், துணைத் தலைவராக மாண்புமிகு திரு. பி. பக்தவத்சலு நாயுடு அவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

1955 ஆம் ஆண்டு மாண்புமிகு திரு. ஜே. சிவ சண்முகம் பிள்ளை மத்திய தேர்வாணைக் குழு உறுப்பினர் பதவியை ஏற்க, பேரவைத் தலைவர் பதவியை இராஜிநாமாச் செய்ததால் மாண்புமிகு திரு. என். கோபால மேனன் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1956 ஆம் ஆண்டு அவரும் இராஜிநாமாச் செய்து விட்டதால் பேரவைக் காலம் முடியும் வரை துணைத் தலைவரே தலைவர் பொறுப்பையும் கவனித்து வந்தார். மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் பேரவை முன்னவராகப் (Leader of the House) பணியாற்றினார்.

முதலாவது சட்டமன்றப் பேரவை 314 நாட்கள் கூடியது. இதில் 21 நாட்களில் இரவு நேரங்களில் சபை கூடியிருக்கிறது. ஒரேயொரு நாள் மட்டும் பேரவையின் இரகசியக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அக் கூட்டத்தின்போது பத்திரிகையாளர்கள் உட்பட வெளியார் எவரும் அனுமதிக்கப் பெறவில்லை.

சட்டமன்றப் பேரவை, மேலவை கூட்டுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் ஏழு முறை உரையாற்றியுள்ளார். ஒரேயொரு முறை மட்டும் ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெறவில்லை.

மொத்தம் 7,886 வினாக்களுக்கு விடைகள் அளிக்கப் பெற்றன. நிதி அலுவல்களைத் தவிர தீர்மானங்களும், தனித் தீர்மானங்களும் தனியார் அலுவல்களும் கொண்டு வரப்பெற்று விவாதிக்கப் பெற்றுள்ளன. 129 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு அவற்றில் இரண்டுக்கு மட்டும் அவையின் அனுமதி அளிக்கப்பட்டு விவாதிக்கப் பெற்றிருக்கிறது. கவன ஈர்ப்புகளும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 15 பொருள்கள் குறித்து அரைமணி நேர விவாதம் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அமைச்சரவையின்மீது நம்பிக்கையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று அமைச்சரவையின் சார்பில் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது. 154 சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 26 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக் குழுவுக்கோ கூட்டாய்வுக் குழுவுக்கோ அனுப்பப் பெற்று ஆய்வு செய்யப் பெற்றிருக்கின்றன. 1,42,330 பேர்களால் கையொப்பமிடப்பட்ட 9 மனுக்கள் பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொருள்களின் மீது அவையின் முடிவை அறிவதற்காக எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு 62 முறை எடுக்கப்பட்டு இருக்கிறது.

முதலாவது சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் 37 தொகுதிகளில் (வால்யூம்ஸ்) அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளன.

திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, திரு. சி. இராஜகோபாலாச்சாரியார், திரு. சி. சுப்பிரமணியம், திரு. ஏ.பி. ஷெட்டி, திரு. எம். பக்தவத்சலம், திரு. எம். ஏ. மாணிக்க வேலு, திரு. பி. இராமமூர்த்தி, திரு. எம். கல்யாணசுந்தரம், திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர், திரு. கே. விநாயகம், திரு. ஏ. கோவிந்தசாமி, திரு. பி. ஜி. கருத்திருமன் போன்றவர்களது வாதத் திறமையும், சொல்லாட்சித் திறனும் அவை நடவடிக்கைக்கு உயிரோட்டமாக அமைந்தன.

(இ) இரண்டாவது சட்டமன்றப் பேரவை — (1957-1961)

இரண்டாவது சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல் 1957-ல் நடை பெற்று, அதில் தேர்ந்தெடுக்கப் பெற்ற 205 உறுப்பினர்களைக் கொண்ட பேரவை கூடியது. அரசியலமைப்புச் சட்டம் 333-வது பிரிவின்படி மாநில ஆளுநர் ஆங்கிலோ-இந்தியர்களின் பிரதிநிதியாக ஒருவரை நியமித்தார். 1959-ல் ஆந்திரா சென்னை மாநில (எல்லைச் சீரமைப்பு) சட்டத்தின்படி ஆந்திர மாநில சட்டப் பேரவையிலிருந்து சென்னை மாநிலப் பேரவைக்கு ஓர் உறுப்பினர் சேர்க்கப்பட்டார். அவருடன் சேர்ந்து ஆங்கிலோ இந்திய நியமன உறுப்பினர் நீங்கலாக 206 பேர்* சென்னை சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களாக இருந்தனர்.

மொத்தமுள்ள 205 இடங்களில் காங்கிரஸ் கட்சி 151 இடங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் 13-ம், காங்கிரஸ் சீர்திருத்தக் குழு 9-ம், கம்யூனிஸ்ட் கட்சி 4-ம், பார்வர்டு பிளாக் கட்சி 3-ம், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 2-ம், சோஷலிஸ்ட் கட்சி 1-ம் மற்றும் சுயேச்சைகள் 22-ம் பெற்றனர்.

1956-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ம் நாள் மேதகு ஏ.ஜே. ஜான் அவர்கள் சென்னை மாநில

---

*உறுப்பினர்களின் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

ஆளுநராகப் பொறுப்பேற்று 1957 செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை இருந்தார்கள். அவர்களது மறை விற்குப் பிறகு சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி மேதகு பி.வி. ராஜமன்னார் அவர்கள் குடி யரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு 1-10-1957-ல் ஆளுநராகப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்கள். 1958 ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 24 ஆம் நாள் மேதகு பிஷ்ணுராம் மேதி அவர்கள் ஆளுநராகப் பதவியேற் றார்கள்.

இரண்டாவது சட்ட மன்றப் பேரவையில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற காங்கிரஸ் கட்சியின் தலை வராக திரு. கே. காமராஜ் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதையொட்டி அவரது தலைமையில் அமைச்சரவை கூடியது. அவரை முதலமைச்சராகக் கொண்ட அமைச் சரவையில் மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம், மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம், மாண்புமிகு திரு. எம்.ஏ. மாணிக்க வேலு, மாண்புமிகு திரு. ஆர். வெங் கடராமன், மாண்புமிகு திரு. பி. கக்கன், மாண்புமிகு திரு. வி. இராமையா மற்றும் மாண்புமிகு திருமதி லூர்தம்மாள் சைமன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இரண்டாவது சட்டமன்றப் பேரவையின் 10 கூட்டத் தொடர்களில் கூட்டம் நடைபெற்ற மொத்த நாட்கள் 305. நேரக் கணக்கில் சொன்னால் 1404 மணிகளும், 17 மணித் துளிகளும் பேரவை நடை பெற்றுள்ளது.

மாண்புமிகு டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவராகவும் மாண்புமிகு திரு. பி. பக்தவத்சல நாயுடு அவர்கள் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1957 முதல் 1961 வரையில் ஆறு முறை கூடிய பேரவை, மேலவை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றி அவற்றிற்கு நன்றி நவிலும் தீர் மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுள்ளது.

அரசு அலுவல் அல்லாத தனி நபர் தீர்மானத்தின் மீதான விவாதம் 13 நாட்கள் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத் தொடர்களில் விடையளிக்கப்பட்ட வினாக்கள் 9,931 ஆகும். இவற்றில் உடுக்குறியிட்ட வினாக்கள் 3,445, உடுக்குறியிடாதவை 1,331, குறுகிய கால வினாக்கள் 153, தனிக் கவனத்திற்காக எழுப்பப் பட்டவை 2. துணைக் கேள்விகளாக ஆங்கிலத்தில் 5,175-ம், தமிழில் 13,701-ம் கேட்கப் பட்டன. இவற் றில் அதிகமாக 1,599 வினாக்களை எழுப்பி விடை பெற்ற உறுப்பினர் திரு. ஏ.ஏ. ரஷீத் அவர்கள். அதற்கு அடுத்து திரு. கே. விநாயகம் அவர்கள் 1,415-ம் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் 1,052-ம் எழுப்பியுள் ளார்கள்.

இக்காலக் கட்டத்தில் ஒரே ஒரு முறைதான் அரை மணி நேர விவாதம் அனுமதிக்கப்பட்டு நடைபெற்றுள்ளது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பில் 123 விவர அறிக்கைகள் அமைச் சர்களால் அளிக்கப் பெற்றுள்ளன.

ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அறிவிப்புகள் 87 அவை முன் கொண்டுவரப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகளைப் பொறுத்த வரையில் நிர்வாகம் சம்பந்தப்பட்டவை 22, விவசாயத் தைச் சார்ந்தவை 4, அரசியலமைப்புச் சட்டம் குறித்தவை 4, கல்வியைப் பொறுத்தவை 2, காட்டிலாகா 6, நிதி சம்பந்தமானவை 56, சட்டத் துறைக்கானவை 5, மருத் துவத் துறை 3, பொருளாதாரம் குறித்தவை 41, சமூ கத் துறையைச் சார்ந்தவை 22 ஆக 124 சட்ட முன் வடிவுகள் நிறைவேறியுள்ளன.

ஒரு மணி நேர விவாதத்திற்கான அனுமதி ஒரு முறை வழங்கப்பட்டுள்ளது.

அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான அறிவிப்பு ஒரு முறை அவையின் முன் வந்து விவாதிக் கப்பட்டுள்ளது.

பேரவை விதி 82-ன் படி ஏழு முறை அமைச்சர்கள் அவையின் முன் அறிக்கைகள் அளித்துள்ளனர்.

1960 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாள் சென்னை அரசாங்க ஆட்சி மொழிக் கொள்கை பற்றிய விவாதம் இடம் பெற்றது. முடிவில், ''இந்திய அரசின் அலுவல் மொழியான ஆங்கிலம் நீடிக்கும் என்று பாரதப் பிரதமர் அளித்த உறுதி மொழியை அமுல் படுத்துவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்ள மாநில அரசுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் 27,266 பக் கங்கள் அச்சிடப் பெற்று 49 தொகுதிகளாக வெளி யாயின.

இருபது முறைகள் அவையில் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

உறுப்பினர்களால் ஆற்றப் பெற்றுள்ள உரைகள் 9,756 ஆகும். இவற்றில் 2,696 உரைகள் ஆங்கிலத் திலும், 7,060 உரைகள் தமிழிலும் அமைந்தன. அதிக எண்ணிக்கையில் 422 முறைகள் பேசிய உறுப்பினர் திரு. எம். கலியாணசுந்தரம் அவர்கள். அடுத்து 296 முறை திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், 259 முறை திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்களும் உரையாற்றியுள்ளார்கள். அமைச்சர்களில் மாண்புமிகு திரு. எம்.ஏ. மாணிக்கவேலு அவர்கள் 797 உரைகளும், மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 502 உரைகளும், மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 363 உரைகளும், மேலவை உறுப்பினராக இருந்த மாண்புமிகு திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள் பேரவையில் 385 உரைகளும் ஆற்றியுள்ளார்கள்.

(ஈ) மூன்றாவது சட்டமன்றப் பேரவை - (1962-1967)

மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடர்கள் 1962 முதல் 1967 வரை நடைபெற்றன. இதற்கான தேர்தல் 1962 மார்ச்சு திங்கள் 3 ஆம் நாள் நடைபெற்று, 1962 மார்ச்சு திங்கள் 29 ஆம் நாள் அன்று பேரவை, மேலவை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் உரையாற்றினார். பேர வைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த உறுப்பினர் களின் எண்ணிக்கை 206. மொத்த தொகுதிகளுள் 37 தொகுதிகள் ஆதி திராவிட மக்களுக்கும், 1 தொகுதி மலைவாழ் மக்களுக்கும் என்று ஒதுக்கீடு செய்யப்பட் டன. இத்துடன், ஓர் ஆங்கிலோ இந்திய உறுப்பினரும் நியமனம் செய்யப்பட்டார். இந்தத் தேர்தலின் போது இரட்டை உறுப்பினர் தொகுதிகளாக இருந்தவை ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றுள்

11 ஆதி திராவிட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

206 உறுப்பினர்களைக் * கொண்ட பேரவையில், கட்சி வாரியாகப் பெற்ற இடங்கள் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

காங்கிரஸ்	...	139
திராவிட முன்னேற்றக் கழகம்	...	50
சுதந்திரா	...	6
கம்யூனிஸ்ட்	...	2
பார்வார்ட் பிளாக்	...	3
சோஷலிஸ்ட்	...	1
சுயேச்சைகள்	...	5

மூன்றாவது சட்டமன்றம் நடைபெற்ற கால கட்டத்தில் மூன்று ஆளுநர்கள் தமிழகத்தில் பணி யாற்றினார்கள். ஸ்ரீ பிஷ்ணுராம் மேதி 24-1-1958 முதல் 3-5-1964 வரை பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து மேன்மை தங்கிய மகாராஜா ஸ்ரீ ஜெய சாமராஜ வாடியார் பகதூர் 4-5-1964-ல் தமிழ்நாடு ஆளுநராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் விடுப்பில் சென்ற காலத்தில் (24-11-1964 முதல் 7-2-1965: 13-8-1965 முதல் 19-9-1965; 4-1-1966 முதல் 27-6-1966) சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. பி. சந்திரா ரெட்டி ஆளுநர் பொறுப்பை வகித்தார். 28-6-1966-ல் சர்தார் உஜ்ஜல் சிங் ஆளு நராகப் பதவி ஏற்றார்.

மூன்றாவது சட்டமன்றப் பேரவையில் பெரும் பான்மை பெற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு. கே. காமராஜ் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று, அவர் தலைமையில் அமைச்சரவை பதவியேற்றது.

ஆனால் திரு. கே. காமராஜ் அவர்களின் தலைமையிலான அமைச்சரவை 2-10-1963 பிற்பகல் ராஜினாமா செய்தது. அதன் காரணமாக திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை, அன்றைய தினமே பதவியேற்றது.

மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் மொத்த கூட்டத் தொடர்கள் 9; கூடிய நாட்கள் 252; நேரம் 1,182 மணிகள்.

மாண்புமிகு திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவராகவும், மாண்புமிகு திரு.கே. பார்த்தசாரதி அவர்கள் பேரவைத் துணைத் தலைவராக வும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1962 முதல் 1967 வரையில் 5 முறை கூடிய பேரவை, மேலவை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத் தில் ஆளுநர் உரையாற்றி, அவற்றிற்கு நன்றி நவிலும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத் தொடர்களில் விடையளிக்கப்பட்ட வினாக்கள் 6,107. இவற்றுள் உடுக்குறியிட்டவை 5,390; உடுக்குறியிடாதவை 661; குறுகிய கால வினாக்கள் 49; தனிக் கவனத்திற்காக எடுக்கப்பட்டவை 7. துணைக் கேள்விகளைப் பொறுத்தவரையில் 14,829 தமிழிலும், 449 ஆங்கிலத்திலும் கேட்கப்பட்டுள்ளன. வினாக்களைத் தொடுத்தவர்களில், 1,063 வினாக் களைத் தொடுத்த திரு. எம். கல்யாணசுந்தரம் முதலிடத் தையும், 741 வினாக்களைத் தொடுத்த திரு. எஸ். மாதவன் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

இக்கால கட்டத்தில் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு 142 எடுத்துக் கொள்ளப்பெற்று, அவற்றுக்கு அமைச்சர்கள் விவர அறிக்கைகளை அவையில் வைத்துள்ளார்கள்.

ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அறிவிப்புகள் 149 அவை முன்கொண்டு வரப்பட்டன.

ஒரு மணி நேர விவாதத்திற்கான அனுமதி பத்து முறை வழங்கப்பட்டுள்ளது. அரை மணி நேர விவாதம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருமுறை அவையிலே விவாதிக்கப்பட்டுள்ளது.

பேரவை விதி 82-ன்படி 17 முறை அமைச்சர்கள் அவையின் முன் அறிக்கைகள் வைத்துள்ளனர்.

சட்ட முன்வடிவுகளைப பொறுத்த வரையில் 153 அரசினர் சட்ட முன்வடிவுகள் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப் பெற்று, மேலவையில் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. 11 அவசரச் சட்டங்கள் இந்தக் காலக் கட்டத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சட்டமன்றத்தில் 29 முறை வாக்கெடுப்பு நடை பெற்றிருக்கிறது.

பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் 26,579 பக்கங்கள் அச்சிடப்பெற்று, 40 தொகுதிகளாக வெளி யாயின.

உறுப்பினர்களால் ஆற்றப்பெற்ற உரைகள் 6,243 ஆகும். இவற்றுள் ஆங்கில உரைகள் 717; தமிழ் உரைகள் 5,526. 279 உரைகள் ஆற்றிய திரு. எம். கல்யாணசுந்தரம் முதலிடத்தையும், 166 உரைகள் ஆற்றிய திரு. இரா. நெடுஞ்செழியன் இரண்டாம் இடத்தையும் பெறுகிறார்கள். அமைச்சர்களில் மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 423 உரைகளையும், மாண்புமிகு திரு. இராமையா அவர்கள் 131 உரை களையும் ஆற்றியுள்ளார்கள்.

*உறுப்பினர்களின் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

(உ) நான்காவது சட்டமன்றப்பேரவை - (1967-1971)

நான்காவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் 1967 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடைபெற்றது. தேர்தல் நடைபெற்ற 233 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் அறுதிப் பெரும்பான்மையாக 138 இடங்களைப் பெற்றது. காங்கிரஸ் கட்சி 49 இடங்களையும், சுதந்திராக் கட்சி 20 இடங்களையும், கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி 11 இடங்களையும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 4 இடங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களையம், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி 2 இடங்களையும் சுயேச்சை 7 இடங்களையும் பெற்றன.*

அப்பொழுது மாநில ஆளுநராக மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் இருந்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சியின் தலைவராக டாக்டர் சி.என். அண்ணாதுரை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவரது தலைமையிலான அமைச்சரவை 1967 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதி பதவியேற்றது. 1969 ஆம் ஆண்டில் டாக்டர் சி.என். அண்ணாதுரை அவர்கள் காலமானதையொட்டி மாண்புமிகு திரு.மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான மந்திரிசபை 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி பதவியேற்றது.

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் பேரவைத் தலைவராகவும், மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் பேரவைத் துணைத் தலைவராகவும் 1967 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் தம் பதவியை இராஜிநாமாச் செய்ததால் 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் பேரவைத் தலைவராகவும், மாண்புமிகு திரு. ஜி.ஆர். எட்மண்ட் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கபட்டனர்.

நான்காவது சட்டமன்றப் பேரவையின் ஒன்பது கூட்டத் தொடர்களில் கூட்டம் நடைபெற்ற மொத்த நாட்கள் 199 ஆகும்.

மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டங்களில் ஆற்றிய உரைகளுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானங்களின்மீது அவையில் 4 முறைகள் விவாதம் நடந்துள்ளது. 3,585 வினாக்களுக்கு அவையில் பதிலளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டும் 3,115 ஆகும்.

கவன ஈர்ப்பில் 216 அறிக்கைகள் அளிக்கப் பெற்றுள்ளன.

289 ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் அவை முன் கொண்டு வரப்பட்டன.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானங்கள் இரண்டும், அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள் இரண்டும் அவையில் விவாதிக்கப்பெற்றன.

(1) இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967;

(2) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா;

(3) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு துயர்தணிப்பு நடவடிக்கைகள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதா;

(4) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாயக்கூலி மசோதா

போன்ற முக்கியமான சட்ட முன்வடிவுகள் உட்பட 108 சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பெற்றன.

மாநிலத்தின் பெயரை அரசியலமைப்புச் சட்டத்தில் ''தமிழ்நாடு'' என்று மாற்றியமைத்தல், மாநிலத்தின் மொழிக் கொள்கை போன்ற முக்கியமான தனித் தீர்மானங்கள் உட்பட மொத்தம் 23 நிறைவேற்றப் பெற்றன. ஏழு உரிமைப் பிரச்னைகள் உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றன. ஐந்து முறைகள் அவையில் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது. பேரவைக்கூட்டம் நடைபெற்றுள்ள மொத்த நேரம் 619 மணி 12 நிமிடங்களாகும். அச்சடிக்கப்பெற்றுள்ள நடவடிக்கைக் குறிப்புகளின் பக்கங்கள் 22,645 ஆகும். இவை அனைத்தும் 35 தொகுதிகளாக அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றுள்ளன. உறுப்பினர்களால் ஆற்றப் பெற்றுள்ள உரைகள் 5,526 ஆகும். அதிகமான முறைகள், அல்லது அதிகமான நேரம் மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன், மாண்புமிகு திரு. மு. கருணாநிதி, மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு திரு. செ. மாதவன் ஆகிய அமைச்சர்கள் உரையாற்றி உள்ளார்கள். உறுப்பினர்களில் திரு. பி.ஜி. கருத்திருமன், டாக்டர் எச்.வி. ஹண்டே, திரு. கே. விநாயகம், திரு. க. ராமமூர்த்தி ஆகியோர் அதிகமான முறைகள் அல்லது அதிகமான நேரம் உரையாற்றியவர்கள் ஆவார்கள்.

கூட்டம் நடைபெற்ற நாட்களில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப் பெறாத பிரச்சினைகள் அவையில் எழுப்பப் பெற்றிருக்கலாம். அப்போது விவாதம் மிக சூடானதாகவும் இருந்திருக்கக்கூடும். வினா நேரமாக இருந்தாலும், விவாத நேரமாக இருந்தாலும் அவையில் அவ்வப்பொழுது எழக்கூடிய சூடான வாதங்களைத் தவிர்ப்பதற்கும், சலிப்பை நீக்குவதற்கும் அவையில் மகிழ்ச்சியையும், விறுவிறுப்பையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைச்சர் பெருமக்களும் சரி, மாண்புமிகு உறுப்பினர்களும் சரி, சுவைமிகுந்த வாதம் நடத்தியுள்ள பகுதிகள் பலவாகும். குறிப்பாக மாண்புமிகு டாக்டர் சி.என். அண்ணாதுரை, மாண்புமிகு திரு. மு. கருணாநிதி, மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா, திரு. கே. விநாயகம், திரு. டி.எஸ். ஆதிமூலம், திரு. பி.ஜி. கருத்திருமன், திரு. க. இராமமூர்த்தி, திரு. வி.எஸ். எல்லப்பன், திரு. ம.பொ. சிவஞானம் ஆகியோர் உரைகளைக் காணலாம்.

*உறுப்பினர்களின் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

(ஊ) ஐந்தாவது சட்டமன்றப் பேரவை - (1971-1976)

ஐந்தாவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் 1971 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் நடைபெற்றது. மொத்த இடங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் 184 இடங்களையும், காங்கிரஸ் (ஓ) 15 இடங்களையும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி 8 இடங்களையும், பார்வேர்ட் பிளாக் 6 இடங்களையும், சுதந்திராக்கட்சி 6 இடங்களையும், முஸ்லீம் லீக் 6 இடங்களையும், பிரஜா சோசலிஸ்ட் 4 இடங்களையும், தமிழரசுக் கழகம் 1 இடத்தையும் பெற்றன. 4 இடங்களை சுயேச்சைகள் பெற்றனர்.*

26-5-1971 வரையில் மாநில ஆளுநராக மாண்புமிகு திரு. சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் பதவியில் இருந்தார்கள். பின்பு திரு. கே.கே. ஷா அவர்கள் 27-5-1971 ஆம் நாளன்று மாநில ஆளுநராகப் பதவியேற்றார்கள்.

அறுதிப் பெரும்பான்மை பெற்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியின் தலைவராக டாக்டர் மு. கருணாநிதி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தலைமையிலான மந்திரிசபை 1971 ஆம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி பதவியேற்றது. அவை முன்னவராக திரு. இரா. நெடுஞ்செழியன் செயல்பட்டார்.

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் பேரவைத் தலைவராகவும், பேரவைத் துணைத் தலைவராக மாண்புமிகு திரு. பி. சீனிவாசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி பேரவைத் தலைவர் பதவியிலிருந்து திரு. கே.ஏ. மதியழகன் நீக்கப்பெற்றபின், 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற பேரவை தலைவர் தேர்தலில், புலவர் கா. கோவிந்தன் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேரவைத் துணைத் தலைவா திரு. பி. சீனிவாசன், 1974 ஆம் ஆண்டு துணைத் தலைவர் பதவியைத் துறந்தபின், அப்பதவிக்கு திரு. என் கணபதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஐந்தாவது சட்டமன்றப் பேரவையின் 14 கூட்டத் தொடர்களில் மொத்தம் 325 நாட்கள் கூட்டம் நடைபெற்றது.

மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரைகளுக்குக் கொண்டுவரப்பெற்ற நன்றி நவிலும் தீர்மானங்கள் மீது பேரவையில் ஐந்து முறை விவாதம் நடைபெற்றுள்ளது.

6,870 வினாக்களுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டன. அவற்றில் உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டும் 6,402 ஆகும். கவனஈர்ப்பில் 214 அறிக்கைகள் அளிக்கப்பெற்றுள்ளன. 530 ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்புகள் எழுப்பப்பட்டன.

அமைச்சரவையின்மீது நம்பிக்கையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று முதல்வரால் கொண்டு வரப்பெற்று, அது அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமைச்சரவையின்மீது நம்பிக்கை இன்மையைத் தெரிவிக்கும் தீர்மானங்கள் நான்கும், அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள் நான்கும் அவையில் கொண்டுவரப் பெற்று விவாதிக்கப்பெற்றுள்ளன.

*உறுப்பினர்களின்பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டம், 1971; தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றல்) சட்டம், 1971; தமிழ்நாடு மதுவிலக்கு (நீக்கல்) சட்டம், 1971; தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம், 1972 போன்ற முக்கியமான சட்ட முன்வடிவுகளோடு 236 சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப் பெற்றன.

இந்திய நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் நிரம்பப் பெறுவதைக் கொண்டாடும் முகத்தான் தமிழ்நாடு சட்ட மன்றம் 14-8-1972 அன்று நள்ளிரவில் கூடி நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிடங்கள் முதலில் மௌன அஞ்சலி செலுத்தியது. பின்பு தொடர்ந்த நள்ளிரவு சுதந்திர வெள்ளி விழா கூட்டம் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

பங்களா தேசம் தனியே அமைந்ததைப் பாராட்டும் தீர்மானம், நெய்வேலியில் 2-வது சுரங்கம் தோண்டப்பட வேண்டும் என மைய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் போன்ற முக்கியமான அரசினர் தீர்மானங்கள் 32 கொண்டு வரப்பெற்று நிறைவேற்றப் பெற்றன. ஆறு உரிமைப் பிரச்னைகள் உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றன. பதினோரு முறைகள் அவையில் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

அச்சடிக்கப்பெற்றுள்ள நடவடிக்கைக் குறிப்புகளின் பக்கங்கள் 46,064 ஆகும். பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் அனைத்தும் 76 தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

உறுப்பினர்களால் ஆற்றப்பெற்ற உரைகள் 11,684 ஆகும்.

பேரவைக் கூட்டம் நடைபெற்றுள்ள மொத்த நேரம் 1,481 மணி 20 நிமிடங்களாகும்.

ஐந்தாவது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களான மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. க. அன்பழகன், மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன், திருவாளர்கள் கே.எம். சுப்பிரமணியன், திருப்பூர் ஏ.எம். மொய்தீன், ஏ.ஆர். பெருமாள், என். கிட்டப்பா, கோவை செழியன், திருமதி த.ந. அனந்தநாயகி, திருவாளர்கள் எம்.ஏ. லத்தீப், த. சோனையா, என்.கே. பழனிச்சாமி ஆகியோர்கள் மிகச் சிறப்பாக உரையாற்றியுள்ளனர்.

(எ) ஆறாவது மற்றும் ஏழாவது சட்டமன்றப் பேரவை - (1977-1984)

ஆறாவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல், 1977ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 130 இடங்களையும், திராவிட முன்னேற்றக்கழகம் 48 இடங்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் (இ) 27 இடங்களையும், ஜனதா 10 இடங்களையும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி 5 இடங்களையும், கம்யூனிஸ்டு மார்க்சிஸ்டு 12 இடங்களையும், அகில இந்திய பார்வர்டு பிளாக் 1 இடத்தையும் பெற்றன,* சுயேச்சை 1 இடத்தைப் பெற்றது.

*உறுப்பினர்களின் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

அப்போது மாநில ஆளுநராக மேதகு திரு. பிரபு தாஸ் பட்வாரி இருந்தார்.

அறுதிப் பெரும்பான்மை பெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியின் தலைவராக மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களது தலைமையிலான மந்திரி சபை 1977ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் பதவி ஏற்றது.

பேரவைத் தலைவராக திரு. முனு ஆதி அவர்களும், பேரவைத் துணைத் தலைவராக திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களும், 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 6ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவை முன்னவராக திரு. கி. மனோகரன் செயல்பட்டார். எதிர்க் கட்சித் தலைவராக டாக்டர் மு. கருணாநிதி இருந்தார்.

ஆறாவது சட்டமன்றப் பேரவையின் 6 கூட்டத் தொடர்களில் பேரவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நாட்கள் 179 ஆகும்.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் 4 முறை உரையாற்றியிருக்கிறார்கள். அவற்றின் மீது அவையில் விவாதமும் நடைபெற்றுள்ளது.

கிட்டத்தட்ட 6,201 வினாக்களுக்குப் பதிலளிக்கப்பட்டன. அவற்றில் உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டும் 2,500 ஆகும்.

கவன ஈர்ப்பில் 284 அறிக்கைகள் அளிக்கப் பெற்றுள்ளன.

302 ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் எழுப்பப் பட்டன.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானங்கள் இரண்டும், அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் அவையில் கொண்டுவரப்பெற்று விவாதிக்கப் பெற்றன.

சட்டமுன்வடிவுகள் 138 நிறைவேற்றப்பெற்றன. அவற்றில்

1. மதுரை காமராஜ் பல்கலைக் கழக (திருத்தம் மற்றும் சிறப்பு ஒதுக்கம்) சட்டம், 1978.
2. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டம், 1978.
3. தமிழ்நாடு குதிரைப் பந்தய (டர்ப் ஏஜென்சி) ஒழிப்புச் சட்டம், 1979.
4. தமிழ்நாடு காவல் துறை (திருத்தம் மற்றும் வேலிடேஷன்) சட்டம், 1979 ஆகிய முக்கியமான சட்ட முன்வடிவுகளும் அடங்கும்.

ஆறு உரிமைப் பிரச்சினைகள் உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றன.

நான்கு முறைகள் அவையில் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

உறுப்பினர்களால் ஆற்றப் பெற்றுள்ள உரைகள் 6,759 ஆகும்.

அச்சடிக்கப் பெற்றுள்ள நடவடிக்கைக் குறிப்புகளின் பக்கங்கள் 29,890 ஆகும். இவையனைத்தும் 38 தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

அமரர் திரு. காமராஜர் அவர்களின் திருவுருவப் படம், 18-8-1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், அப்போது இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

6-வது சட்டமன்றப் பேரவை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கலைக்கப் பெற்றதினால் ஏழாவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் 1980 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்றது.

இத்தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 129 இடங்களையும், திராவிட முன்னேற்றக் கழகம் 38 இடங்களையும், இந்திய தேசீயக் காங்கிரஸ் 30 இடங்களையும், ஜனதா 2 இடங்களையும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி 10 இடங்களையும், கம்யூனிஸ்டு மார்க்சிஸ்டு 11 இடங்களையும், பார்வர்டு பிளாக் 1 இடத்தையும், காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் 6 இடங்களையும், சுயேச்சைகள் 7 இடங்களையும் பெற்றனர்.*

மேதகு திரு. பிரபுதாஸ் பட்வாரி மாநில ஆளுநராக 25-10-1980 வரை பதவியிலிருந்தார். 4-11-1980 முதல் 2-9-1982 முடிய மேதகு திரு. சாதிக் அலி ஆளுநராக இருந்தார். பின்னர் 3-9-1982 அன்று மேதகு திரு. எஸ்.எல். குரானா ஆளுநராக பதவி ஏற்றார்.

மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தலைமையிலான மந்திரி சபை 1980 ஜூன் 9ஆம் நாளன்று பதவியேற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் பேரவைத் தலைவராகவும், மாண்புமிகு திரு. பி.எச். பாண்டியன் பேரவைத் துணைத் தலைவராகவும் 1980 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவை முன்னவராக இருந்தார். 27-6-1980 முதல் டாக்டர் மு. கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். 29-8-1983 முதல் இந்திய தேசிய காங்கிரஸ் (இ) பிரதான எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டு, எதிர்க் கட்சித் தலைவராக திரு. கே.எஸ்.ஜி. ஹாஜா ஷெரிப் இருந்தார்.

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் 9 கூட்டத் தொடர்களில் பேரவைக் கூட்டம் நடைபெற்ற நாட்கள் மொத்தம் 301 ஆகும்.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் 5 முறை உரையாற்றியிருக்கிறார்கள். அவற்றின் மீது அவையில் விவாதமும் நடைபெற்றுள்ளது.

கிட்டத்தட்ட 10,105 வினாக்களுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டன. அவற்றில் உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டும் 4,258 ஆகும்.

கவன ஈர்ப்பில் 370 அறிக்கைகள் அளிக்கப் பெற்றுள்ளன.

183 பொருள்களின் மீது 809 ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் எழுப்பப்பட்டன.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும், அரசின் கொள்கையைக்

---

*உறுப்பினர்கள் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் அவையில் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப் பெற்றன.

(1) தமிழ்நாடு வருவாய் வாரிய ஒழிப்புச் சட்டம், 1980.

(2) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) திருத்தச் சட்டம், 1980.

(3) தமிழ்நாடு கிராம அதிகாரிகள் (பகுதி நேர) பதவிகள் ஒழிப்புச் சட்டம், 1981.

(4) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை அளித்தல்) சட்டம், 1981.

(5) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 1984.

போன்ற முக்கியமான சட்ட முன்வடிவுகளுடன், 237 சட்ட முன் வடிவுகள் அவையில் நிறைவேற்றப்பெற்றன.

பத்து உரிமைப்பிரச்சினைகள் உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றன.

நான்கு முறைகள் அவையில் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

உறுப்பினர்களால் ஆற்றப் பெற்றுள்ள உரைகள் 9,898 ஆகும்.

அச்சடிக்கப் பெற்றுள்ள நடவடிக்கைக் குறிப்புகள் 46,188 பக்கங்கள் ஆகும். இவை அனைத்தும் 69 தொகுதிகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

அமரர் தந்தை பெரியார், அமரர் டாக்டர் அம்பேத்கார், அமரர் திரு. காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், அமரர் திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் திருவுருவப் படங்களை, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9 ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், கேரள மாநில ஆளுநராக அப்போது இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

6-வது, 7வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களில் குறிப்பாக, டாக்டர் மு. கருணாநிதி, டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன், டாக்டர் இரா. நெடுஞ்செழியன், திரு. ச. இராமச்சந்திரன், திரு. ஆர்.எம். வீரப்பன், திரு. செ. அரங்கநாயகம், திரு. சி. பொன்னையன், திரு. கி. மனோகரன், திரு. எஸ்.டி. சோமசுந்தரம், டாக்டர் கா. காளிமுத்து, திரு. ர. ஜெபமணி, திருவாளர்கள் குமரி அனந்தன், ப. நெடுமாறன், என். சங்கரய்யா, வி. கே. கோதண்டராமன், ஜே. ஜேம்ஸ், சி. ஆறுமுகம், மு. அம்பிகாபதி, துரைமுருகன், எம். ஜெயவேலு ஆகியோர் பல நேரங்களில் தங்களுடைய சாதுர்ய பேச்சுக்களினால் அவையை மகிழ்வித்திருக்கின்றனர்.

(ஏ) எட்டாவது சட்டமன்றப் பேரவை (1985 - 1988)

மக்களவைக்கான பொதுத் தேர்தலோடு தமிழ்நாடு எட்டாவது சட்டமன்றப் பேரவைக்கான தேர்தலும், 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று நடைபெற்றது. தேர்தல் நடைபெற்ற 234 தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 133 இடங்களைக் கைப்பற்றி, அறுதிப் பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெற்றது.

அதற்கடுத்தபடியாக 62 இடங்களை வென்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி பிரதான எதிர்க்கட்சியாகும் வாய்ப்பைப் பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் 24 இடங்களையும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 5 இடங்களையும், ஜனதா கட்சி 3 இடங்களையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களையும், காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி இரண்டு இடங்களையும், அகில இந்திய பார்வார்ட் பிளாக் ஒரு இடத்தையும், சுயேச்சை இரண்டு இடங்களையும் பெற்றன.*

தமிழக ஆளுநராக இருந்த மேதகு திரு. எஸ்.எல். குரானா அவர்கள் ஆங்கிலோ - இந்திய மக்களின் பிரதிநிதியாக திரு. ஜி.கே. பிரான்சிஸ் அவர்களை நியமனம் செய்தார்கள். தேர்தல் ஆணைக் குழுவின் அறிவிக்கையின்படி 8-வது சட்டமன்றப் பேரவை 16-1-1985 ஆம் நாளிலிருந்து அமைக்கப் பெற்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 1985 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். 14-2-1985 ஆம் நாளன்று அமைச்சரவை பதவி ஏற்றது. மேலும் 3-3-1985 ஆம் நாளன்றும், 18-3-1985 ஆம் நாளன்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பிறகு அமைச்சரவையின் எண்ணிக்கை 25 ஆகியது. உறுப்பினர்கள், 25-2-1985 அன்று முதற் கூட்டம் நடைபெற்றபோது பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். 27-2-1985 ஆம் நாளன்று பேரவைத் தலைவராக மாண்புமிகு திரு. பி.எச். பாண்டியன் அவர்களும், பேரவைத் துணைத் தலைவராக மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

எட்டாவது சட்டமன்றப் பேரவையின் 6 கூட்டத் தொடர்களில் 179 நாட்கள் கூட்டம் நடைபெற்றது. மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டங்கள் இரண்டிலும், சட்டமன்றப் பேரவைக் கூட்டங்கள் இரண்டிலும் ஆற்றிய உரைகளுக்கு நன்றி நவிலும் தீர்மானங்களின் மீது பேரவையில் விவாதம் நடைபெற்றது. 2,539 வினாக்களுக்குப் பதில்கள் அளிக்கப்பெற்றன. 2,870 வினாக்களுக்கான பதில்கள் அவையில் வைக்கப்பெற்றன. கவன ஈர்ப்பில் 602 முன் அறிவிக்கைகளுக்கான அறிக்கைகள் அமைச்சர்களால் அளிக்கப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்டமுன்வடிவு, 1987; தமிழ்நாடு காணொளி (வீடியோ) பேழை பதிவுக்கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாக தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987; மற்றும் தமிழ்நாடு (எம்.ஜி.ஆர்) மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 ஆகியவை உட்பட 193 அரசினர் சட்ட முன் வடிவுகள் நிறைவேற்றப் பெற்றன.

நான்கு உரிமைப் பிரச்சினைகள் உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டன. அவை உரிமை மீறிய குற்றத்திற்காக இரண்டு பத்திரிகை ஆசிரியர்களுக்கு பேரவை

---

*உறுப்பினர்கள் பெயர்கள் இணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

சிறைத் தண்டனை அளித்தது. எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு அவையில் 3 முறைகள் நடைபெற்றன.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கம் குறித்த தீர்மானம், இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பது பற்றிய தீர்மானம், அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியை எரித்ததற்காக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 10 பேரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம், சொத்துவரி சீரமைப்பு குறித்த தீர்மானம் ஆகியவை உட்பட 17 அரசினர் தனித் தீர்மானங்கள் அவையில் நிறைவேற்றப் பெற்றன.

இந்திய நாடு விடுதலை அடைந்து 40 ஆண்டுகள் நிரம்பப் பெற்றதைக் கொண்டாடும் முகத்தான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 1987 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டக் களங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க புனித மண் அடங்கிய பேழைகளை தியாக சீலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு, டெல்லி மாநகருக்கு அவற்றை எடுத்துச் செல்வதற்கான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இச்சிறப்பு விழாக்கூட்டத்தில் நாட்டின் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துதல், நாட்டு ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டு உணர்விலும் வைத்துள்ள நம்பிக்கையை வலியுறுத்துதல், புதிய இந்திய சமுதாயத்தை உருவாக்கும் பணிக்கு நம்மை ஒப்படைத்தல் ஆகியவை குறித்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் 24-12-1987 ஆம் நாள் அன்று மறைந்ததால், பேரவை முன்னவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தற்காலிக முதல்வராகப் பொறுப்பேற்றார். அனைந்திந்திய அண்ணா தி.மு.க. சட்டமன்றக் கட்சியினர் தங்கள் தலைவராக திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களைத் தேர்ந்தெடுத்ததால், அவர்கள் 7-1-1988 ஆம் நாளன்று தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று 28-1-1988 ஆம் நாள் அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்டது. கட்சிமாறுதல் தடைச் சட்டத்தின் கீழ் 33 உறுப்பினர்கள் தங்களது உறுப்பினர் பதவிகளை இழந்தனர்.

8-வது சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் அனைத்தும் 16,567 பக்கங்களில் அச்சடிக்கப் பெற்று, 47 தொகுதிகளில் வெளியிடப் பெற்றுள்ளன. பேரவைக் கூட்டம் நடைபெற்றுள்ள மொத்த நேரம் 656 மணி 40 நிமிடங்கள். பேரவை உறுப்பினர்களால் ஆற்றப்பெற்ற உரைகள் 6,486 ஆகும்.

1988 ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் அன்று 8-வது சட்டமன்றப் பேரவை கலைக்கப் பெற்றது.

8-வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களான மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம், மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து, மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, திரு. க. அன்பழகன், திரு. என்.எஸ்.வி. சித்தன், திரு. ஆ.கா.அ. அப்துல் சமத், திரு. குமரி ஆனந்தன் ஆகியோரின் உரைகள் அவையைப் பெரிதும் மகிழ்வித்திருக்கின்றன.

(ஐ) ''தமிழ்நாடு'' என்று மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கும் தீர்மானத்தின் மீது 18-7-1967 ஆம் நாளன்று அன்றைய முதல் அமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை:

சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற ''தமிழ்நாடு'' என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும் நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும். இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக் கொண்டிக்க நேரிட்டதே என்பது தான் மகிழ்ச்சியின் இடையிலே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி இன்றைய தினம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றாலும் இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவை தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கூட இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார்களே தவிர வேறில்லை. அதிலே சில ஆலோசனைகளைச் சொல்லி இருக்கிறோம் என்று சொல்லியிருப்பது எதிர்க்கட்சியில் இருப்பவர்களுடைய கடமை என்ற வகையில் ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்ற முறையிலேயே தவிர எதிர்க்கிறார்கள் என்று இல்லை. ஆகையினால் இந்தத் தீர்மானம் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இந்தியப் பேரரசுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது இதைப் பற்றி அவர்கள் சொல்லும்பேது, ''தமிழக சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது'' என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்-அங்குள்ள "பல தலைவர்கள். அதனை அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக் கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில் பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றி பேச வேண்டிய வாய்ப்பு கிடைத்த நேரத்தில் அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்கள் மெட்ராஸ் ஸ்டேட் என்று பேசி பழக்கப்பட்டவர் மிகுந்த அக்கறையோடும் மிகுந்த கவனத்தோடும் "Tamil Nad" என்று தான் பேசியிருக்கிறார். ஆக இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றைய தினம் இந்த அளவிலே அவையிலே நாம் பெற்று இருக்கிறோம்.

மதிப்புமிக்க திரு. ம.பொ.சி. அவர்கள் இதிலே மிகுந்த மன எழுச்சி பெற்றது இயற்கையானதாகும். அவர்கள் பல ஆண்டுகளாக ''தமிழ்நாடு'' என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு பாடுபட்டவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் என்பதிலே ''திராவிட'' என்பதை நினைத்துக் கொண்டிருப்பதாலே ''தமிழ்நாடு'' என்பதிலே அக்கறையில்லாமல் போய் விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில் ''தமிழ்நாடு'' என்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும், மற்றவர்கள் கொண்டு வருகிறார்களே என்பதினாலே முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டிருந்தாலும் இன்றைய தினம் அவர்களும் ''தமிழ்நாடு'' என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்த பெருமைப்படுகிறார்கள். ஆகையினால் இந்தத் தீர்மானம் எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு வெற்றி கிடைக்குமானால் அது இன்று கழகத்திற்கு வெற்றியல்ல; தமிழரசுக் கழகத்திற்கு வெற்றியல்ல; மற்றக் கட்சிகளுக்கு வெற்றியல்ல; இது தமிழுக்கு வெற்றி; தமிழருக்கு வெற்றி; தமிழ் வரலாற்றுக்கு வெற்றி; தமிழ்நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்கு கொள்ள வேண்டும்.

''தமிழ்நாடு என்ற பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள்'' என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்னால் இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் ''ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டி வரும்; அதனாலே சிக்கல்கள் விளையும்'' என்றெல்லாம் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் போய்வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களே தவிர உண்மையாகச் சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதைக் கவனப்படுத்தவில்லை. மதிப்பிற்குரிய நண்பர் பால சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக் சொன்னபடி ''கோல்டு கோஸ்ட்'' என்பது ''கணா'' ஆகிவிட்டது; அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டுவிடவில்லை. தமிழ்நாடு தனி நாடாகி இந்தப் பெயரை இடவில்லை; இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்து கொண்டு இந்தப் பெயரை இடுவதால் இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை ஒரு கடமையுணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், ''தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள். அதையும் அத்தனைபேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றைய தினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம் நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க காரியமாகும்.

நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் நெடுங் காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்ளுகின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள இருக்கிறார்கள். ''என்னுடைய பாட்டனார் காலத்திலே தான் நம்முடைய நாட்டுக்குத் ''தமிழ்நாடு'' என்று பெயர் இடப்பட்டது; எதிர்க்கட்சியில் உட்கார்ந்து

கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார்'' என்று கருத்திருமன் பேரப் பிள்ளைகளும், எங்களுடைய பேரப் பிள்ளைகளும், எதிர் காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்த ''ஆலோசனையை''க் கூடச் சொல்லாமல் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ளவில்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு சி.என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்ற இந்த நன்னாளில் ''தமிழ்நாடு'' என்று நான் சொன்னதும் ''வாழ்க'' என்று அவை உறுப்பினர்கள் சொல்வதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை: *தமிழ்நாடு!*

உறுப்பினர்கள்: *வாழ்க!*

மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை: *தமிழ்நாடு!*

உறுப்பினர்கள்: *வாழ்க!*

மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை: *தமிழ்நாடு!*

உறுப்பினர்கள்: *வாழ்க!*

(ஒ) ''மாநில சுயாட்சி'' பற்றிய அரசினர் தனித் தீர்மானத்தை 16.4.1974-ஆம் நாளன்று முன்மொழிந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:

தலைவரவர்களே, ''மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு,

பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவை களைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம் படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று-மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது.'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இந்திய நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெறப்போகும் சிறப்புமிக்க தீர்மானத்தை நமது தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்மொழிகிற பேறு பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிந்தனைச் செல்வம் மிகுதியாகப் பெற்றுள்ள இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தத் தீர் மானத்தின் நல்ல நோக்கத்தை ஆய்ந்து தெளிந்து தங்கள் பேராதரவை நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இந்தியாவின் வலிவும் பொலிவும் கெடாம லிருக்கவும் ஒருமைப்பாட்டுக்கு ஒரு துளி தீங்கும் நேரா மல் இருக்கவும் தன் பங்கு எப்போதும் உண்டு என்று தூளுரை மேற்கொண்டு அதனைச் செயல் வடிவிலும் பலமுறை நிரூபித்துக் காட்டியுள்ளது இன்றைய ஆளுங் கட்சியான தி.மு.கழகம் என்பதை அனைவரும் அறிவர்.

1962-ஆம் ஆண்டில் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டதும், சீன ஆக்ரமிப்பின்போது அந்த எதிரி களை நோக்கிப் போர் முழக்கம் செய்த பாடி வீடுகளில் ஒன்றாக இருந்ததும், பாகிஸ்தான் போக்கு முறியடிக்கப் பட இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களையும் முந்திக்கொண்டு ஆறு கோடி ரூபாய்க்கு மேல் தமிழகத் தின் சார்பில் போர் நிதி வழங்கியதோடு, போர் முனையில் நிற்கும் உணர்வுடன் வெற்றிக்கான வீரப் பணிகளைப் புரிந்ததும்- இன்றைய ஆளுங்கட்சியான தி.மு.கழகத்தின் நாட்டுப் பற்றுக்குச் சான்றுகளாகும்.

தேவையற்ற ஐயப்பாட்டுப் பின்னணியினூடே இந்தத் தீர்மானத்தின் நோக்கம் பற்றி சிந்தித்திட வேண் டாம் என்பதற்கே இவைகளைக் குறிப்பிட்டேன்.

இந்திய நாட்டில் கூட்டாட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை,

அகில இந்திய காங்கிரஸ் கட்சி, 1945-ஆம் ஆண்டு இந்திய மக்கள் முன் வைத்த தேர்தல் பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

''இந்தியக் கூட்டாட்சி என்பது, அதன் பல்வேறு பகுதிகளின்-விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். பகுதிகளுக்கு (அதாவது மாநிலங்களுக்கு) அதிகபட்ச சுதந்திரம் அளிப்பதற் காக எல்லோருக்கும் பொதுவான, முக்கிய அதி காரங்கள் கொண்ட குறைந்தபட்ச அதிகாரத்தைக் கூட்டாட்சி (மத்திய) அரசுக்கும், தேவைப்படும் பகுதிகள் (அதாவது மாநிலங்கள்) விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப் பட்டியலும் இருக்கலாம்.''

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இந்தத் தேர்தல் பிரகடனத்தைத் தொடர்ந்து, 1947-ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலும் மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்படும் அதிகாரங்களைத் தவிர, மற்ற எல்லா அதிகாரங்களும் சுயாட்சி உள்ள மாநிலங் களுக்கே உண்டு என்பது வலியுறுத்தப்பட்டது. அத் தீர்மானத்தின் பகுதியாவது:

''இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப்பகுதிகளும் இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப்பகுதிகளும், வேறு வெளியில் உள்ள பகுதி களும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங் கும். அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிறபடி யான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப் பொழுதுள்ள எல்லைகளுடனோ அவை அரசிய லமைப்புச் சட்டத்தின்கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங் களும் (Residuary Powers) அப்பகுதிகளுக்கே அளிக் கப்படும்.''

இந்தத் தீர்மானங்களும், தேர்தல் பிரகடனங்களும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பிறகு மறந்து விட்ட அல்லது மறைக்கப்பட்டுவிட்ட உண்மைகளாக ஆகிவிட்டன.

அந்த உண்மையை தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் பலமுறை வெளிக்கொணர்ந்து, அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று வாதிட்டி ருக்கிறது. மாநிலங்கள் தன்னுரிமை பெற்றுத் திகழ வேண்டும் என்ற கொள்கையை தமிழ் நாட்டில் தமிழ ரசுக் கழகமும் இடைவிடாது எடுத்துக்கூறி வந்திருக் கிறது.

1967-ஆம் ஆண்டு தி.மு. கழகத் தேர்தல் அறிக்கை பின் வருமாறு அமைந்தது:-

''ஒருமைப்பாடு என்பதை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, அது, ஒரு பகுதியினர் பிற பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக ஆகி விடாமல், பாதுகாத்திடும் பொறுப்பை தி.மு.கழகம் மேற்கொள்ள உறுதிகொண்டுள்ளது.

மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திட வும், பொருளாதார வளம் ஒருசீராக எல்லா மாநிலங் களுக்கும் அமைவதற்கான திட்டம் மேற்கொள்ளப் படவும் தி.மு.கழகம் பொறுப்புடன் பணியாற்ற உறுதி கொண்டிருக்கிறது.

மாநில உரிமைகளைப் பாதுகாத்திடும்முறையிலும், குறிப்பிடப்படாத எஞ்சிய அதிகாரங்கள் (Residuary powers) மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முறையை மாற்றி அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் கழகம் பாடுபடுவதுடன், அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தைத்

திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது.''

மாநிலங்கள் மத்திய அரசை அண்டி நிற்கும் நிலைகளையப்பட வேண்டுமென்ற கருத்தைச் சுட்டிக்காட்டி, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றிருந்தபோது 1967-68-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டினார்:-

''நமது கூட்டாட்சி அமைப்பில் (Federal set up) எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்க வேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற் கொள்ளுதல் வேண்டும். அரசியலமைப்பின் விதித்துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங் கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த பதினைந்து ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன. அயல்நாட்டு வாணிபம், நாணயச் செலாவணிக் கொள்கை, கடன் கொள்கை முதலியன குறித்து, அரசியலமைப்பில் வகை செய்துள்ள அதிகாரங்களின்கீழ், நமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிற்கே உரிய தாக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பில் குறிப்பிட்டுக் கூறப்படாத எஞ்சிய வரி விதிப்பு அதிகாரங்கள் (Residuary Powers) உட்பட, நீட்சித்திறன் பெற்ற வருமான இனங்களின்மீது மத்திய அரசிற்குள்ள உரிமை வாய்ப்பின் மூலமும், தேசீய வருமான பெருக்கத்தின் பெருமளவு பங்கினை ஈர்த்துச் செல்லும் நிலையிலே அது உள்ளது. இந்நிலைமை காரணமாக மாநிலங்கள் தங்கள் திட்டங்களையும் கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் விருப்பக் (Discretionary) கடன்களையும், உதவி மானியங்களையும் எதிர்நோக்கி நிற்கும் நிலையில் உள்ளன. பொதுக் கடன்கள்மூலம் மாநில அரசுகள் நிதி திரட்டி, தங்கள் நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்வதிலும், அரசியலமைப்பின் 293-வது பிரிவில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் நேரடியாகவும், ரிசர்வ் பாங்கியின் மூலம் மறைமுகமாகவும், அக்கடன்கள் எந்த நிபந்தனைகளுக்கும் வரையறைகட்கும் உட்பட்டுத் திரட்டப்படலாம் என கட்டுப்படுத்தும் உரிமையுடன் மத்திய அரசு விளங்குகிறது. ஐந்தாண்டுகட்கு ஒரு முறை மாநிலங்களின் நிதித் தேவைகளைப் பற்றி நிதிக்குழுக்களின் வாயிலாக நடுவு நிலையில் நின்று ஆராய வேண்டுமென்கிற ஏற்பாடும், அக்குழுக்களின் ஆய்வு வரம்பு குறித்து விதிக்கப்படும் பல்வேறு வரையறைகள் காரணமாக, மாநிலங்கள் மத்திய அரசினை அண்டி நிற்கும் நிலை பெருமளவில் குறைந்தபாடில்லை.''

அந்த நிதி நிலை அறிக்கையின் இறுதிப் பகுதியில் அண்ணா அவர்கள்,

''மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிய மறு சிந்தனை தேவை என்பதனை இப்பேரவை அறியும். இன்றுள்ள உறவு, உள்ளத்துக்கு நிறை தருவதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தை அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதுவரை வரிப்பங்கீடு, அதிகார வரம்பு, திட்டநிதி ஒதுக்கீடு ஆகியவற்றிலே கிடைத்துள்ள அனுபவம், கசப்பு நிரம்பியதாக இருப்பதை எவரும் மறுத்திட இயலாது; இந்தக் கசப்பு நீங்கிடவும், கனிவு கிடைத்திடவுமான முறையில் தொடர்புகள் அமைந்திட வழி காண்பது உடனடிப் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது. இது குறித்து அச்சமோ, ஐயப்பாடோ அல்ல, தெளிவான சிந்தனை தேவை. ஒருவருக்கொருவர் உள்ள நல்லெண்ணத்தினாலும், ஒருவரையொருவர் நன்கறிவதாலும் தோழமைத் தொடர்பு மகிழ்ச்சியும் பயனும் மிக்கதாக ஆக்கப்பட வேண்டும் என்பதே எனது அவாவாகும்'' என்று கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதன் பின்னர், 1969-ஆம் ஆண்டு ''ஹோம் ரூல்'' ஆங்கில ஏட்டில் அண்ணா அவர்கள் எழுதிய கடைசி கட்டுரையில்-

''அன்புள்ள தம்பி,

நான் பதவியைத் தேடி பைத்தியம் பிடித்து அலைபவனுமல்ல; காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்புக் கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டத்தின்கீழ் முதலமைச்சராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொண்டிருப்பவனுமல்ல. இதற்காக மத்திய அரசிற்கு எரிச்சல் ஏற்படுத்துவதும், டில்லியோடு சண்டை போடுவதும்தான் எனது நோக்கம் என்று-எனது நண்பர் ஈ.எம்.எஸ்-ஐப்போல் நான் பிரகடனம் செய்ய விரும்பவில்லை. அதனால் யாருக்கும் நன்மையில்லை. உண்மைதான்; சரியான பருவத்தில் ஒரு உறுதி ஏற்பட வேண்டுமென்பதுதான் முக்கியம். ஆனால் கூட்டாட்சி முறையைப்பற்றி மக்களுக்கு விளக்கம் கொடுப்பதை அதற்கு முன்னால் செய்ய வேண்டும். அந்தப் பணியில், அன்புத்தம்பி, உன்னுடைய உற்சாகமான ஒத்துழைப்பும், மனப்பூர்வமான பங்கேற்பும் எனக்குக் கிடைக்குமென்பதில் எனக்கு நிச்சயம் நம்பிக்கை உண்டு''

''பதவியில் இருப்பதன்மூலம், இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக் கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டு வர முடியுமானால் அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்''

என்று எழுதிய கருத்துக்களின் அடிப்படையிலும் 1967-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ஆம் நாள் புதுடெல்லியில் செய்தியாளர்கள் கூட்டத்தில், ''மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்களை வழங்கிவிட்டு; நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு எவ்வளவு அதிகாரங்கள் தேவையோ அவைகளை மட்டும் மத்திய அரசு வைத்துக்கொண்டால் போதும்; இப்படி அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கும், அரசியல் சட்டம் செயல்படுவதற்கும், உயர் அதிகார ஆணைக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும்'' என்று அவர் தெரிவித்த கருத்துக்கு ஏற்பவும், 1969-ஆம் ஆண்டு ஆகஸ்ட்19-ஆம் நாள் சட்டப் பேரவையில் நான் அறிவித்ததையொட்டி நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் மாநில சுயாட்சி அடிப்படையில் மத்திய மாநில உறவுகளை ஆராயுமாறு டாக்டர் இராஜமன்னார் தலைமையில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், திரு. பி. சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்ட குழுவை 1969 செப்டம்பர் 22-ஆம் நாள் இந்த அரசு அமைத்தது.

அதன் பிறகு 1971-ஆம் ஆண்டு தி.மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையில்,

''இந்திய அரசியல் முறை 'கூட்டாட்சி முறை' என்று வர்ணிக்கப்பட்டாலும், அந்தத் தராசு மத்திய அரசு

பக்கம் அதிக பட்சம் சாய்ந்திருப்பதால்; அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால்; அதே நேரம் இந்தியா வலுப் பெற்றதாக இருக்க வேண்டு மென்கிற இலட்சியத்திற்கும் ஊறு தேடாமல்; எந் தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற் காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்து விட்டு; இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப் படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி; மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கருதுகிறோம். இந்த நோக்கத்தோடு நமது அரசு அமைத்த வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு; அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும்.

அரசியல் துறை அதிகாரங்களும், நிதித் துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது; மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங் களை நுகர வேண்டுமென்கிற ஆசையால் அல்ல; மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற் கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும்-என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்பு கிறோம்''.

என்று குறிப்பிட்டிருப்பதை யாரும் மறந்திருக்க இயலாது.

1972-ஆம் ஆண்டு மைசூர் மாநில ஸ்தாபன காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்,

"Congress will fight in a determined manner for greater autonomy for the State and against all discrimination and step-motherly treatment by the Centre"

(மத்திய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப் பான்மை, பாரபட்சம் இவற்றுக்கு எதிராகவும், மாநிலத்திற்கு அதிகமான சுயாட்சி பெறுவதற்காக வும் காங்கிரஸ் கட்சி உறுதியாகப் போராடும்.)

என்று குறிப்பிட்டதையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வது பொருத்தமுடையதென்று நான் கருதுகின்றேன்.

1971-ஆம் ஆண்டு மே 27-ஆம் நாள் இராஜ மன்னார் குழுவின் அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை இந்திய நாட்டுத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட தலைமை அமைச்சர் அவர்கள் எனக்கு 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ஆம் தேதியிட்டு எழுதிய கடிதத்தில்,

"Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State Relations Inquiry Committee. Your Government will probably examine the recommendations of this report. As you know the Administrative Reforms Commission also 'went into this question and has already submitted a report which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issue and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours Sincerely,
(Sd.) INDIRA GANDHI".

(அன்புள்ள திரு. கருணாநிதி,

நீங்கள் ஜூன் 15-ந் தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. மத்திய மாநில உறவுகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையின் நகல் ஒன்றை கடிதத்துடன் அனுப்பியுள்ளீர்கள். அறிக்கையின் பரிந்துரை களை உங்களது அரசாங்கம் ஆய்வு செய்யுமென்று எண்ணுகிறேன். நிர்வாகச் சீரமைப்புக் குழுவும் இப்பிரச்சனை பற்றி ஆய்ந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அக்குழு அளித்துள்ள அறிக்கை எங்களது ஆய்வில் உள்ளது. இது குறித்து உங்கள் அரசின் கருத்துக்களையும் அனுப்பி வைத்தால் அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவோம். இவை முக்கியமான பிரச் சினைகள் என்பதால் எல்லா முதலமைச்சர்களு டனும் இது குறித்து கலந்து ஆய்வு செய்ய எண்ணி யுள்ளோம்.

தங்களன்புள்ள,
(ஒம்.) இந்திரா காந்தி)

என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

1972-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாள் டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசீய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் நான் பேசும்போது,

"Decentralisation is particularly necessary if a large country like ours is to cope with the problems of a modern economy. It is in this sense that our demand for State autonomy should be understood—as a request for more efficient management of the country's resources, as a means to enable the Centre to be strong in areas of vital national concern, as a method of enabling the minimum demands of our people to be met in the quickest time and in the most efficient manner".

(நமது நாடு போன்ற பெரிய நாட்டின் தற்காலப் பொருளாதாரச் சிக்கல்களை சமாளிப்பதெனில் அதிகாரங்கள் பரவலாக இருப்பது அத்தியாவசிய மானது. நாங்கள் எழுப்பியுள்ள மாநில சுயாட்சி கோரிக்கையின் நியாத்தினை இக்கோணத்தி லிருந்து காணவேண்டும். நாட்டின் வளங்களை இன்னும் திறமையாக நிர்வகிப்பதற்கான வேண்டு கோளாகவும், நாட்டின் ஆதாரமான காரியங் களில் மத்திய அரசு வலுவுடன் இயங்குவதற்காக சாதனமாகவும், மிகத் திறம்படவும் மிக விரை விலும் நம் மக்களின் குறைந்தபட்சத் தேவைகள் கிடைப்பதற்கான வழிவகையாகவுமே மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் கொள்ளவேண்டும்.)

என்ற அளவில் இந்த அரசின் கொள்கையைத் தெளி வாக்கி இருக்கின்றேன்.

டாக்டர் ராஜமன்னார் குழுவின் அறிக்கையை வரிக்கு வரி இந்த அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அரசின் கொள்கை, வெற்றிகரமாகப் படருவதற்கான கொழுகொம்பாகவே அந்த அறிக்கையை நாம் கருது கின்றோம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினை யில் மிக நிதானமாக முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்துடன் பல கட்டங்களில் இதுபற்றி ஆராயப் பட்டுள்ளது. ஆளுங்கட்சி சார்பில் அமைக்கப்பட்ட செழியன், மாறன் குழுவினரும் ராஜமன்னார் குழுவின் அறிக்கையை அணுகினர். மத்திய அரசின் நிர்வாகச்

சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிக்கையையும் அரசு பரிசீலித்தது. அதன் தொடர்பான கருத்துக்கள், இந்திய நாட்டு அரசியல் மேதைகளின் அபிப்பிராயங்கள், உலக நாடுகளின் நிலைமைகள் இவைகள் அனைத்தையும் ஆழச் சிந்தித்து ராஜமன்னார் குழு அறிக்கைமீதும்— மாநில சுயாட்சி கொள்கை மீதும்— தமிழக அரசின் கருத்துரைகள் என்ற அறிக்கையை இந்த அவையின் முன் வைத்திருப்பதோடு அதனை ஏற்றுக் கொள்ளும் தீர் மானத்தையும் உங்கள் மேலான வழிமொழிதலுக்காக வைத்துள்ளேன்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் களின் உள்துறை பற்றிய கருத்துப் பரிமாற்றக் குழு (Consultative Committee) கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப் பினர் திரு. தண்டபாணி பேசும் போது ''ராஜமன்னார் குழு தந்த அறிக்கையில், மத்திய மாநில அதிகாரங்கள் மறுபரிசீலனை பற்றி நல்ல கருத்துக்கள் இருப்பதாகவும், அதன்மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை'' என்று கூறியதற்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. தீட்சித் அவர்கள் அளித்த பதிலில், ''ராஜமன்னார் குழு மாநில அரசால் அமைக்கப்பட்ட குழு என்றும், அந்த அறிக்கையின் மீது மாநில அரசு இதுவரை தனது அபிப்பிராயத்தை மத்திய அரசுக்கு அனுப்பவில்லை'' என்றும் கூறியிருக்கிறார். ஆகவே, அந்தப் பதிலுக்கு ஏற்பவும், ராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றி இந்தப் பேரவையின் கருத்துக்களைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பியதற்கு ஏற்பவும், இந்திய மாநிலங்கள் அனைத் துக்கும் சுயாட்சித் தன்மை கிடைத்திடவும், மத்தியில் உண்மையான கூட்டாட்சி ஒளிவிடவும், இந்தத் தீர் மானத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

இந்திய நாட்டின் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. வான்முகட்டைத் தொடுவது போல் அசைந்தாடும் அந்தக் கொடியின் கம்பீரம் காண, முகில்களைக் கிழித்துக் கொண்டு நமது விழிகள் தாவுகின்றன. வங்கம் தந்த தங்கக் கவி தாகூர் எழுதிய தேசீய கீதம் நமது செவிகளில் குற்றால நீர்வீழ்ச்சியின் சங்கீத ஓசையாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. அடிமைப் பட்டுக் கிடந்த நாடு, தன்னை விடுவித்துக்கொண்டு தலை நிமிர்ந்து கிளம்பிய வரலாற்று வரிகள், உலகப் புத்தகத்தில் கோடிட்டு வைக்கப்பட்டுள்ளன.

சிறையிலிருந்த நாடு, விடுதலை பெற்று விட்டது. கதவு திறந்தது. பூட்டிய இருப்புக் கூட்டிலேயிருந்து கைதி புன்னகை மலர வெளியே வருகிறான். தந்தையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த தளிர்நடைச் செல்வம், இளங்கரம் தூக்கி, தாவியோடுகிறது அவனைத் தழுவிக்கொள்ள! அவனும் அடக்க முடியாத மகிழ்ச்சி வெள்ளம் கரை புரள மகனைத் தூக்கி முத்த மிடக் கரங்களை நீட்டுகிறான். கைகள் இயங்க முடி யாமல் தவிக்கின்றன. சிறையிலிருந்து தான் விடுபட்டு விட்டானே; இன்னும் என்ன தடை? தன்னை யார் தடுப்பது? சுற்றும் முற்றும் பார்க்கிறான். அவன் சிறையில் இல்லை; சுதந்திர பூமியில்தான் இருக்கிறான். பிறகு யார், தன் குழந்தையைக் கூடத் தழுவிட முடி யாமல் அவனைக் கட்டுப்படுத்துவது? யாருமல்ல; அவன் சிறையிலிருக்கும்போது அவன் கைகள் இரண்டையும் காலையும் சேர்த்து ஒரு விலங்கு மாட்டியிருந்தார்கள். விடுதலை அடைந்த பூரிப்பில், விலங்குகளைக் கழற்ற வேண்டுமென்ற நினைப்புகூட இல்லாமல் அவன் வெளியே வந்துவிட்டான். அவன் சுதந்திர மண்ணில் தான் இருக்கிறான். கை, கால், விலங்கு மட்டும் கழற்றப் படவில்லை. மனிதன் விடுதலையாகிவிட்டான். கை, கால்கள் மட்டும் கட்டுண்டு கிடக்கத் தேவையில்லையே; இந்தியா, விடுதலை பெற்று விட்டது. அதன் அவயவங் களைப் போன்ற மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்?

இந்தக் கேள்வியின் நீண்ட நாளைய தாகத்தைத் தீர்க்கும் நெல்லிக்கனியாகத்தான் இன்று இந்த அவை யின் முன்னால் இந்தத் தீர்மானத்தை முன்மொழி கின்றேன்.

அரசியல் சட்டம் என்பது திருத்தப்படக் கூடாத ஒன்றல்ல, நமது அரசியல் சட்டம் 30 தடவைகளுக்கு மேல் திருத்தப்பட்டிருக்கிறது.

மாநிலங்களின் மொழிகள் வளரவும், பண்பாட்டுத் தன்மைகள் காக்கப்படவும், மாநிலத்திற்கு மாநிலம் நல்லுறவுகள் வளரவும், மத்திய மாநில உறவுகள் நிலைத்துச் செழிக்கவும், நாட்டின் பொருளாதாரம் வளம் பெற்றுத் திகழவும், அரசியல் சட்டத்தில் இந்த மகத்தான மாறுதலைச் செய்வது எதிர்காலத்தில் இந்தியா வின் வலிமையையும் வளப்பத்தையும் பெருக்குவதற்கு அடித்தளமாக அமையும் என்பதை உணர்ந்து மத்திய அரசினர் செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள் கின்றேன். அதற்கு உறுதுணையாக உங்கள் ஒத்துழைப்பு அமையவேண்டுமென்று விழைகின்றேன். மக்களின் நல்வாழ்வை மையமாகக் கொண்டும், பெற்ற சுதந்திரத் தின் பயனை நாடு அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை நெஞ்சில் பதித்துக்கொண்டும், இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றிவைக்கும் இந்தச் சுடர் விளக்கு ஒளிவிட, அரசியல் மேதைகள் தூண்டுகோலாக இருக்கவேண்டுமென்றும் பணிவன்புடன் கோருகிறேன். வணக்கம். (ஆரவாரம்)

5. சட்டமன்ற மேலவையின் தோற்றமும் வளர்ச்சியும்

அரசின் அங்கங்கள் மூன்று. அவை, ஆட்சித்துறை, சட்டமன்றத்துறை, நீதித்துறை என்பன. இந்த மூன்றி னுள்ளும் சட்டமன்றத்துறையே தலைமைசான்ற சிறப் பிடத்தைப் பெற்றுள்ளது. ஏனெனில் அரசின் முதன்மை யானதும், அடிப்படையானதுமான ''சட்டமியற்றுதல்'' எனும் பணியைச் சட்டமன்றமே ஆற்றுகிறது. சட்ட மன்றம் சட்டங்களை இயற்றியபின்னர்தான் ஆட்சித் துறை அவற்றைச் செயற்படுத்துகிறது. நீதித்துறை அவற் றிற்குப் பொருள் விளக்கம் தருகிறது. உண்மையைக் கூறின் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களின் தன்மை யைப் பொறுத்தே சமுதாய வளர்ச்சியும் நலனும் அமையுமாதலால் மக்களின் முன்னேற்றத்தையும், நல் வாழ்வையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது சட்டமன்றம் எனலாம். எனவே, எல்லா ஜனநாயக அமைப்புகளிலும் ஒப்புயர்வற்ற அமைப்பாக விளங்கும் சட்டமன்றத் திடமே மாபெரும் பொறுப்பு சார்ந்திருக்கிறது.

கவர்னர் ஜெனரல் பேரவைக்கு ஒரு சட்ட உறுப் பினர்: இந்தியாவில் சட்டமன்றங்கள், 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் (Charter Act) மூலம் தோன் றின எனலாம். அப்போதுதான் முதன்முதலாக, சட்ட மியற்றும் ஒரே நோக்கத்திற்காக, இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பேரவைக்கு நான்காவது உறுப்பினர் ஒருவர் கூடுதலாக அமர்த்தப்பட்டார். ஆயினும் மாகாணங் களிலிருந்த சுதந்திரமான சட்டமியற்றும் அதிகாரங்களை இச்சட்டம் ஒழித்துவிட்டது. இவ்வாறு சட்டமியற்றும் அதிகாரம் கவர்னர் ஜெனரல் பேரவையின் தனி யுரிமையாகியது. அடுத்து இயற்றப்பட்ட 1853-ஆம் ஆண்டு பட்டயச் சட்டம், இந்தியச் சட்டமன்றங்களின் பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டமாகும். இந்தச் சட்டம் கவர்னர் பேரவையிலிருந்த சட்ட உறுப்பினரை ஒரு முழு உறுப்பினராக்கியது. அத்துடன் சட்டமியற்றும் நோக்கங்களுக்காக கவர்னர் ஜெனரல் பேரவை விரி வாக்கம் செய்யப்பெற்றது. இந்நோக்கம் ஈடேறும் வகையில் தலைமை நீதிபதி, கல்கத்தா உச்சநீதிமன்றத் தின் மற்றொரு நீதிபதி, மாகாணங்கள் அல்லது ஆளுநர் மாகாணங்கள் ஒவ்வொன்றையும் சேர்ந்த ஊதியம் பெறும் பிரதிநிதிகள் ஆகியோர் அப்பேரவையில் கூடு தலாகச் சேர்க்கப்பட்டனர்.

அரசுச் சார்பற்றவர்கள்: சட்டமன்றங்களின் வளர்ச் சியில் 1861 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம் ஒரு திருப்புமுனையாக விளங்கியது. இந்தச் சட் டத்தின்படி சென்னை மாகாண ஆளுநரின் நிர்வாக சபையில் தனிப்பணி நிமித்த உறுப்பினர்கள் (ad hoc Members) எட்டுப் பேர் நியமிக்கப்பட்டார்கள். இவர் களில் குறைந்தது பாதிப் பேர் அரசுச் சார்பற்றவர் களாக இருக்கவேண்டும் என்றும், அவர்களை ஆளுநர் நியமிக்க வேண்டும் என்றும், அவர்கள் ஈராண்டுக் காலத்திற்குப் பதவி வகிப்பார்கள் என்றும் இச்சட்டம் வகை செய்தது. சட்டமியற்றுவது மட்டுமே இந்தப் புதிய சட்டமன்றத்தின் பணியாக அமைந்தது. இந்த மன்றம் நடைமுறையில் ஓர் ஆலோசனைக் குழுவாக மட்டுமே இயங்கிவந்தது. ஆகவே விவாதங்கள் செய்து முடிவெடுக் கும் சிறப்புரிமைகள் எவையும் இதற்கு இருக்கவில்லை. **எனினும் ஆட்சித்துறையிலிருந்து பிரிந்து, சுதந்திரமாகத் தனித்தியங்கும் ''எதிர் காலச் சட்டமன்றங்களுக்கு'' இந்தச் சட்டமன்றமே வித்திட்டது என்பதை மறுப்பதற் கில்லை.** சென்னை மாகாணத்தில் ஆளுநரின் சட்ட மன்றத்திற்கு திரு. சி. சங்கரன் நாயர், திரு. வெங்கடகிரி ராஜா, திரு. வி. பாஷியம் ஐயங்கார் போன்றோர் உறுப்பினர்களாக நியமனம் பெற்றிருந்தார்கள். சென்னை கிராம மேல்வரிச் சட்டமுன்வடிவு, இந்து அறவழித் தேட்டச் சட்டமுன்வடிவு போன்றவை இந்தச் சட்ட மன்றத்தால் ஆய்வு செய்யப்பட்டவையாகும்.

சார்பாண்மைக் கொள்கை: (Principle of Representation) 1892 ஆம் ஆண்டில் சென்னைச் சட்டமன்றத்தின் பரிணாமம் அடுத்த முக்கியமான கட்டத்தை எட்டியது. அவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, சென்னைச் சட்டமன்றத்தில் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப் பட்டது. இவர்களில் ஒன்பதுக்கு மேற்படாதவர்கள் அரசு அதிகாரிகளாக இருப்பர். இந்தச் சட்டம், சார் பாண்மைக் கொள்கையினையும் மறைமுகமாகப் புகுத்தி யது. இந்தச் சட்டம், முந்தையச் சட்டத்தைவிடச் சற்று மேம்பட்டதாக இருந்தது. ஏனெனில் **ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவாதிக்கவும், நிருவாகம் மற்றும் முக்கிய மான பொதுநலன் பற்றியும், சில வரம்புகளுக்குட்பட்டு, வினாக்களை எழுப்பி அரசிடம் விளக்கம் கேட்கவும் இதில் வகை செய்யப்பட்டிருந்தது.**

இந்தச் சட்டத்தின்படி சென்னையில் அமைக்கப் பட்ட முதலாவது சட்டமன்றம் 17.1.1893 அன்று மாலை 3 மணிக்கு, புனித சார்ஜ் கோட்டையிலுள்ள மண்டபத்தில் கூடியது. இந்தச் சட்டமன்றத்தில் முதலாவது வினாவை, திரு. வி. பாஷியம் ஐயங்கார் என்னும் உறுப்பினரின் சார்பில் திரு. சி. சங்கரன் நாயர் எழுப்பினார். இந்த மன்றம், முதன்முதலாக 1893-94 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 2-5-1893 ஆம் நாளன்று விவாதித்தது. இந்த விவா தத்தில் இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே பங்குகொண் டனர். 1892 ஆம் ஆண்டுச் சட்டம் அமலில் இருந்து வந்த காலத்தில் திருவாளர்கள் வி. பாஷியம் ஐயங்கார், சங்கரன் நாயர், ஏ.டி. அருண்டேல், சி. ஜம்புலிங்க முதலியார், சி. விஜயராகவாச்சாரியார், ஐ. இரத்தின சபாபதிப் பிள்ளை, பி.எஸ். சிவசாமி ஐயர், விசய நகரப் பேரரசர் பொப்பிலி அரசர் போன்ற பல அறிஞர்கள் அரசுச் சார்பற்ற உறுப்பினர்களாக இடம் பெற்று மன்ற விவாதங்களுக்குச் சுவைகூட்டினர். சென்னை மேல்வரிச் சட்டமுன்வடிவு (1893) உடைமை யுரிமை சமீன் கிராமப்பணிச் சட்டமுன்வடிவு (1894), கிராம அலுவலர்கள் மரபு வழியுரிமைச் சட்டமுன்வடிவு (1895), மலபார் திருமணச் சட்டமுன்வடிவு, சென்னைக் குடிவாரச் சட்டமுன்வடிவு போன்ற முக்கிய மான சட்டங்கள் இந்தச் சட்டமன்றத்தில் சட்டங்களாக இயற்றப்பட்டன.

மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்: மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களை உள்ளடக்கிய 1909 ஆம் ஆண்டுச் சட்டம், சட்டமன்றத்தைத் திருத்தியமைத்து, விரிவாக்கு வதற்கு வகை செய்தது. முதன்முறையாக ஒருவகை மறைமுகத் தேர்தல் முறையையும் இந்தச் சட்டம் புகுத்தி யது. சென்னைச் சட்டமன்றத்தின் கூடுதல் உறுப்பினர் களின் எண்ணிக்கை இருபதிலிருந்து உச்ச அளவான ஐம்பதுக்கு உயர்த்தப்பட்டது. இதில் அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் பெரும்பான்மை பெற்றவர்கள். **பொது நலன் குறித்தும், வரவு-செலவுத் திட்டம் பற்றியும் தீர் மானங்கள் கொண்டுவருவதற்கு உறுப்பினர்களுக்கு, இந்தச் சட்டம் உரிமை வழங்கியது.** இந்த உரிமையின் படி முதலாவது தீர்மானத்தை முன்மொழிந்தவர்

திரு. கேசவ பிள்ளை ஆவார். அவர் கொண்டுவந்த தீர்மானம் வருமாறு:-

> ''சுற்றுப்பயணம் செல்லும் அரசு ஊழியர்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் வழங்கும் கடமையிலிருந்து கிராம மணியக்காரரை அல்லது கிராம அதிகாரியை விடுவிக்கும்படி கவர்னர் பேரவைக்கு இந்த மன்றம் பரிந்துரைக்கிறது.''

அவர் *1921*-இல் சட்டமன்றத் துணைத் தலைவரானார். முதன்முதலாகத் துணைக் கேள்விகள் கேட்கவும் அனுமதிக்கப்பட்டது. மூலவினா எழுப்பியவருக்கு மட்டுமே இந்த உரிமை வழங்கப்பட்டிருந்தாலும், இந்த உரிமை அரிதாகவே பயன்படுத்தப்பட்டது. திருவாளர்கள் பி. தியாகராயச் செட்டி, பி. கேசவபிள்ளை, முகமது ஹபிபுல்லா சாகிப், சம்பந்த முதலியார், கே.பி. இராமன் மேனன், டி.எம். நாயர், பி. இராஜகோபாலாச்சாரியார், டி.என். சிவஞானம் பிள்ளை, எம்.சி. ராஜா, பி. சிவராவ், எம்.சி. முத்தையாச் செட்டியார் போன்றோர், இந்தச் சட்டம் செயலாற்றலில் இருந்த *11* ஆண்டுகளில் இந்தச் சட்டமன்றத்தில் (Council) உறுப்பினர்களாக இருந்து இம் மன்றத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள். இந்தக் கால அளவின்போது, சென்னை வாடகை வண்டிச் சட்டமுன்வடிவு *(1911)*, மருத்துவத் தொழில் புரிவோர் பதிவுச் சட்டமுன்வடிவு *(1913)*, சென்னை நீர்பாசனச் சட்டமுன்வடிவு *(1914)*, சென்னை நகராட்சிச் சட்டமுன்வடிவு *(1919)*, தொடக்கக் கல்விச் சட்டமுன்வடிவு *(1920)*, உள்ளாட்சி மன்றங்கள் சட்டமுன்வடிவு *(1920)*, நகரமைப்புச் சட்டமுன்வடிவு *(1920)* முதலிய பல முக்கியமான சட்டங்கள் இந்தச் சட்டமன்றத்தில் (Council) நிறைவேற்றப்பட்டன.

இரட்டையாட்சி முறை மற்றும் மகளிர் வாக்குரிமை: *1919* ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை உள்ளடக்கியிருந்தது. இந்தச் சட்டம், மாகாணங்களில் இரட்டை ஆட்சியைப் புகுத்தி, பொறுப்பான அரசு அமைய வழி வகுத்தது. மாகாணச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் விகிதம் *70%*-க்கு மேல் உயர்த்தப்பட்டது. *127* உறுப்பினர்களைக் கொண்ட சென்னைச் சட்டமன்றம், மிகப்பெரிய சட்டமன்றமாக அமைந்தது. இந்தச் சட்டமன்றத்தில் சட்டமியற்றும் அதிகாரம், மாகாணம் சம்பந்தப்பட்ட பொருள்களை மட்டுமே தழுவியதாக இருந்தது.

இந்தச் சட்டமன்றத்தின் (Council) பதவிக்காலம் மூன்றாண்டு களாக வரையறுக்கப்பட்டிருந்தது. பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைக் குறித்து விவாதிப்பதற்கு ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கான உரிமை முதன்முதலாக வழங்கப்பட்டது. இந்த மன்றம், வரவு-செலவுத் திட்டத்தின் மீது வாக்களிக்க அதிகாரம் கொண்டிருந்தது. அத்துடன், மானியக் கோரிக்கைகளை மறுக்கவோ குறைக்கவோ அதிகாரம் பெற்றிருந்தது. ஆனால், அவ்வாறு மறுப்பதையோ, குறைப்பதையோ ஆளுநர் தம்முடைய சான்றளிப்பின் பேரில் நீக்கிவிடலாம். மகளிர்க்கு வாக்குரிமையளிக்கவும் இந்த மாகாணச் சட்டமன்றங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. சென்னைச் சட்டமன்றம் (Council) *1921* ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று நடைபெற்ற அதன் முதற்கூட்டத்திலேயே, வாக்குரிமை பெறுவதற்கு மகளிர்க்கு இருந்துவந்த தகுதியின்மையை நீக்கிவிடுவதற்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இச்சட்டமன்றத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். சென்னைச் சட்டமன்றத்திற்கு *1927*-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட முதற் பெண்மணி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார். இவர் பின்னர் சட்டமன்றத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

1919-இல் மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள் வருவதற்கு முன்பு, சட்டமன்றக் கூட்டங்களுக்கு ஆளுநரே தலைமை தாங்கினார். அவர் இல்லாதபோது நிருவாக சபையின் துணைத் தலைவர் தலைமை வகித்தார். இவர் பெரும்பாலம் நிருவாக சபையின் முதல் உறுப்பினராக இருப்பார். மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள் செயலுக்கு வந்தபின் தலைவரை நியமிக்கும் முறை நான்காண்டுக் காலத்திற்கு நீடித்தது. சட்டமன்றத்தில் முதல் தலைவராக ஆளுநரால் நியமிக்கப்பட்டவர் சர். பி. இராஜகோபாலாச்சாரியார் ஆவார். துணைத் தலைவராக *8-1-1921*-இல் திரு. கேசவபிள்ளை மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்றம் முதன்முதலாகத் தலைவரை தேர்ந்தெடுத்தது *1925* பிப்ரவரியில்தான். சட்டமன்றத்தில் செயலாளராக *1921* முதல் இருந்த திரு. எல்.டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை அதன் நியமிக்கப்பட்ட தலைவராக *1924* முதல் இருந்து வந்தார். பின்னர் அவரே சட்டமன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருக்குப்பின் சட்டமன்றத் தலைவராக திரு. எம். ரத்தினசாமி தேர்ந்தெடுக்கப்பட்டு, *1926* டிசம்பர் வரையில் அவர் அந்தப் பதவியை வகித்தார். அதன்பின், சட்டமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக விளங்கிய திரு. சி.வி.எஸ். நரசிம்ம ராஜு தலைவராகத் தேர்வு பெற்றார்.

மாண்ட்போர்டு சீர்திருத்தங்களின்படி அமைந்த நான்காவது சட்டமன்றம் (Council) *1930*, நவம்பர் *6* ஆம் நாளன்று கூடியது. இந்தச் சட்டமன்றத்தின் ஆயுட்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, *1936* இறுதி வரை அது செயற்பட்டது. *1935* ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி ''மாகாணத் தன்னாட்சி'' (Provincial autonomy) செயல்பாட்டுக்கு வந்தது. இந்தச் சட்டமன்றத்திற்கு *1930* முதல் *1936* வரை திரு. பி. இராமச்சந்திர ரெட்டி தலைவராக இருந்தார்.

இந்தச் சட்டமன்றம் அனுபவமும் ஆர்வமும் உள்ள மிகச் சிறந்த அறிஞர்களையும், புகழ்பெற்றவர்களையும் உறுப்பினர்களாகப் பெற்றிருந்தது. இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், பனகல் அரசர், சர். ஏ. இராமசாமி முதலியார், திரு. டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், சர். பி.டி. இராஜன், சர். சி.பி. இராமசாமி ஐயர், சர் முகமது உஸ்மான், திரு. எஸ். சத்தியமூர்த்தி, பொப்பிலி அரசர், டாக்டர் பி. சுப்பராயன், டாக்டர் சி.ஆர். ரெட்டி, சர். ஆர்.கே. சண்முகம் செட்டி, திரு. பி. சிவராவ், சர். கே.வி. ரெட்டி, சர். பி. தியாகராயச் செட்டி, சர். எஸ். வரதாச்சாரி (கூட்டாட்சி நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி) ஆகியோர் ஆவர்.

மாகாணத் தன்னாட்சி: *1935* ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம், சட்டமன்றங்களின் பரிணாமத்தில் மற்றொரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இந்தச் சட்டத்திற்கு மன்னர் *1935* ஆகஸ்டு *2* ஆம் நாளன்றே இசைவளித்துவிட்டபோதிலும், இது *1937* ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்றுதான் அமுலுக்கு வந்தது. அதுவும் மாகாணங்களின் நிருவாகம் தொடர்பான ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டுமே செயலுக்குக் கொண்டுவரப் பெற்றது. இதன்படி, *1937* இல் மாகாணத் தன்னாட்சி புகுத்தப்பட்டதும், மாகாணச் சட்டமன்றங்களுக்கு முன்பிருந்ததை விட அதிக அதிகாரங்கள் கிடைத்தன. ஒரு

பொறுப்பான அரசின் கீழ் மக்களாட்சி முறையில் அமைந்த சட்டமன்றங்களுக்குரிய அதிகாரங்களும், அலுவற்பணிகளும் மாகாண சட்டமன்றங்களுக்குக் கிடைத்தன. இந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாணத்தில் ஈரவைகளைக் கொண்ட சட்டமன்றம் அமைக்கப்பட்டது. ஆளுநரையும் ஈரவைகளையும் கொண்டதாகச் சட்டமன்றம் விளங்கியது. இந்த ஈரவைகளும், சட்டமன்ற மேலவை, சட்டமன்றப் பேரவை என அழைக்கப் பெற்றன. இவ்வாறாக சென்னைச் சட்டமன்றத்தில் இரண்டாவது அவை தோன்றியது. இந்திய அரசுச் சட்டத்தின் 71-ஆம் பிரிவின்படி, உறுப்பினர்களுக்குச் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட்டன. சட்டமன்றத்தில் பேச்சுச் சுதந்திரம் சட்டமன்றத்தில் ஆற்றும் உரைகளுக்காகச் சட்ட நடவடிக்கைகளிலிருந்து காப்புரிமையும் அளிக்கப்பட்டன. வேறு சிறப்புரிமைகளையும், உறுப்பினர்களுக்கு வழங்கச் சட்டமன்றம் சட்டமியற்றலாம். ஆனால், இந்த அதிகாரத்தைச் சென்னைச் சட்டமன்றம் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

1937 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் டாக்டர் யு. ராமாராவ் தலைவராக இருந்தார். 1946 ஆம் ஆண்டில் தலைவராகத் (President) தேர்ந்தெடுக்கப்பெற்ற திரு. ஆர். பி. ராம கிருஷ்ண ராஜூ 1950 வரையில் பணியாற்றினார். பின்னர் விடுதலை பெற்ற இந்தியாவில் 1950 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26 ஆம் நாள் முதல் அமுலுக்கு வந்த "இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கிணங்கவும் மேலவைத் தலைவராகத் (President) தொடர்ந்து பணியாற்றினார். சர். கேவி. ரெட்டி, ரைட் ஹானரபிள் பி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி, சர் முகமது உஸ்மான், திரு. கே. வெங்கடசாமி நாயுடு, திரு. சி. பெருமாள் சாமி ரெட்டி, டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், திரு. சி.என். முத்துரங்க முதலியார் மற்றும் திரு. ஓ.பி. ராமசாமி ரெட்டியார் (1947-48-ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் பிரதம அமைச்சர்) ஆகியோர் இக்காலத்தில் இச்சட்டமன்றத்தின் முக்கிய உறுப்பினர்களாவர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைந்த மேலவை: இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் மேலவை 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் முதல் பணியாற்றத் தொடங்கியது. மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 72. அவர்களில் பன்னிருவரை ஆளுநர் நியமனம் செய்வார். பேரவை, பட்டதாரிகள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் ஆகிய தொகுதிகளிலிருந்து எஞ்சிய இடங்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பெற்றனர். அகில உலகப் புகழ்பெற்ற அறுவை சிகிச்சை நிபுணரும், சென்னை மாகாண முன்னாள் மருத்துவத்துறைத் தலைவருமான டாக்டர் பி.வி. செரியன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1964-ஆம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினார். அவருக்குப் பின், முன்னாள் அமைச்சரும், சிறந்த பாராளுமன்றவாதியுமான திரு. எம்.ஏ. மாணிக்கவேலு மேலவைத் தலைவராகப் பொறுப்பேற்றார். 1970 ஆம் ஆண்டு வரையில் அவர் மேலவைத் தலைவராக இருந்தார். அதற்குப் பின்னால் திரு. சி.பி. சிற்றரசு அவர்கள் மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1976 ஏப்ரல் வரை அவர் தொடர்ந்து அந்தப் பதவியில் இருந்தார். 1976-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாள் குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டதன் காரணத்தால் மேலவைக் கூட்டத்தை இறுதி செய்தல் மற்றும் மேலவையைக் கூட்டுதல் தொடர்பான அரசமைப்பு சட்டப் பிரிவுகள் நிறுத்தி வைக்கப்பெற்றன. அதனால் புதிய மேலவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இல்லாது போய் விட்டது. அப்போது மேலவைத் துணைத் தலைவராக இருந்த திரு. ம.பொ. சிவஞானம் அவர்களே மேலவைத் தலைவரின் கடமைகளை ஆற்றி வந்தார்கள். 1952 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு (சனவரி) வரை மேலவை 51 கூட்டத் தொடர்களின் வாயிலாக 964 நாட்கள் கூடியது. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ஆம் நாள் திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள் மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து 1986 அக்டோபர் 31-ஆம் நாள் வரையில் 9 ஆண்டுக் காலம் அப்பதவியில் இருந்தார்.

அமைச்சராகும் தகுதி:

பேரவை, மேலவை ஆகிய ஈரவைகளில் எந்த ஒரு அவை உறுப்பினரானாலும் அமைச்சராவதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தடை இல்லை. விடுதலை பெற்ற இந்தியாவின் புதிய அரசமைப்புச் சட்டத்தின்படி முதன்முதலாக நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னால் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்ற திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் மேலவை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதைப் போன்றே மேலவை உறுப்பினராக இருந்த அறிஞர் டாக்டர். சி.என். அண்ணாதுரை அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1967 முதல் 1969 வரையில் இருந்தார்கள். 1952-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட ஒவ்வொரு அமைச்சரவையிலும் மேலவை உறுப்பினர் ஒருவராவது இடம் பெற்று வந்துள்ளார். திறமை வாய்ந்த சட்ட நிபுணர்களும், அனுபவம் உள்ள பாராளுமன்றவாதிகளும் நிறைந்திருந்தது மேலவைக்குரிய சிறப்பம்சமாகும். திரு. டி. பிரகாசம், உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. பதஞ்சலி சாஸ்திரி, சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் பி.வி. ராஜமன்னார், தலைசிறந்த கல்வியாளரும், கால் நூற்றாண்டுக் காலம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், சர். பி.டி. ராஜன், திரு. ஆர். வெங்கடராமன், சர். ஆர். கே. சண்முகம் செட்டி (மைய அரசின் முன்னாள் நிதியமைச்சர்), தீவிரமான தொழிற்சங்கத் தலைவரான திரு. சக்கரைச் செட்டி, சென்னை மாகாணத்தின் முன்னாள் ஆளுநரான சர் முகமது உஸ்மான், திருமதி கிளப்வாலா டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, திரு. எம். பக்தவச்சலம், நாமக்கல் கவிஞர் திரு. வி. இராமலிங்கம் பிள்ளை, எழுத்தாளராகவும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் முதன்முதலாக அமைக்கப்பட்ட மேலவையில் உறுப்பினராகவும் திகழ்ந்த திரு. ம.பொ. சிவஞானம் ஆகியோர் இம்மேலவை உறுப்பினர்களில் குறிப்பிடத் தகுந்தவர்களாவர்.

ஈரவைகளுக்கிடையேயான உறவு:

தமிழ்நாட்டில் ஈரவைகளுக்கு இடையேயும் நல்லுறவு நிலவி வந்துள்ளது. 1952-லிருந்து 1976 ஆம் ஆண்டு வரை 23 சட்டமுன்வடிவுகள் மேலவையில் அறிமுகப்படுத்தப்பட்டு பேரவைக்கு வந்து நிறைவேற்றப் பட்டுள்ளன. சென்னை விலங்குகள் மற்றும் பறவைகள் பலியைத் தடை செய்யும் சட்டமுன்வடிவு 1947, சென்னை பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், திறந்தவெளிகள் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு, 1958 ஆகிய இரண்டு தனியார் சட்டமுன்வடிவுகளும் மேலவையில் நிறைவேற்றப்பட்டு முதன்முதலாக பேரவையில்

ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டங்கள் ஆயின. அதைப் போன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட 14 சட்ட முன்வடிவுகளுக்கு மேலவை திருத்தங்களையும், பரிந் துரைகளையும் செய்துள்ளது. அவற்றில் 12 நேர்வுகளில் மேலவையின் திருத்தங்களை பேரவை ஏற்றுக் கொண் டுள்ளது. அவற்றில் ஒரு சட்டமுன்வடிவு மேலவையின் ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரையில் மேலவையின் திருத்தங்களைப் பேரவை நிராகரித்ததால் அச்சட்டமுன் வடிவுகளை மேலவை மறு ஆய்வு செய்து ஏற்றுக்கொண் டுள்ளது.

ஓர் அசாதாரண நிகழ்ச்சி

ஓர் அசாதாரணமான நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடு வது பொருத்தமாகும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் படி முதன் முறையாக நடைபெற்ற பொதுத் தேர்தலுக் குப் பிறகு அமைக்கப்பெற்ற சட்டமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுக் கூட்டத்தில் 1952-ஆம் ஆண்டு மே திங்கள் 6-ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றத் தொடங் கிய போது நடைபெற்ற நிகழ்ச்சிதான் அது. மேலவை யில் மூத்த உறுப்பினரான ஒருவர் திடீரென்று எழுந்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாகத் தெரி வித்து, உரையாற்றி முடித்துவிட்டு வேறு சில உறுப் பினர்களோடு வெளிநடப்பு செய்தார். அதற்குப் பிறகு தான் ஆளுநர் உரையாற்றினார். அந்நிகழ்ச்சி நடை பெற்ற ஒருவார காலத்திற்குப் பிறகு நடைபெற்ற மேலவைக் கூட்டத்தில் மேலவையின் முன்னவர், அவ்வுறுப்பினரின் நடத்தையை கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை மொழிந்தார். ஆயினும், அத்தீர்மானம் பின்னர் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது. இந்நிகழ்ச்சிக்குப் பிறகே மேலவை விதிகள் திருத்தப்பெற்றன. ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ, நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர் எவரும் அதைத் தடுப்பதோ அதில் குறுக்கிடுவதோ அவை உரிமை மீறிய செயலாகும் என்று கருதப்பட வேண்டுமென்றும் அச்செயல் குறித்து தலைவர் தீர்ப்பு அளிப்பார் என்றும் திருத்தம் செய்யப்பெற்றது. இந்தத் திருத்தமே பின்னர் இந்தியாவிலுள்ள பல சட்டமன்றங் களினுடைய விதிகளில் தகுந்த திருத்தங்களைச் செய்ய வழிகோலியது.

விவாத வாய்ப்பு:

வரவு செலவுத் திட்ட கூட்டத் தொடரின்போது பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக் கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது மேலவை உறுப்பினர்கள் விவாதம் நடத்தும் வாய்ப்பைப் பெறுகின்ற வகையில் ஒரு புதிய முறை சமீப காலத் திலே புகுந்தப்பட்டது. அத்தகைய விவாதங்களை அர சமைப்புச் சட்டம் தடை செய்யவில்லை. ஆயினும் மேல வையில் அந்த மானியக் கோரிக்கைகள் மீது வாக் கெடுப்பு நடத்த முடியாது. நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவை ஆய்வு செய்யும் உரிமை மேலவைக்கு இருப்ப தால் மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதிக்கும் வாய்ப்பு மேலவை உறுப் பினர்களுக்கு தரப்படவேண்டுமென்ற கோரிக்கை 1964-ஆம் ஆண்டிலிருந்து எழுப்பப்பட்டு வந்தது. இக் கோரிக்கை ஒருவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு மேலவை நடைமுறை விதிகளில் அதற்கேற்றவாறு திருத்தங்கள் 1972-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவிலேயே முதன்முதலாக சட்டமன்றங்கள் உருவாக்கப்பட்ட மாகாணங்களில் சென்னையும் ஒன்று. ஜனநாயகப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற மூன்று சட்டமன்றங்களில் சென்னைச் சட்டமன்றமும் ஒன்று என்பது பெருமைக்குரியது. இந்தியாவில் பாராளு மன்ற ஜனநாயகம் தழைத்து ஓங்கச் செய்வதில் இந்தச் சட்டமன்றம் ஆற்றியுள்ள பங்கு பாராட்டிப் போற்றத் தக்கதாகும்.

மேலவை நீக்கப்படுதல்

மேலவை நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் 14-5-1986 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் குறித்த சட்ட முன்வடிவு மக்களவை, மாநிலங்கள் அவை ஆகிய இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, 1-9-1986 ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் இசைவு பெறப் பட்டு, இந்திய அரசு சட்டம் எண் 40-ஆக வெளியிடப் பட்டது. இச் சட்டம் 1-11-1986 முதல் அமலுக்கு வந்த தால், மேலவை அன்று முதல் நீக்கப் பெற்றது.

மேலவை தோற்றுவிக்கப்படுதல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20-2-1989 ஆம் நாளன்று மேலவை தோற்றுவிக்கப்பட வேண்டு மென்ற தீர்மானம் நிறைவேற்றப் பெற்றுள்ளது.

6. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாறு

பண்டைக் காலந்தொட்டே இந்தியாவின் சோழ மண்டலக் கடற்கரை வாணிபத்தினால் மேலோங்கியிருந்தது. முதலில் ரோமானியர், கிரேக்கர், அராபியர்களும் பின்னர் காலக்கழிவில் டச்சுக்காரர்களும், டேனிஷ்காரர்களும், போர்ச்சுக்கீசியர்களின் எழுச்சிக்குப் பின், தொடர்ந்து வந்த பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயரும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தினர்.

கி.பி. 1630 ஆம் ஆண்டின் ஆரம்ப காலகட்டத்தில் இந்தியாவின் இரு பக்கங்களிலுமுள்ள கடலோரங்களிலிருந்து வியாபாரத்தைக் கவனித்து வந்த ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி தங்களுக்கென வளமிக்க நிரந்தர அடித்தளத்தைத் தேடியது. இந்நிலையில் மதராஸ் பட்டணம் என்றழைக்கப்பட்ட சிறு மீனவக் குப்பத்தினின்று மூன்று மைல்களுக்குள் இருந்த எவருக்கும் உரிமையற்றிருந்த ஓரிடத்தில் அங்குள்ள குப்பத் தலைவர்களின் அனுமதியோடு பேக்டர் பிரான்சிஸ் டே என்பவரால் இன்றைய சென்னை உருவாக்கப்பட்டது. அதற்கான ஒப்பந்தம் 1639-ஆம் ஆண்டு ஜூலை 22-ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனியினர் திரு. டே என்பவருக்கு, அரணுடன் கூடிய கோட்டை ஒன்று கட்ட அனுமதித் திருந்தும், மூன்று பக்கமும் மலைப் பாறைகளும், மணற்பாங்கான ஆறு மற்றும் கடற்பகுதி கொண்ட இவ்விடத்தில் மாளிகையொன்று கட்டுவதில் மகிழ்வுற்றாரில்லை; திரு. டே என்பவரின் மேலதிகாரியான ஆண்ட்ரூ கோகன் என்பவரின் ஊக்கமும் டேயின் சொந்தப்பணமுமே, இன்றைய புனித ஜார்ஜ் கோட்டை அந்நாளில் கட்டப்பட மூலகாரணமாயிற்று.

சென்னையைத் தோற்றுவித்த மூதாதையராகிய அவ்விருவரையும் இன்று எவரும் நினைப்பதே அரிதாயுள்ளது. காரணம் - அன்றைய கிழக்கிந்தியக் கம்பெனியினரே அவர்களைப் புறக்கணித்தனர். ஆனால், அவ்விருவரும் அக்கம்பெனியினின்று வெளியேறுவதற்கு முன்னர் கிழக்கிந்தியக் கம்பெனியின் அடித்தளமாக அமைந்த புனித ஜார்ஜ் கோட்டையை முழுமையாக உருவாக்கிய பின்னரே வெளியேறிச் சென்றனர்.

1640-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாள் திரு. 'டே' கோட்டையினைக் கட்டும் பணியினைத் துவக்கினார்; அவ்வாண்டு இறுதிக்குள்ளாகவே அது முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது. கோட்டைக்கு சூட்டப்பட்ட பெயர்க்காரணத்தை விளக்கி புனித ஜார்ஜின் நினைவு நாளாகிய ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாளில் கோட்டையை திரு 'டே' ஒப்படைத்தார். 1641-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாள், கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவரான திரு. கோகன் என்பவர் கோட்டையின் பொறுப்பை ஏற்றார். அன்று முதல் சென்னை வளர ஆரம்பித்தது. இன்றும் வளர்ந்து கொண்டே உள்ளது.

கிளைவ் முனை

ஆங்கிலப் பேரரசை உருவாக்கியவர்களான எலிஹூ யேல், ராபர்ட் கிளைவ், ஜோப் சார்னாக், ஆர்தர் வெல்லெஸ்லி (பின்னர் வாட்டர்லூவின் வெல்லிங்டன் என அழைக்கப்பட்டவர்), மாக்கன்ஸி, மன்ரோ, வில்லியம் பென்டிங்க், வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன் வாலிஸ் மற்றும் லார்டு வெல்லிங்டன் போன்ற பலர் இன்று உயர்ந்து நிற்கும் அகன்ற இம்மதில்களுக்குள்தாம் வாணிகத்தையே கற்றனர் எனலாம்.

பேரரசைத் தொடங்கி வைத்த ராபர்ட் கிளைவுடன் பிரெஞ்சுத் தளபதி டியூப்ளே முதன்முதலில் போரிட்டு, 1746-ல் புனித ஜார்ஜ் கோட்டை பிரெஞ்சுக்காரர்களின் வசமாகிய பின்னர், கிளைவ் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட்டார். மீண்டும் 1749-ல் புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயரின் வசமாகிய போது திரும்பி வந்தவர்களில் முதலிடத்தைப் பெற்றவர் ராபர்ட் கிளைவ்.

இங்கிருந்துதான் கிளைவ், ஆற்காடு மீது 1752-ல் போரிட்டு முதன்முதலாக வெற்றி பெற்றார். அமெரிக்க வாணிகருடைய இல்லமொன்றில் கடற்படை ஆட்சிக் குழு செயற்பட்டு வந்தது. கடற்படை சம்பந்தமான வழக்குகள் இங்கு நடத்தப்பட்டு வந்தன; இதுவே பின்னர் கிளைவ் இல்லமாயிற்று. பின்னர் இதனை ஆளுநர்கள் நகரில்லமாகப் பயன்படுத்தி வந்தனர். 1802 ஆம் ஆண்டில் விருந்து மண்டபம் ஒன்று கட்டப்படும் வரை இவ்வில்லம் விதி முறைகளுக்குட்பட்ட பொழுதுபோக்கிடமாகவும் பயன்பட்டு வந்தது.

பின்னர் சம்பளக் கணக்கு அலுவலகம் செயல்பட்டு வந்த இவ்வில்லத்தில் 1975-ல் கிளைவ் அவர்களை சிறப்பிக்கும் வகையில் மாடமொன்று கட்டி, அவரது சீரிய பணிகள் பற்றியும் மாளிகையின் தொன்மை பற்றியும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகம்

கிளைவைத் தொடர்ந்து பாஸ்டனில் பிறந்த திரு. 'யேல்' என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியராக சென்னையில் 1672-ல் பொறுப்பேற்று, பின்னர் 1687 முதல் 1692 வரை ஆளுநராகப் பணிபுரிந்தார். இவரது வருவாயின் ஒரு சிறு பகுதியைக் கொண்டு அமெரிக்க நாட்டில், கன்னக்டிகட் என்னுமிடத்தில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 'யேல்' பல்கலைக்கழகமாக உருமாறியுள்ளது. இப்பல்கலைக் கழகம்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது அவரைச் சிறப்பிக்கும் வகையில் ''டாக்டர்'' பட்டம் வழங்கியது.

இன்று ஆசியக் கண்டத்திலே உள்ள கொடிக் கம்பங்களிலேயே மிக உயரமானதொன்றாக விளங்கும் புனித ஜார்ஜ் கோட்டைக் கொடிக்கம்பத்தில் 'யேல்' அவர்கள் பொறுப்பில் புனித ஜார்ஜ் கோட்டை இருந்த காலத்தில் தான் ''யூனியன் ஜாக்'' எனும் ஆங்கிலேயக் கொடி 1687-ல் முதன் முதலில் ஏற்றப்பட்டது.

அந்நாளைய சென்னையின் வளர்ச்சியில் திரு. யேல் அவர்களுக்கு பெரும் பங்குண்டு. மிக உயரிய பண்பாடுகளுடையவரும், ஆங்கிலேயர் மற்றும் இந்தியர்களாலும் மிகவும் விரும்பப்பட்டவருமாகிய திரு.யேல் அவர்கள் தான் சென்னை மாநகராட்சியை அமைத்திடவும், புனித ஜார்ஜ் கோட்டையைப் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றிய போது சோழமண்டலக் கடற்கரையில் ஆங்கிலேயருக்குப் பற்றிடமாக விளங்க கடலூர் புனித டேவிட் கோட்டை கட்டப்படவும் பெரிதும் துணை புரிந்திருக்கிறார்.

மொகலாயர்களிடமிருந்து சோழ மண்டலத் துறைமுகங்கள் பலவற்றின் உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கென பெற்றுத் தந்ததோடு மொகலாய நாண

யத்தை அச்சிடும் உரிமையையும் திரு யேல் அவர்களே பெற்றுத் தந்தார். 1689-ல் முதல் இந்தியப் படையினை அமைத்ததோடு, திருவல்லிக்கேணி, தண்டையார் பேட்டை, புரசைவாக்கம், எழும்பூர் போன்ற பகுதி களின் முழு உரிமையையும், மொகலாயர்களிடமிருந்து மானியமாகப் பெற்றுத் தந்தார். இவர் பதவியை விட்டுச் சென்ற ஓராண்டு காலத்திலேயே கிழக்கிந்தியக் கம் பெனி நிர்வாகம் ஆட்டம் கண்டது.

பதவிக்காலம் முடிவுற்று ஓய்வு பெற்ற பின்னரும் தமக்கென ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டு, சென்னையிலேயே திரு. யேல் தொடர்ந்து வாழ்ந்தாலும், கம்பெனியின் பேரவை மண்டபத்தை உள்ளடக்கிய கோட்டையில்லத்தில் ஆளுநராக அவர் வாழ்ந்த ஆண்டுகளே அவரது வாழ்க்கையின் பொன்னான ஆண்டுகளாகும். இந்த இல்லம் 1694-95-ல் இடிக்கப் பட்டு, அந்த இடத்தில் மூன்றடுக்குக் கட்டிடமொன்று கட்டப்பட்டது. அதுவே இன்றைய தலைமைச் செயலகக் கட்டிடமாகும்; அதன் பக்கக் கட்டிடங்கள் பல 1825-ல் கட்டப்பட்டு இதனுடன் சேர்க்கப்பட்டன. சென்னையில் உள்ள நவீன கட்டிடங்களில் இக்கட்டிடமே பழமை மிக்க இரண்டாவது கட்டிடமாகவும், புனித மேரி கிறித்துவ ஆலயத்தைவிட பதினைந்து ஆண்டுகள் இளமையானதும் ஆகும்.

கோட்டையில் இன்றுள்ள தலைமைச் செயலகம் நேர்த்தியான கட்டிட அமைப்புள்ளதாகும்: இயற்கை வனப்புடைய கலையழகு ஒளிரும் இக்கட்டிடத்தின் முன்பகுதியில்தான் சட்டமன்றப் பேரவை மண்டபம், 1910-11-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

புனித மேரி ஆலயம்

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கிறித்துவ ஆலயம், வான் முகட்டைத் தொடுவது போன்ற இதன் உயரமான கோபுரம் கோட்டையிலுள்ள கட்டிடங்கள் அனைத்தி லும் சிறப்பு வாய்ந்ததாகும். 1678-80-ன் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் முதன் முதலாகக் கட்டப்பட்ட ஆங்கிலேய பிராட்டஸ்டண்ட் ஆலயமாகிய இஃது ஆசி யாவிலேயே மிகத் தொன்மை வாய்ந்ததாகும்; இவ்வால யம் கோட்டையில் குடியிருந்தோர்களிடமிருந்து திரட்டப் பட்ட தொகையினின்று கட்டப்பட்டதாகும்; தொகை யளித்தவர்களில் முதலிடம் வகித்தவர் ஆளுநர் ஸ்டி ரைன்ஷாம் மாஸ்டர்; இவ்வாலயம் 1678-ஆம் ஆண் டில் 'தூய கன்னி மேரி' யின் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 1680 அக்டோபர் திங்கள் 28-ஆம் நாள் புகுவிழா நடத்தப்பட்டது.

இவ்வாலயத்தில் புகுவிழா நாளிலிருந்து, சென்னை வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த பல அரும் பொருள் கள் சேகரிக்கப்பட்டு பார்வைக்கென வைக்கப்பட்டுள் ளன. வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள இவ்வாலயம் ஓர் அரும் புதைய லாகும். புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் காணப்படும் ஆலயத்தின் பதிவேட்டில் 1753-ல் ராபர்ட் கிளைவ் அவர்களின் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 4.11.1680-ல் விதவையாகிய மேரி ஹென்மொர்ஸ் என் பவரை திரு.யேல் அவர்கள் செய்து கொண்ட திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, ஜோப் சார்னாக் அவர் கள் குழந்தைகளின் ஞானஸ்நானம் செய்வித்த நிகழ்ச் சியும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பழைய ஆங்கிலேயரின் கல்லறையினின்று அகற்றப் பட்ட கல்லறைக் கற்கள் புனித மேரி ஆலயத்தின் குறுகிய முற்றத்தில் பதிக்கப்பட்டுள்ளன. கம்பெனியின் நான்காவது முகவரான திரு. ஆரன் பேக்கர் அவர் களின் மனைவியான திருமதி எலிசபெத் அவர்களின் கல்லறைதான் தொன்மையானதாகும். இதில் 1652 ஆகஸ்ட் 5 என பொறிக்கப்பட்டுள்ளது. மன்ரோ, ஹோபார்ட், பிகாட் போன்ற அருந்தகையாளர்கள் பலரும், ஆளுநர்களின் மனைவியர் இருவரும் இவ்வால யத்தில் புதைக்கப்பட்டுள்ளனர்.

கோட்டை அருங்காட்சியகம்

தலைமைச் செயலகத்தின் வடபுறத்தில் அமைந்துள்ள கோட்டை அருங்காட்சியகம் ஒரு காலத்தில் கோட்டை அதிகாரிகளின் உணவகமாகப் பயன்பட்டு வந்தது. இக்காட்சியகம் இருக்குமிடத்தில் முதலில் தடையற்ற வணிகரில்லம் செயல்பட்டு வந்தது, பின்னர் இவ் வில்லம் கையகப்படுத்தப்பட்டு, இடிக்கப்பட்டு, தற் போதுள்ள கட்டிடம் 1787-90-க்கு இடைப்பட்ட ஆண்டு களில் கட்டி முடிக்கப்பட்டது. சென்னை வங்கியின் முன்னோடியான வங்கியொன்று கீழ்தளத்தில் செயல் பட்டு வந்தது. பின்னர் அது பம்பாய் மற்றும் வங்காள வங்கியோடு இணைக்கப்பட்டு இம்பீரியல் வங்கியாகி தற்போது பாரத ஸ்டேட் வங்கியாகச் செயல்பட்டு வருகிறது.

முதல் மாடியிலுள்ள நீண்ட அறை பொது மண்டபமாகச் செயல்பட்டதோடு அதன் மீது 99 அடி உயரத்தில் 1796-ல் கட்டப்பட்ட சென்னையின் முதல் கலங்கரை விளக்கத்தின் தூண் கடலில் 25 மைல்களுக்கு அப்பாலிருந்த பாய்மரங்களின் உச்சிக்குத் தென்படும் வகையில் அமைக்கப்பட்டது.

1948-ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட, இவ்வருங் காட்சியகத்தில், சென்னையை உருவாக்கிய சான்றோர் பலரின் சொந்தக் கையெழுத்திட்ட மூலப்பிரதிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. வண்ணம் தீட்டப்பட்ட பழைய காலத்து படங்களும், முழு உருவப்படங்களும், சுவர்களை அலங்கரிக்கின்றன.

படைக்கலன்கள் உள்ள அறையில் படைக்கலன்களை பயன்படுத்தும் முறை பற்றியும் தெளிவாக எழுதி வைக்கப்பட்டுள்ளது.

பழங்காலத்து நாணயங்களும், வெள்ளி மற்றும் பீங்கானால் செய்யப்பட்ட பாத்திரங்களும், கையெழுத்துப் பிரதிகளும், சீருடைகளும், செதுக்கு வேலை மற்றும் இழைபாடான மற்ற செம்புப் பாத்திரங்கள் அருங் காட்சியகத்தின் பல்வேறு பிரிவுகளில் பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளன.

7. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மிகப் பழமை வாய்ந்ததும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும். இந்தியாவிலுள்ள மிகப் பழமையான சட்டமன்றங்களில் இதுவும் ஒன்று. இச்சட்டமன்றத்திற்கென தனியான வரலாறு உண்டு. தமிழகத்தில் சட்டமன்றம் 1861-ஆம் ஆண்டு இந்தியன் கவுன்சில்ஸ் சட்டம் நிறைவேற்றப் பட்டதிலிருந்து அமைக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள லாம்.

1909-ஆம் ஆண்டு இந்திய அரசின் சட்டப்படி, அன்றைய சென்னையின் மேதகு ஆளுநராக இருந்த சர்.ஆர்தர் லாலி என்பவரது ஆணைப்படி, சட்டமன்றப் பேரவை மண்டபம் 1910-11-ல் கட்டப்பட்டது. இக் கட்டிடம் மேதகு லார்டு வில்லிங்டன் ஆப் ராட்டன் அவர்களது காலத்தில் 1919 இந்திய அரசுச் சட்டத்தின் படி மாற்றியமைக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு (Legislative Council) இட வசதியளிக்கும் பொருட்டு 1920-ல் விரி வாக்கப்பட்டு, 1921 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10-ஆம் நாள் இளவரசர் கன்னாட் கோமகனால் திறந்து வைக்கப்பட்டது. இச்சட்டமன்ற முகப்பில் 20 கருப்புச் சலவைக் கல் தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஜோப் சார்னாக் என்பவரது பெயராலேயே ''சார் னாக்கைட்'' என அழைக்கப்படும் பல்லாவரம் படிக வகையைச் சார்ந்த கருப்புச் சலவைக்கல் தூண்கள், கல்கத்தாவிலும், வில்லியம் கோட்டையிலும் இவரால் கண்ணுறப் பெற்று, அதே போன்று 1732-ஆம் ஆண்டில் இவற்றில் சிறந்த 32 தூண்களும் கோட்டை சதுக்கத் தினின்று (தற்போது அணிவகுப்புத் திடல்) கடற்கதவு வரை (தற்போது இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ள முதன்மை வாயில்கள் வரை) சீர்வரிசைப்படி (காலனேட்) அமைக்கப்பட்டன.

1746-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றியபோது இத்தூண்கள் அனைத்தும் பாண்டிச்சேரிக்குக் கொண்டு செல்லப் பட்டன. 1761-ஆம் ஆண்டில் அத்தூண்கள் திரும்பச் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு மீண்டும் பழைய இடத்திலேயே பொருத்தப்பட்டன. அப்போது சென்னை யின் ஆளுநராக இருந்த சர். ஆர்தர் லாலி அவர்களது ஆணைப்படி 1910-11-ல் கட்டிட புனர் நிர்மாணப் பணியின்போது இவற்றில் 20 தூண்கள் சட்டமன்ற மண்டபத்தோடு இணைக்கப்பட்டு தற்போதுள்ள கட்டிட அமைப்பு உருவாக்கப்பட்டது.

1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் 1937-ல் இரு அவைகள் கொண்ட சட்டமன்ற முறை அமலாக்கப்பட்டபோதும்கூட சட்டமன்ற மேலவை 1939 ஆகஸ்ட் திங்கள் வரை இம்மண்டபத்திலேயே தொடர்ந்து நடைபெற்று வந்தது. சட்டமன்றப் பேரவை 1937-ஆம் ஆண்டு முதன்முதலாகக் கூடிய நேர்வில் சேப்பாக்கத்திலுள்ள பல்கலைக் கழக ஆட்சிக் குழு மண்டபத்தில் செயல்பட்டு வந்தது.

பின்னர் 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் பேரவை கோட்டையிலுள்ள இந்த மண்டபத்தில் செயல்பட்டு, 1952 மே திங்களில் சென்னை அரசினர் தோட்டத் திலுள்ள புதிய சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. அதன்பின் கோட்டையிலுள்ள இம்மண் டபத்தில், சட்டமன்ற மேலவை செயல்பட்டு வந்தது. 1957-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்குப்பின் சட்டமன்றப் பேரவை, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள இம்மண்டபத்தில் செயல்பட ஆரம் பித்தது.

இச்சட்டமன்ற மண்டபத்திலுள்ள மர வேலைப் பாடுகளும் கருநிற மற்றும் வெண்ணிற சலவைக் கற்களில் செய்யப்பட்ட வேலைப்பாடுகளும் இதன் அழகை மேம்படுத்திக் காட்டுகின்றன. 1921-ல் அமைக்கப்பட்ட சென்னை சட்டமன்ற மேலவையில் முதல் தலைவராகிய மாண்புமிகு சர். இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மற்றும் 1924-25ல் சட்டமன்ற மேலவைத் தலைவராகப் பதவி வகித்த மாண்புமிகு திவான் பகதூர் டி. சாமிக் கண்ணு ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் புகுமுக மண்டபத்தையொட்டியுள்ள தாழ்வாரத்தில் விக்டோரியா மகாராணி அரசில் பிரதமர்களாகப் பதவி வகித்த திரு வாளர்கள் பெஞ்சமின் டிஸ்ராலி (1804-1881) வைகவுண்ட் பார்ஸ்டன் (1784-1865) வில்லியம் ஈவார்ட் கிளாட்ஸ்டன் (1809-1868) மற்றும் லார்டு (மார்க்குவெஸ்) சாலிஸ்பெரி (1803-1903) ஆகியோரின் திருவுருவப்படங்களுடன் திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கார், மகாத்மா காந்திஜி, தந்தை பெரியார் ஈ.வே.ரா. மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரது முழு உருவப் படங்களும் இப்பேரவை மண்டபத்தை அலங் கரிக்கின்றன.

பேரவை மண்டபத்தின் மேல் விதானத்திலிருந்து தொன்மைக் காலச் சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் அழகிய வேலைப்பாடுகள் மிக்க கண்ணாடிச் சர விளக்குகள் (சாண்ட்லியர்) மத்திய பகுதியில் தொங்க விடப்பட்டுள்ளது இவ்வரங்கின் சிறப்பம்சமாகும்.

''பேரவைத் தலைவரின் பீடுமிக்க இருக்கை''

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொலிவுக்கு அணி செய்யும் ''பேரவைத் தலைவரின் இருக்கை'' இங்கி லாந்துப் பாராளுமன்றத்தில் உள்ள பேரவைத் தலை வரின் இருக்கையின் வடிவமைப்புப் போன்றது. இங்கி லாந்துப் பாராளுமன்ற அவைத் தலைவராக இருந்தவர் ஸ்பீக்கர் பிராண்ட். அவருடைய பேரனான லார்டு வெலிங்டன் சென்னை மாகாண கவர்னராக இருந்தார். அவரும், அவரது மனைவியாரும் சட்டமன்றப் பேர வைக்கு அளித்த அன்புப் பரிசே பீடுமிக்க இந்த இருக்கையாகும். 1922ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவ்வாறு பரிசளிக்கப்பட்ட அழகான கலை நுணுக்கம் மிகுந்த இருக்கைதான் இம்மலரின் பின் அட்டையை அலங்கரிக்கும் ''பேரவைத் தலைவரின் இருக்கை'' ஆகும்.



சட்டமன்றப் பேரவை

இணைப்புகள்

(அ) சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர்கள் பற்றிய ஓர் கண்ணோட்டம்

1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இரண்டு சட்டமன்றப் பேரவைகளின் கூட்டத் தொடர்கள் மற்றும் கூடிய நாட்கள் பற்றிய விவரம்

1937-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதல் சட்டமன்றப் பேரவை காலத்தில் கூட்டப்பட்ட தொடர்கள்	-	4
மொத்தம் கூடிய நாட்கள்	-	109
1946-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது சட்டமன்றப் பேரவை காலத்தில் கூட்டப்பட்ட தொடர்கள்	-	10
மொத்தம் கூடிய நாட்கள்	-	412

இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது சட்டமன்றப் பேரவை - 1952-57

கூட்டத் தொடர்கள்	-	9
மொத்தம் கூடிய நாட்கள்	-	314
உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொள்ளும் பொருட்டு இரவு நேரத்தில் பேரவை கூட்டங்கள் நடந்தன. அவற்றின் எண்ணிக்கை	-	12

இரண்டாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - 1957-62

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	29.04.1957 முதல் 5.09.1957 வரை	32
2.	இரண்டாவது	25.10.1957 முதல் 30.11.1957 வரை	20
3.	மூன்றாவது	8.02.1958 முதல் 1.05.1958 வரை	36
4.	நான்காவது	3.09.1958 முதல் 13.11.1958 வரை	27
5.	ஐந்தாவது	4.02.1959 முதல் 1.04.1959 வரை	35
6.	ஆறாவது	20.04.1959 முதல் 13.06.1959 வரை	9
7.	ஏழாவது	31.08.1959 முதல் 6.11.1959 வரை	12
8.	எட்டாவது	5.12.1959 முதல் 11.05.1960 வரை	39
9.	ஒன்பதாவது	5.08.1960 முதல் 29.09.1960 வரை	19
10.	பத்தாவது	19.01.1961 முதல் 9.01.1962 வரை	76
		மொத்தம்	305

மூன்றாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - 1962-67

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	29.03.1962 முதல் 19.11.1962 வரை	40
2.	இரண்டாவது	29.01.1963 முதல் 6.06.1963 வரை	35
3.	மூன்றாவது	6.08.1963 முதல் 3.12.1963 வரை	16
4.	நான்காவது	17.01.1964 முதல் 01.09.1964 வரை	46
5.	ஐந்தாவது	16.10.1964 முதல் 26.10.1964 வரை	8
6.	ஆறாவது	19.01.1965 முதல் 13.05.1965 வரை	34
7.	ஏழாவது	27.07.1965 முதல் 13.12.1965 வரை	23
8.	எட்டாவது	28.01.1965 முதல் 11.04.1966 வரை	35
9.	ஒன்பதாவது	1.08.1966 முதல் 17.12.1966 வரை	15
		மொத்தம்	252

நான்காவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - 1967-70

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	15.03.1967 முதல் 28.09.1967 வரை	37
2.	இரண்டாவது	24.11.1967 முதல் 31.11.1968 வரை	6
3.	மூன்றாவது	10.02.1968 முதல் 2.04.1968 வரை	34
4.	நான்காவது	16.08.1968 முதல் 28.12.1968 வரை	13
5.	ஐந்தாவது	25.01.1969 முதல் 13.06.1969 வரை	33
6.	ஆறாவது	14.08.1969 முதல் 17.11.1969 வரை	15
7.	ஏழாவது	19.01.1970 முதல் 12.05.1970 வரை	41
8.	எட்டாவது	24.08.1970 முதல் 14.10.1970 வரை	14
9.	ஒன்பதாவது	25.11.1970 முதல் 2.01.1971 வரை	6
		மொத்தம்	199

ஐந்தாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - 1971-76

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	22.03.1971 முதல் 3.04.1971 வரை	10
2.	இரண்டாவது	19.06.1971 முதல் 30.07.1971 வரை	36
3.	மூன்றாவது	21.10.1971 முதல் 06.01.1972 வரை	17
4.	நான்காவது	22.01.1972 முதல் 06.04.1972 வரை	35
5.	ஐந்தாவது	9.08.1972 முதல் 15.11.1972 வரை	13
6.	ஆறாவது	2.12.1972 முதல் 29.12.1972 வரை	12
7.	ஏழாவது	2.02.1973 முதல் 5.04.1973 வரை	41
8.	எட்டாவது	2.08.1973 முதல் 14.08.1973 வரை	14
9.	ஒன்பதாவது	19.11.1973 முதல் 04.12.1973 வரை	14
10.	பத்தாவது	17.01.1974 முதல் 20.04.1974 வரை	48
11.	பதினொன்றாவது	12.08.1974 முதல் 28.08.1974 வரை	14
12.	பன்னிரண்டாவது	12.12.1974 முதல் 23.12.1974 வரை	10
13.	பதிமூன்றாவது	20.02.1975 முதல் 02.05.1975 வரை	47
14.	பதினான்காவது	22.10.1975 முதல் 12.11.1975 வரை	17
		மொத்தம்	325

ஆறாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - 1977-80

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	4.07.1977 முதல் 29.08.1977 வரை	38
2.	இரண்டாவது	28.12.1977 முதல் 07.04.1978 வரை	51
3.	மூன்றாவது	30.08.1978 முதல் 14.09.1978 வரை	10
4.	நான்காவது	09.02.1979 முதல் 30.04.1979 வரை	58
5.	ஐந்தாவது	26.10.1979 முதல் 10.11.1979 வரை	13
6.	ஆறாவது	30.01.1980 முதல் 13.02.1989 வரை	9
		மொத்தம்	179

ஏழாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - 1980-84

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	19.06.1980 முதல் 12.08.1980 வரை	39
2.	இரண்டாவது	21.01.1981 முதல் 14.05.1981 வரை	67
3.	மூன்றாவது	21.08.1981 முதல் 01.09.1981 வரை	10
4.	நான்காவது	01.02.1982 முதல் 7.04.1982 வரை	47
5.	ஐந்தாவது	06.09.1982 முதல் 10.09.1982 வரை	5
6.	ஆறாவது	21.01.1983 முதல் 27.04.1983 வரை	61
7.	ஏழாவது	24.10.1983 முதல் 18.11.1983 வரை	17
8.	எட்டாவது	14.02.1984 முதல் 28.04.1984 வரை	48
9.	ஒன்பதாவது	08.10.1984 முதல் 15.10.1984 வரை	7
		மொத்தம்	301

கூடிய நாட்கள்

வரிசை எண்	கூட்டத்தொடர்	காலம்	கூடிய நாட்கள்
1.	முதலாவது	25.02.1985 முதல் 19.07.1985 வரை	59
2.	இரண்டாவது	09.01.1986 முதல் 15.03.1986 வரை	52
3.	மூன்றாவது	12.11.1986 முதல் 22.12.1986 வரை	11
4.	நான்காவது	27.02.1987 முதல் 11.05.1987 வரை	43
5.	ஐந்தாவது	09.11.1987 முதல் 18.11.1987 வரை	8
6.	ஆறாவது	25.01.1988 முதல் 28.01.1988 வரை	2
		மொத்தம்	175

(ஆ) தமிழ்நாட்டு ஆளுநர்கள் - 1937-ஆம் ஆண்டு முதல்

வரிசை எண்	பெயர்	காலம்
1.	லார்டு எர்ஸ்கின், ஜி.சி.ஐ.இ.	15.11.1934 முதல் 12.03.1940 வரை
2.	சர் ஆர்தர் ஆஸ்வால்டு ஜேம்ஸ் ஹோப், ஜி.சி.ஐ.இ.	12.03.1940 முதல் 26.02.1946 வரை
3.	சர் ஹென்றி ஃபாலி நைட், கே.சி.எஸ்.ஐ., சி.ஐ.இ., ஐ.சி.எஸ்.	26.02.1946 முதல் 6.05.1946 வரை
4.	சர் ஆர்ச்சிபால்டு எட்வர்டு நை, ஜி.சி.ஐ.இ., கே.சி.பி., கே.பி.எஸ்.எம்.சி.	6.05.1946 முதல் 7.09.1948 வரை
5.	சர் கிருஷ்ண குமாரசிங்ஜி பவசிங்ஜி கே.எஸ்.சி.ஐ., பவநகர் மகாராஜா	7.09.1948 முதல் 12.03.1952 வரை
6.	திரு. ஸ்ரீபிரகாசா	12.06.1952 முதல் 10.12.1956 வரை
7.	ஸ்ரீ. ஏ. ஜே. ஜான்	10.12.1956 முதல் 30.09.1957 வரை
8.	டாக்டர். பி.வி. ராஜமன்னார் தலைமை நீதிபதி-தற்காலிக ஆளுநர்	1.10.1957 முதல் 24.01.1958 வரை
9.	ஸ்ரீ. பிஷ்ணுராம் மேதி	24.01.1958 முதல் 3.05.1964 வரை
10.	ஸ்ரீ. ஜெயசாமராஜ வாடியார் பகதூர்	4.05.1964 முதல் 22.11.1964 வரை 8.02.1965 முதல் 12.08.1965 வரை 20.09.1965 முதல் 3.01.1966 வரை
11.	திரு.பி. சந்திரா ரெட்டி தலைமை நீதிபதி-தற்காலிக ஆளுநர்	24.11.1964 முதல் 7.02.1965 வரை 13.08.1965 முதல் 19.09.1965 வரை 4.01.1966 முதல் 27.06.1966 வரை
12.	சர்தார் உஜ்ஜல் சிங்	28.06.1966 முதல் 28.05.1971 வரை
13.	திரு. கோதார் தாஸ் காளிதாஸ் ஷா	27.05.1971 முதல் 15.06.1976 வரை
14.	திரு. மோகன்லால் சுகாதியா	16.06.1976 முதல் 8.04.1977 வரை
15.	திரு. பி. கோவிந்தன் நாயர், தலைமை நீதிபதி-தற்காலிக ஆளுநர்	9.04.1977 முதல் 27.04.1977 வரை
16.	திரு. பிரபுதாஸ் பட்வாரி	27.04.1977 முதல் 26.10.1980 வரை
17.	திரு. சாதிக் அலி	4.11.1980 முதல் 3.09.1982 வரை
18.	திரு. சுந்தர்லால் குரானா	3.09.1982 முதல் 15.02.1988 வரை
19.	டாக்டர். பி.சி. அலெக்சாண்டர்	17.02.1988 முதல்

(இ) தமிழ்நாட்டு முதல் அமைச்சர்கள் - 1937 ஆம் ஆண்டு முதல்

வரிசை எண்	பெயர்	காலம்
1.	திரு. சி. இராஜகோபாலாச்சாரி	14.07.1937 முதல் 29.10.1939 வரை
2.	திரு. டி. பிரகாசம்	30.04.1946 முதல் 23.03.1947 வரை
3.	திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்	23.03.1947 முதல் 6.04.1949 வரை
4.	திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா	6.04.1949 முதல் 9.04.1952 வரை
5.	திரு. சி. இராஜகோபாலாச்சாரி	10.04.1952 முதல் 13.04.1954 வரை
6.	திரு. கே. காமராஜ் நாடார்	13.04.1954 முதல் 1.10.1963 வரை
7.	திரு. எம். பக்தவச்சலம்	2.10.1963 முதல் 6.03.1967 வரை
8.	டாக்டர். சி.என். அண்ணாதுரை	6.03.1967 முதல் 3.02.1969 வரை
9.	டாக்டர். மு. கருணாநிதி	10.02.1969 முதல் 31.01.1976 வரை
10.	டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன்	30.06.1977 முதல் 17.02.1980 வரை 9.06.1980 முதல் 10.02.1985 வரை 10.02.1985 முதல் 24.12.1987 வரை
11.	திருமதி. ஜானகி எம்.ஜி. இராமச்சந்திரன்	7.01.1988 முதல் 30.01.1988 வரை
12.	டாக்டர் மு. கருணாநிதி	27.01.1989 முதல்

(ஈ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவர்கள் - 1937 ஆம் ஆண்டு முதல்

வரிசை எண்	பெயர்	காலம்
1.	திரு. புலுசு சாம்பமூர்த்தி	15.07.1937 முதல் 25.07.1942 வரை
2.	திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை	25.05.1946 முதல் 21.04.1952 வரை 6.05.1952 முதல் 15.08.1955
3.	திரு. என். கோபால மேனன்	27.09.1955 முதல் 30.10.1956 வரை
4.	டாக்டர் யு. கிருஷ்ணா ராவ்	30.04.1957 முதல் 3.08.1961 வரை
5.	திரு. எஸ். செல்லப்பாண்டியன்	31.03.1962 முதல் 14.03.1967 வரை
6.	திரு. சி. பா. ஆதித்தனார்	17.03.1967 முதல் 12.08.1968 வரை
7.	புலவர். கே. கோவிந்தன்	22.02.1969 முதல் 14.03.1971 வரை
8.	திரு. கே. ஏ. மதியழகன்	24.03.1971 முதல் 2.12.1972 வரை
9.	புலவர். கே. கோவிந்தன்	3.08.1973 முதல் 3.07.1977 வரை
10.	திரு. முனுஆதி	6.07.1977 முதல் 18.06.1980 வரை
11.	திரு. க. இராசாராம்	21.06.1980 முதல் 24.02.1985 வரை
12.	திரு. பி. எச். பாண்டியன்	27.02.1985 முதல் 05.02.1989 வரை
13.	டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்	8.02.1989 முதல்

(உ) தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பேரவைத் துணைத் தலைவர்கள்

வரிசை எண்	பெயர்	காலம்
1.	திருமதி ருக்மணி லக்ஷ்மிபதி	15.07.1937 முதல் 1.10.1945 வரை
2.	திருமதி சி. அம்மண்ண ராஜா	25.05.1946 முதல் 21.04.1952 வரை
3.	திரு. பி. பக்தவச்சலு நாயுடு	06.05.1952 முதல் 31.03.1957 வரை மற்றும் 30.04.1954 முதல் 01.03.1962 வரை
4.	திரு. கே. பார்த்தசாரதி	31.03.1962 முதல் 28.02.1967 வரை
5.	புலவர் கே. கோவிந்தன்	17.03.1967 முதல் 21.02.1969 வரை
6.	திரு. ஜி. ஆர். எட்மண்டு	26.02.1969 முதல் 05.01.1971 வரை
7.	திரு. பி. சீனிவாசன்	24.03.1971 முதல் 09.03.1974 வரை
8.	திரு. ந. கணபதி	17.04.1974 முதல் 31.01.1976 வரை
9.	திரு. எஸ். திருநாவுக்கரசு	06.07.1977 முதல் 17.02.1980 வரை
10.	திரு. பி. எச். பாண்டியன்	21.06.1980 முதல் 15.11.1984 வரை
11.	திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்	27.02.1985 முதல் 30.01.1988 வரை
12.	திரு. பி. துரைசாமி	08.02.1989 முதல்

(ஊ) தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலாளர்கள் - 1937 ஆம் ஆண்டு முதல்

வரிசை எண்	பெயர்	காலம்
1.	திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயர்	1937 முதல் 1941 வரை
2.	திரு. டி. கே. வி. ராகவ வர்மா	1946 முதல் 1951 வரை
3.	திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயர்	24.04.1952 முதல் 23.03.1955 வரை
4.	திரு. ஜே. அனுமந்தப்பா	24.03.1955 முதல் 17.10.1964 வரை
5.	திரு. சி.டி. நடராஜன்	18.10.1964 முதல் 13.05.1973 வரை
6.	திரு. எம். சண்முக சுப்ரமணியம்	14.05.1973 முதல் 30.06.1976 வரை
7.	திரு. ஜி. எம். அழகர்சாமி	01.07.1976 முதல் 30.06.1985 வரை
8.	திரு. சி. கு. இராமசாமி	01.07.1985 முதல்

(எ) தமிழ்நாடு அமைச்சரவைகள்

அமைச்சரவை

14.07.1937 - அன்றுள்ளபடி

1.	மாண்புமிகு திரு. சி. இராஜகோபாலாச்சாரியார்	-	பொது, நிதி அமைச்சர்
2.	மாண்புமிகு திரு. டி. பிரகாசம்	-	வருவாய்த் துறை
3.	மாண்புமிகு திரு. யாகூப் அசேன்	-	பொதுப்பணித் துறை
4.	மாண்புமிகு டாக்டர் பி. சுப்பராயன்	-	கல்வி மற்றும் சட்டம்
5.	மாண்புமிகு டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன்	-	பொது சுகாதாரம்
6.	மாண்புமிகு திரு. ராவ் சாகிப் வி. ஐ. முனுசாமி பிள்ளை	-	விவசாயம், கிராமப்புற வளர்ச்சி.
7.	மாண்புமிகு திரு. வி.வி. கிரி	-	தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை
8.	மாண்புமிகு திரு. எஸ். இராமநாதபிள்ளை	-	நிர்வாகம் மற்றும் பொது செய்தித் துறை.
9.	மாண்புமிகு திரு. கே. ராமன் மேனன்	-	நீதிமன்றம் மற்றும் ஜெயில்
10.	மாண்புமிகு திரு. பி. கோபால ரெட்டி	-	உள்ளாட்சித் துறை

அமைச்சரவை

26.10.1939-அன்றுள்ளபடி

1.	மாண்புமிகு திரு. சி. இராஜகோபாலாச்சாரியார்	-	பொது, நிதி அமைச்சர்
2.	மாண்புமிகு திரு. டி. பிரகாசம்	-	வருவாய்த் துறை
3.	மாண்புமிகு திரு. யாகூப் அசேன்	-	பொதுப்பணித் துறை
4.	மாண்புமிகு டாக்டர் பி. சுப்பராயன்	-	சட்டத் துறை
5.	மாண்புமிகு டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன்	-	பொது சுகாதாரம்
6.	மாண்புமிகு திரு. வி.ஐ. முனுசாமி பிள்ளை	-	விவசாயம், கிராமப்புற வளர்ச்சி
7.	மாண்புமிகு திரு. வி.வி. கிரி	-	தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை
8.	மாண்புமிகு திரு. எஸ். இராமநாதன்	-	நிர்வாகம் மற்றும் பொது செய்தித் துறை
9.	மாண்புமிகு திரு. கோபாலரெட்டி	-	உள்ளாட்சித் துறை
10.	மாண்புமிகு திரு. சி.ஜே. வர்கி	-	கல்வித் துறை

அமைச்சரவை

24.05.1946-அன்றுள்ளபடி

1.	மாண்புமிகு திரு. டி. பிரகாசம்	-	முதல் மந்திரி - பொது, உள்துறை, உணவு, நிதி அமைச்சர்
2.	மாண்புமிகு திருமதி ருக்மணி லக்ஷ்மிபதி	-	பொது சுகாதாரம், மருத்துவம்
3.	மாண்புமிகு திரு. வி.வி. கிரி	-	தொழில், தொழிலாளர், மின்சாரம், கூட்டுறவு, திட்டம் வனத்துறை
4.	மாண்புமிகு திரு. கே. பாஷ்யம்	-	சட்டம், நீதி, சிறை, சட்டமியற்றல்
5.	மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம்	-	பொதுப்பணித் துறை, பாசனம், நெடுஞ்சாலைகள்
6.	மாண்புமிகு திரு. கே. கோட்டி ரெட்டி	-	இந்து அறநிலையம், வருவாய்த்துறை
7.	மாண்புமிகு திரு. டி.எஸ். அவினாசிலிங்கம்	-	கல்வி அமைச்சர்
8.	மாண்புமிகு திரு. டானியல் தாமஸ்	-	உள்ளாட்சித் துறை
9.	மாண்புமிகு திரு. கே. ஆர். கரன்ந்த்	-	வருவாய்த் துறை
10.	மாண்புமிகு திரு. பி.எஸ். குமாரசாமி ராஜா	-	விவசாயம், மீனளம், அபிவிருத்தி துறை
